# சுயராஜ்ய சாஸ்திரம்



வினோபா பாவே

# சுயராஜ்ய சாஸ்திரம்

ஆசார்ய விநோபா பாவே

எழுதியது

மு. அருணாசலம்

மொழிபெயர்த்தது

புதுமைப் பதிப்பகம் லிமிடெட்

காரைக்குடி

முதற்பதிப்பு 7-6-1947

விலை ரூபா இரண்டு

உரிமை பதிவு செய்யப்பெற்றது

Printed at the Sadhu Press, Royapettah, Madras
P. I. C. No. M. S. 115
for Pudumai Padippaham Ltd., Karaikudi
P. I. C. No. R. 11—C. 2000—15-5-47

# முன்னுரை

ஆசார்ய விநோபா பாவே அவர்களை நம் மிந்திய நாடு நன்ருய் அறிந்திருக்கிறதென்று சொல்ல முடியாது. சமீபத்தில் நடந்த யுத்தத்தில், இந்திய சர்க்காரின் யுத்தக் கொள்கையை எதிர்க்கும் முறையில் தனிப்பட்டோர் சத்தியாக்கிரகத்தை காந்தியடிகள் தொடங்கியபொழுது, முதல் சத்தியாக்கிரகியாக அவர் விநோபா அவர்களைத் தேர்ந்தெடுத்தார். காந்தியடிகளின் ஆசிரமத்தில் பழகியவர்களுக்கு மட்டுமே விநோபா அவர்களைக் குறித்து ஓரளவு தெரியுமேயன்றி, பொதுமக்களுக்கு அதிகமாய் ஒன்றும் தெரியாது. எனவே, அவரை அறிமுகப்படுத்தும்பொருட்டு, 20-10-1940 இல் வெளியான ஹரிஜன் இதழில் காந்தியடிகள் பின்வருமாறு எழுதினுர் :

" 1916ஆம் வருஷம் தென்னுப்பிரிக்காவிலிருந்து நான் இந்தியா திரும்பியபின், கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த விநோபா, அந்தப் படிப்பை விட்டார். சம்ஸ்கிருத மொழியில் இவர் நிறைந்த புலமையுடையவர்; சபர்மதி ஆசிரமம் தொடங்கிய காலத்திலேயே இவர் அதில் சேர்ந்தார் ; ஆசிரமத்தின் ஆதி அங்கத்தினரில் இவரும் ஒருவர். தம் கல்வியை விருத்தி செய்துகொள்ளும் நோக்கத்துடன், ஆசிரமத்தில் ஒரு வருஷகாலம் விடுமுறை பெற்று, மேலும் சமஸ்கிருதம் பயிலச் சென்ருர். எத்தனை மணிக்கு ஆசிரமத்தைவிட்டுப் புறப்பட்டுச் சென்ருரோ, சரியாக ஒரு வருஷம் கழித்து அதே

மணி நேரத்தில், எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமலே இவர் ஆசிரமத்தில் வந்து சேர்ந்துகொண்டார். அன்று இவர் திரும்பி வரவேண்டிய நாள் என்பதைக்கூட நான் மறந்துவிட்டேன். தோட்டி வேலை முதல் சமையல் வேலை வரையில், ஆசிரமத்தில் நடைபெற்ற எல்லா ஊழியங்களிலும் இவர் கலந்து கொண்டு வேலை செய்திருக்கிறார். இவருக்கு ஞாபகசக்தி மிகவும் அதிகம்; இயல்பாகவே எதையும் கற்றுக்கொள்ளும் தன்மை வாய்ந்தவர்; ஆயினும், தம் வாழ்நாளில் பெரும் பகுதியை நூற்றல் தொழிலில் செலவிட்டிருக்கிறார்; இத்தொழிலில் இவரளவு நிபுணர் வேறு யாருமே இல்லை யென்று கூறுலாம். நமது கிராமங்களில் தரித்திரம் குடிகொண்டிருக்கிறது; வாழ்க்கை உயிரற்றுப் போய்விட்டது. இந்தத் தரித்திரத்தைப் போக்குவதற்கும், வாழ்க்கையில் புத்துயிரளிப்பதற்கும், பிரதானமான தொழில் ஒன்று வேண்டும்; நூல் நூற்றலாகிய தொழிலை எல்லோரும் மேற்கொள்வதுதான் இதற்கான வழி என்பது விநோபாவின் திட்டமான நம்பிக்கை. இவர் பிறவியிலேயே ஆசிரியராகுந் தகுதியுடையவர்; கைத்தொழில்மூலம் கல்விபோதிப்பதற்கான புதுமுறைக் கல்வித் திட்டத்தை ஆசாதேவி வகுத்தபோது, அவருக்கு இவர் பேருதவி செய்திருக்கிறார். நூல் நூற்றலைக் கைத்தொழிலாக வைத்துக் கல்வி போதிப்பதற்கென்றே ஒரு பாடபுத்தகம் எழுதியிருக்கிறார். இவ்விதம் புதிய முறையில் யாரும் இதுவரையில் நூல் எழுதியதேயில்லை. கல்வி போதனைக்கேற்ற கைத்தொழில் நூல் நூற்றல்தானென்றும், சிறந்த பயன் விளையத்தக்க முறையில் ஆதாரக் கல்வி போதிப்பதற்கு இத்தொழிலையே மூலமாய்க் கொள்வது

எளிதென்றும், இதைக் கேலி செய்பவர்கள் கூட உணரும்படி செய்திருக்கிறார். தக்ளி நூற்கும் முறைகளைப் பூரணமாய்த் திருத்தி, தக்ளிக்குள்ள முழுச் சக்தியையும் வெளிப்படுத்தி யிருக்கிறார். குற்றமில்லாமல் சிறந்த முறையில் நூற்பதில் இவருக்கிணையானவர்கள் இந்தியா முழுவதிலும் வேறு யாருமில்லை.

இவர் தமது உள்ளத்தில் எவ்விதமான தீண்டாமைக்கும் இடமில்லாது துடைத்தவர். வகுப்பு ஒற்றுமை நிலவவேண்டுமென்பதில் எனக்கு எவ்வளவு ஆத்திரமுண்டோ அவ்வளவு ஆத்திரம் இவருக்கும் உண்டு. இஸ்லாம் மதத்தின் உன்னதமான தத்துவங்களை அறியும் பொருட்டு, ஒரு வருஷ காலம் குரான் மூல நூலைப் படித்தார். இதன் பொருட்டு அரபிமொழியும் கற்றார். தம் மருகே வாழும் முஸ்லிம் மக்களோடு தினசரி வாழ்க்கையில் உண்மையான தொடர்பைப் பெருக்கி வருவதற்கு, இவ்விதப் படிப்பு அவசியமானதென்பது இவர் அபிப்பிராயம்.

இவருடைய சிஷ்யகோடிகளும் தொண்டர்களும் மிகப்பலர். இவர் உத்தரவிட்டால், எவ்விதத் தியாகத்துக்கும் அவர்கள் தயாரயிருப்பார்கள். குஷ்டரோகிகளுக்குச் சேவை செய்வதற்கென்றே ஓர் இளைஞர் தம் வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருக்கிறார்; இதற்கும் விநோபாவே பொறுப்புடையவர். வைத்தியத் தொழிலில் இத்தொண்டருக்கு முன்னமே சிறிதும் பழக்கமில்லாதிருந்தபோதிலுங் கூட, மற்றதெதையும் மறந்து, வைத்தியமொன்றிலேயே கருத்தூன்றி உழைத்ததன் பயனாய், இவர் இன்று குஷ்டரோகிகளுக்குச் சிகிச்சை செய்வதில் நிபுணராகி, இதற்கென்றே பல மருத்துவசாலை

களை நடத்தி வருகிறுர். இவரது சேவையின் பயனுய், நூற்றுக்கணக்கானவர்கள் இன்று சொஸ்தமடைந்திருக்கிறுர்கள். குஷ்டரோக சிகிச்சைபற்றி மராத்திமொழியில் இவர் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறுர்.

வர்தாவிலுள்ள மகிளாசிரமம் என்ற பெண்களில்லத்தில் பல வருஷகாலம் விநோபா அதிபராயிருந்தார். தரித்திர நாராயண சேவையில் தாம் கொண்ட பக்தி காரணமாக, முதன் முதல் வர்தாவுக்கருகிலுள்ள ஒரு சிறு கிராமத்தில் போய் வாழலானுர். இப்போது அதையும் விட்டு அப்பாற் சென்று, வர்தாவிலிருந்து ஐந்து மைல் தூரத்திலுள்ள பவுனுர் என்ற கிராமத்தில் வசிக்கிறுர். இவரிடம் பயின்ற மாணவர்கள் மூலமாக, நாட்டுப்புற மக்களோடு இவருக்குத் தொடர்புண்டு.

இந்தியா அரசியல் சுதந்திரம் பெறவேண்டுமென்பதில் இவருக்குப் பூரண நம்பிக்கையுண்டு. மக்கட் சரித்திரத்தை மிகவும் நுட்பமாக இவர் உணர்ந்திருக்கிறுர். எனினும், கதரை, அதாவது கையால் நூற்றுக் கையால் நெய்த துணியை உபயோகிப்பதை மூல தத்துவமாகக் கொண்ட நிர்மாணத் திட்டமில்லாமல், நம் கிராமங்களுக்கு உண்மையான சுதந்திரம் ஒருநாளுங் கிட்டாது என்பது இவருடைய திடமான நம்பிக்கை. இவருடைய வாழ்க்கையில் எல்லா அம்சங்களையும் ஊடுருவி நிற்பது, அஹிம்சைத் தத்துவம். இத் தத்துவத்துக்கு எல்லா விதத்திலும் பொருத்தமான புற அடையாளம் ராட்டை என்றே இவர் கருதுகிறுர். முந்திய சத்தியாக்கிரகப் போராட்டங்களில் இவர் நேரிடையாகக் கலந்துகொண்டவர். அரசியல் மேடை

யில் இவர் ஒருபோதும் முன்வந்து நிற்பது கிடையாது. அரசியல் மேடையில் வேலை செய்வதென்று வந்தோர் கூட்டம் இன்று மிகவும் அதிகமாகிவிட்டதென்றும், அந்த வேலையைவிட, சத்தியாக்கிரகத்தை அடிப்படையாக வைத்து, எவ்விதப் படாடோபமும் இல்லாமல் நிர்மாணவேலை செய்வதே சிறந்த பலனுடையது என்றும், விநோபாவும் இவருடன் உழைப்போர் சிலரும் அபிப்பிராயப்படுகிறார்கள். நிர்மாண வேலையில் மனப்பூர்வமான நம்பிக்கையும் நிறைந்த அனுபவமும் இல்லாவிட்டால், சாத்துவிகச் சட்டமறுப்பென்பது முடியாதென்று இவர் உறுதியாய் எண்ணுகிறார்.''

"விநோபா நம் ஆசிரமத்தில் வந்திருப்பது, நம்மிடம் எதையும் கற்றுக்கொள்வதற்காக அன்று; நமக்குக் கற்பிப்பதற்காகவே அவர் இங்கு வந்திருக்கிறார்" என்று காந்தியடிகள் அவரைக் குறித்து மற்றொரு சமயம் கூறியதும் இங்கு அறியத்தகும்.

விநோபா, பம்பாய் மாகாணத்திலுள்ள கொங்கண ஜில்லாவில் பிறந்த மகாராஷ்டிரப் பிராமணர்; பரோடாவில் வளர்ந்தார்; கல்லூரியில் இரண்டு வருஷம் படித்துவிட்டு, பின் சம்ஸ்கிருதம் கற்று ஞான சாஸ்திரங்களைப் பயிலும் பொருட்டுக் காசிக்குச் சென்றார். அரசியல்துறை பற்றியவரையில், அவர் மனம் புரட்சியில் சென்ற போதிலுங்கூட, ஞானநாட்டம் கொண்டவரானமையால், சாத்துவிகமான புரட்சியே அவரிடம் அமைந்தது. இது, தானாக அவரைக் காந்தியடிகளிடம் கொண்டுபோய்ச் சேர்த்தது. சிலகாலம்

காந்தியடிகளிடம் சபர்மதி ஆசிரமத்தில் இருந்து விட்டுப் பின்னர் வர்தா அடைந்து அங்கு ஓர் ஆசிரமம் அமைத்து அதில் இருந்து வந்தார். பின்னர் அதையும் விட்டுநீங்கி, சிறைக்குச் செல்லாத காலமெல்லாம், வர்தா அருகிலுள்ள பவுனர் என்ற சிற்றூரில் தனியே இருந்து கிராமசேவை செய்து வருகிறார். பல மாணவர்களை வைத்து நூற்றல் தொழில் சம்பந்தமான ஆராய்ச்சிகளும் சோதனைகளும் நடத்தி வருவதே அவருடைய பொழுதுபோக்கு.

இவ்விதம் அரசியல் உலகில் அவர் செய்த சேவையைச் சிலர் அறிந்திருந்த போதிலும், எழுத்துலகில் அவர் செய்துள்ள சேவையை அறிந்தோர் தொகை மிகவும் குறைவு. எழுதிய நூல் அனைத்தையும் அவர் தம் தாய்மொழியான மகாராஷ்டிர மொழியிலேயே எழுதி யிருக்கிறார். அரசியல், சமயம், நூற்றல்தொழில் முதலான பல துறைகளில் அவர் நூல்கள் எழுதியிருக்கிறார். யாவும் ஹிந்தியில் மொழிபெயர்க்கப்பெற்றுள்ளன. சம்ஸ்கிருதத்திலும் அவர் நிறைந்த புலமையுடையவர். பகவத்கீதையைப் பாமர மக்களும் அறிய வேண்டும் என்ற நோக்கத்தோடு, அந்நூலை அதே யாப்பில் அழகான செய்யுள் வடிவத்தில் மகாராஷ்டிர மொழியில் அவர் பாடியிருக்கிறார்; **கீதாயி** என்ற பெயரோடு வழங்கும் அந்த நூலை மகாராஷ்டிர மக்கள் பெரிதும் போற்றி வருகிறார்கள். இம்மொழிகளேயன்றி, ஹிந்தி, குஜராத்தி, வங்காளி ஆகிய வடநாட்டு மொழிகளில் அவருக்குச் சிறந்த பயிற்சியுண்டு.

ஹிந்துஸ்தானியே இந்தியப் பொதுமொழி என்றும், தென்னிந்திய மக்கள் அனைவரும் ஹிந்துஸ்தானி மொழியறிவு பெறுவது இந்திய ஒருமைக்கு அவசியம் என்றும் காந்தியடிகள் அடிக்கடி கூறிவரும்போது, வட இந்திய மக்கள் தென்னிந்திய மொழி ஒன்றேனும் பயில வேண்டும் என்று கூறுவதுண்டு. இக்கூற்றை அப்படியே தம் வாழ்க்கையில் கடைப்பிடிப்பவர் விநோபா. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்ற நான்கையுமே அவர் நன்ருய்ப் பயின்றிருக்கிருர். வேலூர்ச் சிறையிலிருந்த போது, தமிழை நன்ருய்ப் பயின்ருர். தமிழ் நூல்களிடத்தில், சிறப்பாகப் பாரதியார் பாடல்களிடத்தில், அவருக்கு மிக்க ஈடுபாடு உண்டு. பாரதியார் பாடல்களை உரத்த குரலில் அவர் படிக்கவும் பாடவும் கேட்கும்போது, நமக்கெல்லாம் மிக்க மனவெழுச்சி பிறக்கும்.

* * * *

காந்தியத்தில் தோய்ந்த அஹிம்சா வாதிகளில் விநோபா தலைசிறந்தவர். அஹிம்சை சத்தியம் என்ற லக்ஷ்யங்களை அவர் தமது மனம் மொழி மெய் ஆகிய திரிகரணங்களிலும் கொண்டு வாழ்பவர். எனவே, அவர் எழுதிய **சுயராஜ்ய சாஸ்திரம்** என்ற இந்தச் சிறு புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்கள், அரசியல் தத்துவ உலகத்தில், காந்தியத்தையே விளக்குகின்றன என்று திட்டமாய்க் கொள்ளலாம்.

இந்த அணுக்குண்டு யுகத்தில், நாகரிகம் படைத்த தேசங்கள் யாவும், சர்வதேச சகோரத்

வம், சுதந்திரம், குடியரசு என்பவற்றை நிலை நாட்டப்போகிறோம் என்று சொல்லிக்கொண்டு, கொடுமையான ஹிம்சை முறைகளையே மேற்கொண்டு வருகின்றன. இத்தகைய உலகத்தில், சாந்தியும் சகோதரபாவமும் உண்மையான சுயாட்சியும் இன்பமும் நிலவுவதற்கு வழி முற்றிலும் வேறானது என்பதை இச்சிறு நூல் தெளிவாய்க் காட்டுகிறது. இது கூறும் உபதேசம், நமது புராதன நாகரிகத்தின் வடித்தெடுத்த சாரம் என்று சொல்லலாம். 'ஸ்வாத்யாய ப்ரவசனம்' என்று உபநிஷத்துக்களில் கூறியுள்ளதுபோல, இது அஹிம்சா உபதேசம் அனுஷ்டானம் என்பவற்றையே வற்புறுத்திச் சொல்கிறது. இதன் முதலிரண்டு பிரசினைகள் அல்லது அத்தியாயங்கள் அரசியலையும் ஆட்சி முறைகளையும் பற்றிச் சுருங்க உரைக்கின்றன. பின்வரும் பிரசினைகள், சத்தியாக்கிரகத்தின் தத்துவங்களையும், அஹிம்சையை ஆதாரமாய்க் கொண்டு ஆட்சி முறையை அமைக்க வேண்டிய விதத்தையும் விவரிக்கின்றன. ஆசிரியரின் ஆழ்ந்த ஞானம், தெளிந்த கருத்து, சீல வாழ்க்கை, தொண்டு, தியாகம் ஆகிய அருங் குணங்களின் விளக்கத்தை இந்நூலெங்கும் காண்கிறோம். உண்மையான சுயராஜ்யம் எது என்பதையும், அது எவ்வாறு கைகூடும் என்பதையும் தெளிவாய் உரைக்கும் இந்நூலைச் சாஸ்திரம் என்று சொல்வது, எல்லா வகையிலும் பொருந்துவதாகும்.

நாகபுரிச் சிறையில் வினோபா இந்த நூலை மகாராஷ்டிர மொழியில் எழுதினார். இது

1942இல் வெளிவந்தபோது, அவர் எழுதிய பின்வரும் முகவுரையோடு வெளியாயிற்று:

சுயராஜ்யத்தின் தத்துவம்பற்றிய சில கருத்துக்கள், நாகபுரிச் சிறையில் நான் இருந்தபோது, என் மனத்துள் தோன்றின. அவற்றைச் சிறிது ஒழுங்குபடுத்தி இந்த நூல் வடிவத்தில் அமைத்திருக்கிறேன். இதை நான் சொல்லச் சொல்ல, அன்பர் ஸ்ரீ பியாணி மிக்க விருப்பத்தோடு எழுதி வந்தார். இந்நூலை வெளியிடும்படி அவர் என்னை வற்புறுத்தியிராவிட்டால், இப்போதைக்கு இது இந்த வடிவத்தில் வெளியாகியிராது.

ராஜ்யம்(ஆட்சி) என்பது வேறு, சுயராஜ்யம் (சுயாட்சி) என்பது வேறு. ஹிம்சை மூலம் ராஜ்யம் கிடைக்கும். ஆனால் அஹிம்சையில்லாமல் சுயராஜ்யம் பெறமுடியாது. ஆதலால், அறிஞர்கள் ராஜ்யத்தை விரும்புவதில்லை. சுயராஜ்யம் பெற வேண்டும் என்றே இவர்கள் எல்லோரையும் தூண்டி வருகிறார்கள். சமஸ்கிருதத்தில் இரண்டு பிரசித்தமான வாக்கியங்கள் உள்ளன: 'ந து அஹம் காமயே ராஜ்யம்'; 'யதேமஹி ஸ்வராஜ்யே.' (நான் ராஜ்யத்தை விரும்பவில்லை, ஸ்வராஜ்யம் பெறுவதில் நாம் முயல்வோமாக என்பதே இவ்வாக்கியங்களின் பொருள்.) ராஜநீதி (அரசியல்) பற்றிய வரையில், எதை விட வேண்டும், எதைத் தேட வேண்டும் என்பதற்கு இவ்வாக்கியங்களே அவ்வறிஞர்களுக்குத் தக்க கோஷங்களாக அமைகின்றன.

சுயராஜ்யம் (ஸ்வராஜ்யம்) என்ற தொடர் வேதத்தில் காணப்படுகிற ஒரு பரிபாஷைத் தொடராகும். அதற்குப் பின்வருமாறு வியாக்கியானம் சொல்லப்பட்டுள்ளது. சுயராஜ்யம் என்றால் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட ராஜ்யம் (ஆட்சி) என்று பொருள்; அதாவது இந்த ராஜ்யம் அல்லது ஆட்சி, தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும், தம்முடைய சொந்த ஆட்சி என்றே

தோற்றும்; எனவே, இது எல்லோருடைய ஆட்சியுமாகும்; இதுவே ராமராஜ்யம் என்பது.

சுயராஜ்யசாஸ்திரம், நித்தியமும் வளர்ந்துவருவது. இதன் முறைகள், காலத்தையும் இடத்தையும் ஒட்டி, எப்போதும் மாறிக்கொண்டு வரும். எனினும், இவற்றின் மூலதத்துவம், என்றும் சாசுவதமானது. சாசுவதமான தத்துவங்களை ஆதாரமாய்க் கொண்டே, சுயராஜ்யத்தின் ஸ்தூலமான லக்ஷணம் (ரூபரேகை) இங்குச் சொல்லப்பட்டுள்ளது. இதை எவ்வளவு வேண்டுமாயினும் விரித்துக் கொள்ளலாம். எவ்வளவு விரிக்கலாம், எவ்வளவு விரித்துச்சொல்வது அவசியம் என்பதை எதிர்காலமே நிர்ணயிக்குமென்று சொல்வதோடு, நான் இப்போது நிறுத்திக்கொள்ளுகிறேன்.

அதே வருஷம் இந்நூல் ஹிந்தியில் மொழி பெயர்த்து வெளியிடப் பெற்றது. பின்னர் 1945 இல் டாக்டர் பரதன் குமரப்பா அவர்களால் இது ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் பெற்று வெளியாயிற்று. இப்போது, ஆசிரியர் அனுமதியுடன் இந்நூல் தமிழில் வெளியாகிறது. ஹிந்தியிலிருந்து மொழிபெயர்க்கப் பெற்றமையால், இத்தமிழ்ப் பதிப்பில் வடமொழிச் சொற்கள் சற்று அதிகமாகவே இருத்தல்கூடும்.

1946 - 47 ஆகிய காலத்தில் நான் சேவா கிராமத்தில் தங்கியிருந்தபோது இந்நூலைத் தமிழில் மொழிபெயர்த்தேன். அங்கிருந்து அடிக்கடி பவுனார் சென்று மகரிஷியான விநோபாவைக் கண்டு உரையாடவும் அவர் எழுதிய இந்தச் சுயராஜ்ய சாஸ்திரத்தை மொழிபெயர்க்கவும் கிடைத்தது என் பாக்கியமென்றே கருதுகிறேன்.

சேவாகிராமம்
14-4-1947

மு. அருணாசலம்

# பொருளடக்கம்


பக்கம்

முன்னுரை ... ௩

சுயராஜ்ய சாஸ்திரம் ... 1

## நூலின் சாரம்

### முதல் பிரசினை

1. அரசியற் பிரசினை என்பது என்ன ? ... 1
2. அரசியற் பிரசினைகளுக்கு இன்று கற்பிக்கிற வியாக்கியானம் ... 3
3. அரசியற் பிரசினையின் இயல்பான பொருள் ... 5
4. இயல்பான மூன்று ஆட்சி முறைகள் ... 6
5. இந்த மூன்று ஆட்சி முறைகளும் அமையக்கூடிய பிரகாரங்கள் ... 7
6. வேறு ஆட்சி முறைகள் சாராம்சத்தில் இவற்றுள் அடங்கும் ... 10
7. அனைவராட்சி எங்குமே இல்லை : அதன் சொரூபம்... 10
8. ஒருவராட்சி இன்றுவரை உள்ளது : அதன் சொரூபம் 12
9. சிலராட்சி : இதற்கு இன்றுள்ள சொரூபங்கள் ... 13
10. பலராட்சி : ருஷ்ய ஆட்சி முறை ... 14

### இரண்டாவது பிரசினை

11. மக்கள் வாழ்க்கையோடு ஒன்றியவர்கள் ஆட்சி முறைகள் வாழ்க்கைக்குரிய சாதனங்கள் ... 17
12. ஆட்சிமுறையின் நான்கு அம்சங்கள் ... 19
    (௧) வாழ்க்கையில் சேவை புரியும் நோக்கம் ... 19
    (௨) மக்களின் கூட்டுறவு ... 19
    (௩) சமர்த்தர்கள் நிர்வாகம் செய்தல் ... 20
    (௪) ஒருவரே முடிவான அதிகாரம் வகித்தல் ... 20

13. இந்த அம்சங்களின் பலவகையான விசேஷத் தன்மைகள் ... 20
(க) வாழ்க்கையில் சேவைபுரியும் நோக்கம் ... 20
(உ) மக்களின் கூட்டுறவு ... 21
(ங) சமர்த்தர்கள் நிர்வாகம் செய்தல் ... 22
(ச) ஒருவனே முடிவான அதிகாரம் வகித்தல் ... 23
14. தேசங்களுக்குள் விரோதமின்மையும் சகோதர பாவமும் ... 23
15. ஆட்சிமுறையின் ஆதர்சங்கள் ... 24
16. நாஸிஸம், பாஸிஸம், ருஷ்யப் பொது உடைமை வாதம் ஆகியவற்றின் சொரூபம் : இவை வெறும் பிரமை ... 25
17. இந்த வாதங்களைக் குறித்த ஆராய்ச்சி : இவைகளில் தப்பாயுள்ள கொள்கைகள் ... 28
18. மாஜினிகாலத்து இத்தாலிய நாட்டில் நிலவிய தீங்கு : மக்களைப் பாதுகாப்பது என்ற பெயரால் ராணுவ வர்க்கம் அதிகாரத்துக்கு வருதல் ... 31
19. பொதுவுடைமை மற்ற இரண்டையும்விடக் கவர்ச்சி மிக்கது ; விருத்தியாகக்கூடியது ... 33

## மூன்றாவது பிரசினை

20. குறைபாடில்லாத ஆட்சிமுறைக்குரிய நான்குவித லக்ஷணங்கள் ... 35
21. பொதுஜன அபிப்பிராயமானது சமர்த்தர்களைப் பொதுஜன சேவையில் செலுத்த வல்லதாக இருத்தல் வேண்டும் ... 37
22. பொதுஜன அபிப்பிராயத்தை அனுசரித்து நடக்கும் ஆட்சிமுறையிலுங்கூடக் கட்டுப்பாட்டுக்கு இடமிருக்கும் ... 38
23. லோபியும் திருடனைப்போலத் தண்டிக்கத் தக்கவன்... 39
24. செல்வத்தின் பிரயோசனம் ... 40
25. உதாரணம் : ஆசிரியவர்க்கம், பண்டும் இன்றும் ... 41
26. கொடுப்பதனால் செல்வம் பெருகுகிறது ... 43
27. ஈவதில்தான் மனிதனுக்கு இன்பம் பிறக்கிறது : ஆனால், தன்னுடையது என்ற உரிமை இதற்குப் பாதகம் செய்கிறது ... 44

28. குடும்பத்திலுள்ள பொருளாதாரத் தத்துவத்தைச் சமூகத்திலும் பிரயோகிப்பது அரசாங்கத்தின் கடமை. குருடனும் முடவனும் என்ற நியாயம்... 45
29. கிராமங்கள் சுயம்பூரணமா யிருக்க வேண்டும் : கிராமக் கைத்தொழில்கள் இதைச் செய்யும் ... 47
30. சமதர்மவாதிகளின் திட்டம் அபாயகரமானது ... 50
31. அன்னியோன்யச் சார்பு என்பது சிக்கலில்லாமல் எளிதா யிருக்கவேண்டும் ... 51
32. சுயம் பூர்ணமான அரசு, மக்களினம் என்பவை பற்றிய விசால நோக்கு ... 52
33. ராஜ்யம் எப்போதும் மக்கள் வாழ்வையொட்டியது ... 54
34. இதன்பொருட்டு, சம்ரக்ஷணமானது சத்தியாக்கிரக ரூபத்தில் இருப்பது அவசியம் ... 55
35. வாஸ்தவமான ஒத்துழைப்பும் ஒத்துழையாமைக்குத் தகுதியும் ... 56
36. ஒத்துழையாமை, சட்ட மறுப்பு என்பவைபற்றிப் பொதுமக்களுக்கு அறிவூட்டுவதன் அவசியம் ... 58
37. சமூக வாழ்க்கையில் ஒத்துழையாமைக்குரிய ஸ்தானம் நித்தியமானது ... 59
38. ஒத்துழையாமைக்கான பயிற்சி எந்த திசை நோக்கிச் செல்லவேண்டும் : விதிக்கும் கொள்கைக்குமுள்ள பாகுபாடு ... 60
39. சரித்திரத்தில் அஹிம்சையின் வெற்றி : இந்தியாவின் உதாரணம் ... 62
40. மக்கள் நன்மக்கள் ஆளும் மக்கள் ஆகிய மூன்று திறத்தாரும் ஒன்று சேர்வதற்கு அஹிம்சையே அடிப்படை ... 64
41. அஹிம்சையொன்றே தீயோர் மனத்தில் அச்சம் விளைவிக்க வல்லது ... 65
42. உழைப்பின் மதிப்பு ... 67
43. சேவையின் பணமதிப்பு என்ற கருத்து தப்பானது... 68
44. குடும்ப நியாயம் : சக்திக்கேற்ற உழைப்பும், அதற்குரிய பிரதிபலனும் அனைவருக்கும் ஒத்த பாதுகாப்பும் ... 69
45. சாராம்சம் ... 71

46. ஒப்பந்தக் கூலி உதாரணம் : உழைப்பிலுள்ள பேதத்துக்குச் சமாதானம் ... 71
47. கூட்டுப் பொறுப்புத்தான் சிறந்த தூண்டுகோலா யிருக்கமுடியும் ... 74
48. இந்த நோக்குடன் பார்த்தால், ஹிந்து சமயத்தி லுள்ள தொழில்பற்றிய சாதிப்பிரிவு சிறந்த முறையாகும் ... 75
49. தத்துவமே பிரதானம், வெளி உருவமன்று ... 77

## நான்காவது பிரசினே

50. ஹிம்சையைக் கைக்கொண்ட முறைகள் யாவும் யுத்தத்தில் முடிகின்றன ... 80
51. இதிலிருந்து கிரமமாய்ப் பிறப்பது அஹிம்சைதான் ... 82
52. ஒட்டிக்கு இரட்டி என்பதற்கு அஹிம்சையில் இட மில்லை ... 84
53. தனிப்பட்டோர் அஹிம்சையைக் கடைப்பிடிக்க முயல்வதைவிட, நாடு முழுவதும் கடைப்பிடிக்க முயல்வது ஒருவகையில் எளிதானது ... 85
54. பயிற்சியும் அமைப்பும் தியாகமும் அஹிம்சைக்கும் வேண்டியவை ... 86
55. அஹிம்சா நெறி என்பது மக்களியல்பைக் கடந்த தன்று ... 89

## ஐந்தாவது பிரசினே

56. வேறு துணை யில்லாவிடினும், அஹிம்சை வழி யொழுகும் நாட்டுக்குச் சர்வஜன அனுதாபம் என்ற வஜ்ர கவசம் உண்டு ... 90
57. அஹிம்சை வழியொழுகும் நாடு அச்சமற்றது ... 92
58. உறுதி யின்மையானது தூர்பல அஹிம்சையின் லக்ஷணமாகும் ... 94
59. உள்நாட்டு அராஜகமோ அயல்நாட்டு ஆக்கிரமிப்போ ஏற்படுமென்ற அச்சம் இல்லாத அஹிம்சா நெறி ... 95
60. லக்ஷ்ய அஹிம்சா நெறியில் பொலீஸார் இருக்க மாட்டார்கள், தொண்டர் படையே இருக்கும் ... 99

# சுயராஜ்ய சாஸ்திரம்

## முதல் பிரசினை

*கேள்வி :* அரசியற் கொள்கைகள் இன்று உலகத்தில் எத்தனை இருக்கின்றன? அவை என்ன விதமாயிருக்கின்றன?

*விடை :* முதலாவதாக, தத்துவம் என்ற அளவில், அரசியற் கொள்கைகள் எத்தனை விதமாக இருக்கமுடியும் என்று பார்ப்போம். இன்று அனுஷ்டானத்தில் உள்ள கொள்கைகள், தத்துவ ரீதியாக எத்தனைக் கொள்கைகள் இருக்கமுடியுமோ அத்தனையும் இருக்கலாம், அல்லது அவற்றுக்குக் குறைவாக இருக்கலாம்; அவற்றுக்கு அதிகமாக இருக்கமுடியாது. அரசியற் கொள்கைகள் எத்தனை விதம் என்று சொல்லுமுன், அரசியற் கொள்கை என்றால் என்னவென்பதை முதலிற் சொல்லவேண்டும்.

1. அரசியல் பிரசினை என்பது என்ன?

உலகத்தில் ஒரே ஒரு மனிதன் இருந்திருந்தால், அவனிடத்தில் அரசியற் கொள்கை என்ற பிரசினையே எழுந்திராது. தன்னுடைய ஜீவனத்தை நடத்துவதற்கு, உலகத்தில் காணும் பொருள்களை எந்த அளவுக்கு உபயோகிப்பது, எப்படி உபயோகிப்பது என்பதே அவனுடைய கவலையாயிருந்திருக்கும்.

ஆனால், மனிதன் இப்படித் தனியனாயில்லை, சமூகமாய்ச் சேர்ந்தே வாழ்கிறான். ஆகவே, பௌதிகப் பிரசினை யொன்று, சமூகப் பிரசினை யொன்று என இரண்டு பிரசினைகள் அவனிடத்தில் எழுகின்றன. பிரகிருதியைக் கட்டுப்படுத்தித் தன் ஜீவனத்தை நடத்துவது எப்படி என்பது பௌதிகப் பிரசினை; தன் இனத்தவருடன் எவ்விதத் தொடர்பு பூண்டு வாழ்வது என்பது சமூகப் பிரசினை. இரண்டாவது பிரசினையும், முன்னதைப் போலவே முக்கியமானது. இவ்விரண்டாவது பிரசினையிலிருந்தே ராஜநீதி அல்லது அரசியல் என்ற பிரசினையும் உதிக்கிறது.

பரஸ்பர சமூகத் தொடர்பு என்பதில், நிலம் முதலான பலவகைச் செல்வங்களாகிய சொத்தை மனிதர்களிடையே எவ்விதம் பங்கிட்டுத் தருதல் வேண்டும் என்ற கேள்வி முதன்முதலாக எழுகிறது. இதற்கடுத்தபடியாக, சமூகத்தில் நடைபெறும் பரஸ்பர விவகாரங்கள் சம்பந்தமாய் மக்கள் மனத்தில் சுகதுக்கங்கள் சமநிலையில் அமைதல் அல்லது திருப்தி நிலவுதல் எப்படி என்ற கேள்வி எழுகிறது. இவ்விரு கேள்விகளுள், முதற் கேள்வியை முக்கியாம்சத்தில் அரசியற் பிரசினை என்றும், மற்றதைச் சமூகப் பிரசினை என்றும் சொல்கிறோம். எனினும், இவற்றைத் தனித்தனியே பிரிக்கவியலாது. பொதுவாய்க் கூறுமிடத்து, இவை இரண்டுமே அரசியல் என்பதனுள் அடங்கி விடுகின்றன. மேற்கூறியவற்றைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்: அரசியல் என்பது, மக்களில் ஒரு சமூகத்தினுள் அல்லது பல சமூகங்களினிடையே அமைகிற ஏற்பாடாகும்.

க. மனித சமூகத்தில், மேல் வகுப்பு, நடுத்தர வகுப்பு, தாழ்ந்த வகுப்பு என்று மூன்று பிரிவுகள் காரண மில்லாமலே ஏற்பட்டுள்ளன. இந்தப் பிரிவுகளுக்கிடையே பரஸ்பரம் எவ்வித மான தொடர்பை வகுப்பது என்பதே அரசியல் என்பதற்கு இன்று கற்பித்துள்ள பொருளாகும்.

2. அரசியற் பிரசினைகளுக்கு இன்றுகற்பிக்கிற வியாக்கியானம்

உ. ஹிந்து சமூகத்தில், அவரவர் செய்துவந்த தொழிலை யொட்டி, வேறு காரணமில்லாமலே சாதிப்பிரிவுகள் ஏற்பட்டுள்ளன. இந்தச் சாதிகளுக்குள் பரஸ்பரம் எவ்விதத் தொடர்பை வகுப்பது என்பது, அரசியலுக்கு இன்று கற்பித்துள்ள மற்ருெரு பொருளாகும்.

ந. உலகத்தில் இன்று சிலரிடம் ஏராளமான செல்வம் குவிந்திருக்கிறது; மற்றவர்களிடம் வறுமை குடி கொண்டிருக்கிறது. இது காரணமாக, செல்வர் ஒரு வகுப்பென்றும், ஏழைகள் மற்ருெரு வகுப்பென்றும் கற்பனை செய்கிருர்கள்; இவ்விரு வகுப்புக்களினிடையே பரஸ்பரம் எவ்விதத் தொடர்பைவகுப்பது என்பது, அரசியலுக்கு இன்று கற்பித்துள்ள மூன்ருவது பொருளாகும்.

இம்மூன்று பொருளும், அடிப்படையில் இல்லாமல் கற்பனையாக வந்த பாகுபாட்டின்மீது எழுந்தவை யாதலால், கற்பித்த பொருள் அல்லது செயற்கையான பொருள் என்று இவற்றைக் கூறுகிருேம். மேல், நடு, கீழ் என்று வகுப்பெதுவுமில்லை; வாஸ்தவத்தில் இது கற்பனையே. மூன்று, அல்லது நான்கு, அல்லது இன்னும் அதிகம் என்று சொல்லு

கிற சாதிப் பிரிவும் நாமாகச் செய்து கொண்டதே. ஆகவே, ஓர் அரசியற் கொள்கையானது இப் பாகுபாடுகளை ஆதாரமாய்க் கொண்டிருந்தபோதிலுங்கூட, இவை அடிப்படையில் இல்லையாதலால், அக் கொள்கையும் காரணமின்றி எழுந்ததாகும். செல்வருக்கும் ஏழைக்குமுள்ள பேதம் கற்பனை யென்று சொல்லுவது கஷ்டமாயிருக்கும்; ஆயினும், இந்தப் பேதம் அடிப்படையிலுள்ளதென்று சொல்ல முடியாது; அதாவது, இது இயல்பாயுள்ள தன்று, ஏதோ விசேஷ காரணத்தால் ஏற்பட்டதாகும். இன்னும் நுட்பமாய் ஆராய்ந்தால், இந்தப் பேதம் கற்பனை யென்றே விளங்கும். பொருளுடையவனைச் செல்வன் என்றும், இல்லாதவனை ஏழை என்றும் சொல்லுவதில் ஒரு விபரீதம் உண்டு. உடலுழைப்பு என்ற கண் கொண்டு பார்த்தால், ஏழையிடம் இன்று அதிகச் செல்வம் இருக்கிறது; செல்வனை, இது விஷயத்தில் மிக்க ஏழை யென்றுதான் சொல்லவேண்டும். எனவே, இப்படிப் பார்க்கும்போது, செல்வன், ஏழை என்று சொல்வதெல்லாம் கற்பனை என்பது புலப்படும்.

இந்த மூன்று பேதங்களுக்கு மேலும், மொழி வேற்றுமையாலும், சமய வேற்றுமையாலும், பரஸ்பர சமூகத் தொடர்பு பற்றிய பிரசினைகள் எழுகின்றன; இவைகளும் அரசியற் பிரசினையே யாகும். ஆனால், சிறிது ஆராய்ந்து பார்த்தால், இந்த வேற்றுமைகளுக்கு அடிப்படையான காரணமில்லை யென்பது தெரியவரும்.

அப்படியானல், மனித சமூகத்தில் பரஸ்பரத் தொடர்பு பற்றி அடிப்படையாகவும் இயல்பாகவும் இருக்கும் ஏற்பாடு எவ்விதம் அமையும்?

3. அரசியற் பிரசினையின் இயல்பான பொருள்

உலகத்தில் சிலர் இயற்கையாகவே அதிகப் புத்திமான்களாக அல்லது அதிகப் பலவான்களாக இருக்கிறார்கள்; அப்படியே, வேறு சிலர் புத்தியீனர்களாகவும் பலவீனர்களாகவும் இருக்கிறார்கள். புத்தி, பலம் என்ற இரண்டையும், சாமர்த்தியம் என்ற சொல்லில் அடக்கிவிடலாம். சம்பத்து, அதை அடைவதற்கான வழிகள், பதவி முதலாக நாம் சொல்வன யாவும், இந்தச் சாமர்த்தியத்தால் வருவனவாம். ஆகவே, மனிதர்களை, இச் சாமர்த்தியத்தை யொட்டி, இரு பிரிவாகப் பிரிக்கலாம்: சிலர் சமர்த்தர்கள்; மற்றப் பலர் அசமர்த்தர்கள்.

இவ்விதமுள்ள இரு பிரிவினரும் தனித்தனி வகுப்புக்களாக உருக்கொள்ள வேண்டுமானல், அவரவர் ஒன்று சேரவேண்டும். சமர்த்தர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தால், சமர்த்தர் வகுப்பு உண்டாகிறது. ஒன்று சேராதபோது, சமர்த்தர் வகுப்பு என்பது பொருந்தாது. இதே போல, அசமர்த்தர்கள் ஒன்று சேர்ந்தால், அசமர்த்தர் வகுப்பு உண்டாகும். ஆனல், அசமர்த்தர் ஒன்று சேர்ந்தாலுங்கூட, அவ் வகுப்பு அசமர்த்தர் வகுப்பாயிராது. ஏனெனில், சாமர்த்தியமானது, பலத்திலிருந்தும் புத்தியிலிருந்தும் எப்படி உண்டாகிறதோ, அதே போல, ஆள் தொகைப் பலத்திலிருந்தும் உண்டாகிறது. அசமர்த்தர் பலர் ஒன்று சேர்ந்ததும், ஆள் பலத்தாலேயே சாமர்த்தியம் பிறந்து விடுகிறது; எனவே,

அவ் வகுப்பு அசமர்த்தர் வகுப்பாயிராமல், சமர்த்தர் வகுப்பாகிறது, மற்றும், அசமர்த்தர் பலர் ஒன்று சேராவிட்டால், வகுப்பு என்று பேச இடமில்லை.

ஆதலால், மனித சமூகத்தில், வகுப்பு என்பது இயற்கையில் இல்லையென்பதுதான் இதன் சாரமாகும். தனிப்பட்டோரே இருக்கிறார்கள்; அவர்கள் சாமர்த்தியம் கொஞ்சமாகவோ அதிகமாகவோ இருக்கலாம். 'கொஞ்சமாகவோ அதிகமாகவோ சாமர்த்யம் படைத்த இவர்கள் எப்படி ஒன்று சேர்ந்து தங்கள் விவகாரங்களை நடத்துவது?'-இதுவே அரசியலுக்கு இயல்பாக உரிய அடிப்படையான விஷயமாகும். இதிலிருந்து, முக்கியமில்லாதனவும் வெறுங் கற்பனையுமான வேறு பிரசினைகளை எழுப்பலாம்: எழுப்பிய பின், அவற்றுக்குச் சமாதானம் சொல்வதும் அவசியமாகிறது.

ஆட்சி முறையானது இயல்பாக மூன்று பிரகாரமாயிருக்கிறது:

4. இயல்பான மூன்று ஆட்சி முறைகள்

(அ) அறிவுடையவர் அல்லது சமர்த்தர் ஒருவர் எல்லோருக்காகவும் ஆட்சி புரியலாம்.

(ஆ) அறிவுடையவர்கள் அல்லது சமர்த்தர்கள் சிலர் ஒன்று சேர்ந்து எல்லோருக்காகவும் ஆட்சி புரியலாம்.

(இ) மக்களெல்லோரும் ஒன்றுகூடித் தங்கள் ஆட்சியை நடத்துவதில் சமமான பங்கு கொள்ளலாம்.

இயல்பாக மூன்று பிரகாரமாயுள்ள இந்த ஆட்சி முறைகளுக்கு, ஒருவராட்சி (ஏகாயதனம்),

அனேகராட்சி (அனேகாயதனம்), அனைவராட்சி (சர்வாயதனம்) என்று முறையே நாம் பெயரிடலாம்.

5. இந்தமூன்று ஆட்சி முறைகளும் அமையக் கூடிய பிரகாரங்கள்

முடிவாகப் பார்க்குமிடத்து, மேற்சொன்ன மூன்று முறைகளுமே இருக்கமுடியும். எனினும், இவற்றின் உட்பிரிவுகளான வேறு முறைகளும் உண்டாகக்கூடும். அவற்றுட்சில இயற்கையாயும். சில செயற்கையாயும் அல்லது கற்பனையாயும் இருக்கலாம்; இவை என்ன சந்தர்ப்பங்கள் காரணமாய் எழுந்தன என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். ஒருவராட்சியும் அனைவராட்சியும், ஒருவரே ஆள்வது, எல்லோரும் ஆள்வது என்று திட்டமாக ஏற்பட்டுவிட்ட படியால், இவை ஒவ்வொரு பிரகாரமாயிருக்குமேயன்றி, இவற்றில் உட்பிரிவுகளுக்கு இடமில்லை. மற்றும், இரண்டாவது பிரிவாகிய அனேகராட்சி யென்பது, பல வகை ஆட்சிகளைத் தோற்றுவிக்க முடியும். இயல்பாக இதில் இரண்டு உட்பிரிவுகள் உண்டாக முடியும். ஒன்று, சிலராட்சி; மற்றொன்று பலராட்சி. பலர் என்பது, உடலுழைப்பினால் ஜீவனம் செய்பவர்களைக் குறிக்கும்; இவர்கள், லக்ஷ்மியின் கருணையும், சக்தியின் கருணையும், சரஸ்வதியின் கருணையும் அற்பமே பெற்றவர்கள். பொதுவாக இவர்கள், உலகெங்கும், எல்லாக் காலத்திலும், ஒரே மாதிரியாய்த்தான் இருக்கிறார்கள். ஆகவே, இவர்களுடைய ஆட்சி என்பது ஒரே பிரகாரமாகத்தான் இருக்க முடியும். ஆனால், மற்றப் பிரிவாகிய சிலராட்சியானது, மூன்று பிரகாரமாயிருக்கலாம்:

ஒன்று, கல்வியால் (சாஸ்திரம்) வந்த ஆட்சி; இரண்டு, பலத்தால் (சஸ்திரம்) வந்த ஆட்சி: மூன்று, செல்வத்தால் (தனம்) வந்த ஆட்சி. மேலும், இந்த மூன்றில் எந்த இரண்டாயினும் ஒன்றுகூடி ஆட்சி நடத்தலாம்; அப்போது, கல்வி-பலம், பலம்-செல்வம், செல்வம்-கல்வி என்ற மூன்று விதமான ஆட்சிகள் ஏற்படக்கூடும். இரண்டிரண்டாகச் சேர்ந்த இந்தமூன்றில்ஒவ்வொன்றிலும், முதல் தன்மையே பிரதானம் வகிக்கிறதென்று கொள்வோமானால், அதே சேர்க்கையில் இரண்டாவது தன்மை பிரதானமாகிற ஆட்சியும் ஏற்பட இடமுண்டு. அப்போது இவையே மாறி, பலம்-கல்வி, செல்வம்-பலம், கல்வி-செல்வம் என்ற மூன்று வித ஆட்சிகளாகும். இந்த மாதிரியாக, இரண்டு தன்மைகள் கொண்ட ஆட்சி முறையில் ஆறு பிரகாரம் இருக்க இடமுண்டு. இதேபோல, கல்வி, பலம், செல்வம் என்ற மூன்று தன்மைகளுமே கூடி ஆட்சி செலுத்தும்போது, இவற்றுள் பரஸ்பரம் எதற்கு முதலிடம், எதற்கு இரண்டாமிடம், எது கடைசி என்பதைக் கவனித்தால், இவை ஆறு பிரகாரமா யிருப்பது தெரியவரும்; உதாரணமாக, கல்வி-பலம்-செல்வம், கல்வி-செல்வம்-பலம் என்பன போல ஆட்சி முறை எத்தனைப் பிரகாரமா யிருக்கமுடியும் என்பதெல்லாம் இவற்றுக்குள் அடங்கி விடுகின்றன.

இந்த விதமாக, மொத்தம் பதினெட்டு வகை ஆட்சி முறைகள் இருக்க முடியும். இவற்றைப் பின் வருமாறு காட்டலாம்:




[க - கல்வி. ப - பலம். செ - செல்வம்.]

தத்துவரீதியாக, இந்தப் பதினெட்டினும் அதிகமான ஆட்சி முறைகள் இருக்க வியலாது. நிறத்தால் வந்தது; கறுப்பரை வெள்ளையர் ஆளுதல்; சாதியால் வந்தது: சாதி ஹிந்துக்கள் சாதி ஹிந்து அல்லாதவரை ஆளுதல்; இனத்தால் வந்தது: யூதரைக் கிறிஸ்தவர் ஆளுதல்; தேசத்தால் வந்தது: இந்தியாவை இங்கிலாந்து ஆளுதல்; பிரஜா வுரிமை அல்லது நாகரிகத்தால் வந்தது: பண்டை ரோமர் அக்கால வுலகம் முழுமையும் ஆளுதல்; இப்படியாக வெவ்வேறு பெயரில் பலவகை ஆட்சிமுறைகள் சொல்லக்கூடும். ஆனால், இவை யாவும், மேற்குறிப்பிட்ட பதினெட்டு வகை ஆட்சி முறைகளுள் ஒன்றிலோ மற்றொன்றிலோ அடங்கிவிடும்.

6. வேறு ஆட்சி முறைகள் சாராம்சத்தில் இவற்றுள் அடங்கும்

அரசியல் ஸ்தாபனங்களைப் பற்றி அறிவின் துணைகொண்டு அலசிப் பார்த்து எத்தனை விதமான முறைகள் உண்டாக்க முடியும் என்பதைக் குறித்து இதுவரை ஆராய்ந்தோம். உலகத்தில் இம்முறைகளில் ஏதேனுமொரு முறை எந்தப் பெயராவது பூண்டு வழக்கத்திலிருக்குமென்று இதிலிருந்து தெளிவாகிறது. அனைவராட்சி முறை எங்குமே இன்று இல்லை என்பது அரசியலறிவு இல்லாத சாமானிய மக்களுக்குக்கூட எளிதில் விளங்கும். அதை ஏற்படுத்தும் பொருட்டு, காந்தியடிகள் பிரயத்தனம் செய்து கொண்டிருக்கிறார். அதற்கென்று அவர் ஒரு முறையும் வகுத்திருக்கிறார். அதை நம் நாட்டில்

7. அனைவராட்சி எங்குமே இல்லை; அவ்வாட்சியின் சொரூபம்

எப்படிச் செயலில் கொண்டு வருவதென்பது பற்றி இப்போது சோதனை செய்து பார்க்க விரும்புகிறார்.

மக்களாட்சி (பிரஜாதந்திரம்) என்ற பெயர் புனைந்து, வெளித்தோற்றத்தில் அனைவராட்சியை யொத்துள்ள ஆட்சி முறை யொன்றிருந்தது; இது ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இப்போது நிலவி வருகிறது. வந்தபோதிலும், ஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட எந்த முறையும், ஒவ்வொருவருக்கும் வாக்குரிமை யுண்டு என்ற தத்துவத்தைக் கடைப்பிடிப்பதாய்ச் சொல்லிக்கொண்ட போதிலுங்கூட, உண்மையில் அது அனைவராட்சி யாகாது.

இதற்கு மாறாக, எல்லா மக்களும் ஒன்று சேர்ந்து தாங்களாகவே மனமொத்துத் தீர ஆலோசித்த பிறகு, தங்களிடையே ராகத் துவேஷ மில்லாதவராயும், எல்லோருடைய ஹிதத்தையுமே நாடுபவராயும், புத்திமானாயும், திறமையுடையவராயும் உள்ள ஒருவரையோ பலரையோ தேர்ந்தெடுத்து, அவரிடத்தில் அதிகாரத்தை ஒப்படைக்கவேண்டும். அப்படி ஒப்படைப்பார்களானால், அப்போது அந்த ஆட்சி முறையானது அமைப்பளவில் ஒருவராட்சி அல்லது அனேகராட்சி என்றிருந்தபோதிலுங்கூட, அது அஹிம்சையை ஆதாரமாய்க் கொண்டிருக்குமானால், உண்மையில் அந்த ஆட்சி முறையை அனைவராட்சி என்றுதான் கருதவேண்டும்.

இந்தியாவில் முன்னிருந்த பஞ்சாயத்து ஆட்சி முறையை இம்மாதிரியான வழியில் ஆள்வதற்கான உண்மைப் பிரயத்தனம் என்று கூறலாம்; எனினும், அதிலும் சில குறைபாடுகள் இருக்கும். மேலும்,

நாட்டிலுள்ள பல்வேறு பஞ்சாயத்துக்களையும் ஒருமுகப்படுத்துவதற்கான ஏற்பாடு எதுவும் அங்கு இராமையால், அவ்வாட்சி முறை சாஸ்திரியமானதன்று எனவும், இன்று சிறிதும் உபயோகமற்றது எனவுமே கருதவேண்டும்.

அனைவராட்சி என்பது இக்காலத்தில் எங்குமே வழக்கில் இல்லையென்று சொன்னால் போதும்; எதிர்காலத்தில்தான் அவ்வாட்சி முறை ஏற்படவேண்டும்.

8, ஒருவராட்சி இன்று வரையில் உள்ளது; அதன் சொரூபம்

ஒருவராட்சி முறையானது ஆரம்பமுதல் இன்று வரை பல இடங்களில் இருந்து வருகிறது. இந்த முறைக்கு, நமது நாட்டில் இன்றுள்ள சுதேச சமஸ்தானங்களை உதாரணமாய்ச் சொல்லலாம். இந்தச் சமஸ்தானங்களை ஆதியில் ஸ்தாபித்தவர்கள் மிக்க எதேச்சாதிகாரமும் அகங்காரமும் உடையவர்களாயிருந்தார்கள்; ஆனால், அவர்களைவிட, அவர்கள் பரம்பரையில் ராஜாக்களாக வந்திருப்பவர்களுடைய எதேச்சாதிகாரமும் அகங்காரமும் அதிகமாயிருக்கிறது. சமஸ்தானத்தை ஆதியில் ஸ்தாபித்தவர், தம் நாடு முதலியவற்றைத் தாமே தேடிக்கொள்ள வேண்டியிருந்தது. இதன் பொருட்டு, அவருக்கு இச்சையிருந்ததோ இல்லையோ, அனேகருடைய கூட்டுறவை அவர் நாடவேண்டி வந்தது. ஆனால், அவருக்குப்பின் வந்தவர்களுக்கு இவ்விதப் பொறுப்பு எதுவும் இல்லை. இதனால்தான் அவர்கள், 'சூரியனைவிட அவனது கிரணம் பட்ட மணல் அதிகம் சுடும்' என்று *பழமொழியில் சொல்வது போல, பொறுப்பு

*தாய் ஓரடி பாய்ந்தால் குட்டி பத்தடி பாயும் என்பது இக்கருத்துக்குப் பொருத்தமான தமிழ்ப் பழமொழியாகும்.

அற்றவர்களாகிறார்கள். உலகத்தில் ஒருவராட்சி யென்பது ஏதோ ஒருவித ரூபத்தில் வேறு சில இடங்களில் நடைபெற்று வருகிறது.

9. சிலராட்சி; இதற்கு இன்றுள்ள சொரூபங்கள்

சில வகையான சிலராட்சி முறைகள் ஐரோப்பாவிலும் பிறவிடங்களிலும் பிரபலமாகி வருகின்றன. நாஸிஸம் (ஜெர்மானிய ஆட்சி முறை), பாஸிஸம் (இத்தாலிய ஆட்சி முறை), ஏகாதிபத்தியம் முதலியனவெல்லாம், அதிக அளவிலோ குறைந்த அளவிலோ சிலராட்சியின் வேற்று ரூபங்களேயாகும். ஹிம்சை, யந்திரவாதம், மூலதனத்தைக் குவித்தல், பெருவாரியாகப் பொருள்களை உற்பத்தி செய்வதற்குத் திட்டம் வகுத்தல் என்பவையே இவ்வாட்சிக்கு ஆயுதங்கள். இவ்வாட்சி நடத்துபவர்கள் செய்வதெல்லாம் ஹிம்சை; ஆனால், தாங்கள் அஹிம்சைக்காகவே பாடுபடுவதாக இவர்கள் சொல்லிக்கொண் டிருக்கிறார்கள். அனேக மக்களைச் சந்தோஷமாக வைத்திருக்க வேண்டி யிருப்பதால், இவர்கள் அம்மக்களுக்கு இதமான விஷயங்களை மந்திரம்போல் எப்போதும் சொல்லி வருகிறார்கள். ஆள்பவருக்கும் ஆளப்படுகிறவர்களுக்கு மிடையில், ஹிம்சா பூர்வமான செயல்களும் அவற்றுக்குப் பதிலான காரியங்களும் வளர்ந்துவருகின்றன. சிலர் இருந்து ஆளாவிட்டால், சாமானிய மக்களிடை ஒழுங்கான ஆட்சி முறை நிலவாது என்ற அபிப்பிராயத்தை ஆதாரமாகக் கொண்டே இவ்வாட்சி முறை நடைபெறுகிறது. பெரும்பான்மையினரான மக்கள் அறிவில்லாதவர்களாயும் வலிமை யில்லாதவர்களாயும் இருந்து, இந்த அபிப்பிராயத்துக்குக் கீழ்ப்

பட்டு நடந்து வருகிறவரையில், இந்த ஆட்சி முறைகள் ஏதேனுமொரு ரூபத்தில் இருந்தே தீரும்.

10. பலராட்சி; ருஷ்ய ஆட்சி முறை

இந்த ஆட்சி முறைகளுக்கு மாருக, பலராட்சி முறையை ருஷ்யாவில் கண்மூடித்தனமான ஆவேசத்துடன் ஆரம்பித்துச் சோதனைபோல் நடத்தி வருகிருர்கள். ஆயினும், இந்தச் சோதனைக்கு ஆதாரமாக ஹிம்சையே இருப்பதால், எவ்விதத்திலும் இது பெரும்பான்மையான மக்கட் சமூகத்துக்கேற்ற ஆயுதமாக முடியாது. ஆகவே, ருஷ்யச் சோதனையானது, கிரியாம்சையில் சிலராட்சியாகவே இருக்கிறது; பலமும் கல்வியும் செல்வமும் கூடிய சிலரது ஆட்சியாகவே இருக்கிறது. ஸ்டாலின் இன்று கடைப்பிடிக்கும் கொள்கையானது, இக்கருத்தே மெய்யென்று நிரூபிப்பதாயிருக்கிறது. ஆயுத பலத்தால் என்னவெல்லாம் கிடைத்ததோ அதையெல்லாம் ஆயுத பலத்தாலேயே வைத்துக் காப்பாற்றி வருகிருர்கள். மிகப்பெரிய அளவில் ஆயுதபலத்தைப் பெருக்கி வைத்திருந்தாலொழிய, இந்த ஆட்சி முறை வெற்றி பெறுமென்பது விளங்குகிறது. இதன் பொருட்டுப் பெருந்தொகையினரான மக்களை ஆயுதமேந்தச் செய்யவேண்டியிருக்கிறது. ஆனால், இம்மக்கள் ஆயுதமேந்துவதற்கு இயல்பாகவே திறமையற்றவர்கள். ஆகவே, ஆயுதமேந்துவதில் திறமை மிக்கவர்களான சிலருடைய ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட்டு இவர்கள் இருக்கவேண்டி வருகிறது. இவ்வித ஏற்பாட்டில், பொருளைத் திரட்டி வைத்தல் அதைப் பாதுகாத்தல் என்ற இரண்டின் பொருட்டும், ஆயுதமேந்துவது அவசியமாகிறது.

இவ்வளவும் ஆனபிறகு, இது பலராட்சியாக இருக்க முடியாது. எதுவரையில் இந்த ஆட்சி பலருக்கு இதமாக அல்லது நன்மை தருவதாக இருக்கிறதென்று தோற்றுகிறதோ அது வரையில்தான் இது நடந்து கொண்டு வரும்.

இன்று நடக்கும் இந்தச் சோதனையை, பலம், கல்வி, செல்வம் என்ற மூன்றும் கூடி நடத்தும் ஆட்சி என்று பெயரிட்டோம். ஆனால் சாங்கிய தத்துவத்தில், தாமசம், ராஜசம், சாத்துவிகம் என்ற மூன்று குணங்களையும் பற்றிச் சொல்வது போல, கல்வி பலம் செல்வம் என்ற இந்த மூன்றில் எது எந்தச்சமயம் எந்த அளவுக்குப் பிரபலமாகுமென்று சொல்ல முடியாது எனினும், பலருடைய நன்மைக் காகவே இந்த ஆட்சி முறை தொடங்கப்பட்டது. ஆனால் கிரியாம்சையில் சிலராட்சி என்ற ஆட்சி முறையில் இது ஒரு புதிய வகையாகி விட்டது என்ற இவ்வளவுதான் நாம் இப்போது இந்தச் சோதனைபற்றிக் கூறமுடியும்.

புதிய வகை என்றால், முன்னமே கூறியுள்ள பிரிவுகளினும் அதிகமான ஒரு பிரிவென்று அர்த்த மாகாது. முன்னமே கூறிய பிரிவுகளில் இதுவரை யில் செயலில் அனுஷ்டித்துப் பார்க்காமலிருந்த ஒரு பிரிவு என்று மட்டுமே இது பொருள்படும். மக்க ளினம் தோன்றி, ஐந்து லட்சம் அல்லது பத்து லட்சம் வருஷ காலம் ஆகியிருக்கலாம்; இவ்வளவு நீண்ட காலத்தில், இத்தகைய சோதனையொன்று நடைபெறவேயில்லை என்று கூறுவது பொருந்தாது. மனிதனுடைய சிந்தனை என்ற பரிச்சயமான பாதை யிலேயே சக்கரமானது சுழன்று சுழன்று வருகிறது.

ஆனால், முன்னமே என்றும் கண்டிராத புதிய பாதையில் போகிறோம் என்ற நினைவு அதற்கு எப்போதும் ஏற்படுகிறது. தாய் குழந்தை பெற்றாளென்றால், அவள் மனத்தில் அளவில்லாத ஆனந்தமும் உற்சாகமும் ஏற்படுகின்றன ; எந்தத் தாயும் இதுவரையில் இத்தகைய பிள்ளையைப் பெற்றதில்லை யென்று அவள் எண்ணுகிறாள்.

உலகத்தில் ஆட்சி முறைகளும் அரசியற் கருத்துக்களும் எத்தனை யிருக்கின்றன என்பது பற்றியும் அவை என்ன பிரகாரமாயிருக்கின்றன என்பது பற்றியும் இதுவரையில் சுருக்கமாய்க் கூறினோம்.

# இரண்டாவது பிரசினை

**கேள்வி :—** இவ்வளவையும் நீங்கள் கொள்கை யளவில் விளக்கினீர்கள். இப்போது, நாஸிஸம், பாஸிஸம், சமதர்மம் ஆகிய அரசியற் கொள்கைகள் நடந்துவரும் முறைபற்றி, கிரியாம்சையையொட்டித் தங்கள் அபிப்பிராயம் என்ன என்பதைச் சொல்லுங்கள். இந்தப் பல வேறு அரசியல் முறைகளில், எது சிறந்தது?

**விடை :** மேலே நாம் ஆராய்ந்த அளவில், கொள்கை பற்றி நான்கு வித ஆட்சிமுறைகளை முக்கியமாய்க் குறிப்பிட்டோம்; அவை யாவன : ஒருவராட்சி, சிலராட்சி, பலராட்சி, அனைவராட்சி என்பன; இவற்றுடன், பலராட்சியின் உட்பிரிவுகளையும் தனித் தனிக் கணக்கிட்டால், மொத்தம் பதினெட்டாகின்றன. இவை யனைத்துக்கும் பொதுவான அம்சம் இருக்கிறது. இதை மனத்தில் வைத்துக் கொண்டால், இங்கே சொல்கிற பலவேறு கொள்கைகள், ஆட்சிமுறைகள் ஆகியவற்றுக்குள் இருக்கும் பேதங்கள் தெளிவாய் விளங்கும். குறித்த ஓர் அரசனுடைய ஆட்சியானது, அவனுடைய வலிமையையே பொறுத்த தென்றாலும், அவ்வாட்சி முழுமையும் அவனுடையதாகாது. ஒரு கூட்டத்தாரின் சகாயமும், பொதுமக்களுடைய கூட்டுறவும் அவனுக்குக் கிடைக்கின்றன. இவற்றைக் கொண்டே அவனுடைய ஆட்சி நடைபெறுகிறது. இதற்கு மாறாக, அனைவராட்சி

11. மக்கள் வாழ்க்கையோடு ஒன்றியவர்கள்; ஆட்சிமுறைகள், வாழ்க்கைக்குரிய சாதனங்கள்

என்னும் ஆட்சிமுறையில், மக்களனைவருமே நிர்வா கத்தை நடத்துகிறார்கள் என்பது உண்மையன்று. எல்லோருடைய கூட்டுறவும் ஆட்சிக்குக் கிடைத் திருந்தபோதிலும் கூட, நிர்வாகமாகிய வேலை சிலர் வசந்தான் இருக்கிறது ; அச் சிலருள்ளும், யாரே னும் ஒருவரையே முடிவான அதிகாரமுடையவராய்க் கருத வேண்டி யிருக்கிறது. மக்கள், ஆட்சி பற்றிய கொள்கையிலோ முறையிலோ கட்டுண் டிருப்ப தில்லை ; வாழ்க்கையில்தான் அவர்கள் தோய்ந் திருக்கிறார்கள். தங்கள் வாழ்க்கை ஒழுங்காய் நடை பெறுகிற வரையில், தங்கள் நாட்டு ஆட்சி என்ன கொள்கைப்படி நடந்தாலும்சரி, என்ன முறைப்படி நடந்தாலும்சரி, அவர்கள் அதுபற்றி ஒரு சிறிதும் கவலைப்படுவதில்லை. தத்துவ மறிந்தவர்கள் ஆட்சி பற்றிய கொள்கைகளை வகுக்கிறார்கள். காரியவாதி கள் ஆட்சிமுறைகளை ஏற்படுத்துகிறார்கள். இரு சாராரும், வாழ்க்கை நடத்துவதற்குத் தங்கள் தங் கள் மதமே, அதாவது, கொள்கைகளே அல்லது முறையே பிரதானம் என்ற கருத்துடையவர்களா யிருக்கிறார்கள். ஆயினும், முடிவாகப் பார்த்தால், இவர்களும் தங்கள் தங்கள் மதத்தை முழுமையும் அனுசரித்து வாழ்க்கை நடத்துவதில்லை. வாழ்க்கை யைப் பூரணமடையச் செய்ய வேண்டுமென்ற ஆசை யால்தான் அவர்கள் இவ்விதம் ஒரு கொள்கை யையோ ஒரு முறையையோ பற்றிக்கொள்கிறார்கள் ; இதனால்தான் மேற்கூறியவாறு வாழ்க்கை நடத்த முடிவதில்லை. தமது கொள்கையைக் கடைப்பிடிக்கா விட்டால் வாழ்க்கை சரியாக நடவாது என்று கொள் கைவாதி கருதுகிறார் ; ஆகவே, சரியான வாழ்க்கை

யில் அவருக்குள்ள பற்றுதல் காரணமாகவே அவர் தம் கொள்கையையே உறுதியாய்ப் பிடித்துக்கொள்கிருர். இதே போல, தமது அனுபவத்தின் துணையால், குறித்த ஒரு முறை யில்லாவிட்டால் வாழ்க்கை சரியாக நடவாது என்று காரியவாதி கருதுகிருர். ஆகவே, சரியான வாழ்க்கையில் அவருக்குள்ள பற்றுதல் காரணமாக, அவர் தம் முறையையே உறுதியாய்ப் பிடித்துக் கொள்கிருர். ஆயினும், சில சமயங்களில், கொள்கைவாதிகள் காரியவாதிகள் என்ற இரு சாராரும், தங்கள் ஆக்கிரகத்தாலும், மோகத்தாலும், வாழ்க்கையின் நோக்கத்தை விட்டுவிடுகிருர்கள்; குறித்த ஒரு கொள்கையைப் பின்பற்றி நடப்பது அல்லது குறித்த ஓர் ஆட்சி முறையைப் பின்பற்றி நடப்பது என்பது மக்கள் மனத்தைக் கொஞ்ச காலம் கவர்ந்துவிடுகிறது.

12. ஆட்சிமுறையின் நான்கு அம்சங்கள்

பின் வருபவற்றை, எல்லா வகையான கொள்கைகளுக்கும் ஆட்சிமுறைகளுக்கும் நிர்வாகத்துக்கும் பொதுவான அம்சங்களென்று கருதவேண்டும்:

**(க)** **வாழ்க்கையில் சேவை புரியும் நோக்கம்:—** உண்மையா யிருக்கலாம் அல்லது வெளித் தோற்றத்தில் மட்டும் காணப்படலாம்; நிரந்தரமாயிருக்கலாம் அல்லது தற்காலிகமா யிருக்கலாம்; எங்கும் சேவை செய்யலாம் அல்லது குறித்த ஓரிடத்தில் மட்டும் செய்யலாம்.

**(உ)** **மக்களின் கூட்டுறவு:—**(பூரணமாய் அறிந்தோ, அறியாமலோ) சுயேச்சையாய்க் கிடைக்கலாம்; அல்லது (முழுமையுமோ வேண்டிய அளவோ) கட்டாயத்தின்பேரில் தரலாம்.

*(ங) சமர்த்தர்கள் நிர்வாகம் செய்தல் :—* இவர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம் அல்லது நியமிக்கப்படலாம் ; அல்லது இவர்கள் தாங்களாகவே இவ்வேலையை மேற்கொண் டிருக்கலாம்.

*(ச) ஒருவரே முடிவான அதிகாரம் வகித்தல் :—* இவர் (நேர்முகமாகவோ மறைமுகமாகவோ) அனைவராலும் நியமிக்கப்படலாம் ; பலரால் நியமிக்கப்படலாம் அல்லது சிலரால் நியமிக்கப்படலாம் ; அல்லது தாமாக அதிகாரத்துக்கு வந்தும்விடலாம்.

13. இந்த அம்சங்களின் பலவகையான விசேஷத் தன்மைகள்

ஆட்சி முறைகள் கொள்கைகள் பற்றி இத்தனை பொதுவான அம்சங்கள் எல்லாவற்றுக்கும் இருக்கும் போது, அவற்றைக் குறித்து இவ்வளவு சச்சரவு இருப்பது ஏன்? நடைமுறையிலுள்ள ஆட்சியில் மாறுதல்களும் புரட்சிகளும் ஏன் ஏற்படுகின்றன? ஆட்சிமுறைகளை ஏன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்? எந்த ஆதாரத்தின்மீது ஒப்பிட வேண்டும்?

இந்தக் கேள்விகளுக் கெல்லாம் விடை ஒன்றே. மேற்கூறிய அம்சங்களை நாம் விளக்கிக் கூறிய போது, ஒவ்வொன்றுக்கும் சில விசேஷத் தன்மைகளைக் கூறினோம் ; அவற்றுள் இவ் விடை அடங்கியிருக்கிறது.

க. வாழ்க்கையில் சேவை புரியும் நோக்கம்

(1) வாழ்க்கை என்பது குறித்த ஓர் இடத்தில் மட்டும் நடத்துகிற வாழ்க்கை என்று கொண்டால், அது பிற இடங்களில் உள்ள வாழ்க்கையின் நோக்கத்தோடுமுரண்படும் ; அப்படி முரண்படுகிற நோக்கம் ஒருபோதும் நீடித்திருக்க முடியாது. ஆகவே அது அழிந்துபோய், வேறொரு புதிய

ஆட்சிமுறையைத் தோற்றுவிக்கும். (2) வாழ்க்கையில் தற்காலத்திற்கு மட்டும் சேவை புரிவது நோக்கமானால், அதாவது நெடுங்காலம் நடக்க இருப்பதை நிதானித்துச் செய்வதாய் இராவிட்டால், அந்த நோக்கம், காலால் தட்டிவிட்ட பந்து போல, வலி இழந்துவிடும். பந்து முதலில் வேகத்துடன் கிளம்புகிறது; போகப் போக வேகமெல்லாம் இழந்து, கடைசியில் மறுபடியும் அதை உதைக்காவிட்டால் போக முடியாமல் நின்றுபோய் விடும். (3) வாழ்க்கைக்குச் சேவை புரியும் நோக்கம் அகத்தில் எழாமல், புறத்தேமட்டும் அதாவது வெளித்தோற்றத்தில் மட்டும் இருக்குமானால், வெளித் தோற்றமாகிய ஆடம்பரம் இருக்கிற வரையில்தான் அதுவும் இருக்கும்.

உ. மக்களின் கூட்டுறவு.

(1) மக்களின் கட்டாயத்தின்பேரில் ஒத்துழைப்பதாய் இருந்தால், அவர்கள் இருக்கிற நிலைமையை உணராதவரையிலும், சமர்த்தர்களாய் இராதவரையிலும்தான், ஆட்சியானது ஏதோ ஒரு வகையில் நடந்தேறி வரும்.

(2) மேற் சொன்னபடி கட்டாயம் இருந்தபோதிலும்கூட, மக்களுடைய க்ஷேமத்தை நாடி அரசாங்கம் கொஞ்சமோ அதிகமோ ஆட்சி செய்து வந்தால், இந்த ஆட்சி முன் சொன்னதைவிடச் சற்றே அதிகக்காலம் நிலைத்துநிற்கும். (3) கட்டாயத்தின்மீது எழுந்த ஆட்சியில், மக்களுக்குப் பயனில்லாத ஒரு கல்வி முறை மூலமாகவோ, அல்லது எவ்விதக் கல்வியும் இல்லாமலோ, ஆள்கிற வர்க்கத்தார் தக்கபடி முயல்வார்களேயானால், அந்த ஆட்சி இன்னும்

சிறிது காலம் நீடித்து நிற்கும். (4) அரசாங்கமானது மக்களுக்கு வேண்டிய அடிப்படையான தேவைகளைப் பூர்த்திசெய்யாமலே போகலாம். போனாலும், மக்களுக்கு வேண்டிய இரண்டாந்தரத் தேவைகளில் சிலவற்றையேனும் நிறைவேற்றுவதாகக் காட்டிக் கொள்வார்களானால், அப்போது மக்கள் அந்த நிலைமையில் ஓரளவு திருப்தி அடைந்தாலும் அடைந்துவிடுவார்கள். ஆயினும், அப்படிப்பட்ட அரசாங்கம் ஏதோ ஒரு காலத்தில் முடிவடைந்துதான் தீரும். (5) மக்கள் சுயேச்சையாகவே ஒத்துழைத்த போதிலும்கூட, அந்த ஒத்துழைப்பு அவர்களுடைய புத்திபூர்வமாகஇல்லாமல், அறியாமையால் கொடுத்த ஒத்துழைப்பாக இருக்குமானால், அந்த அரசாங்கமானது, மக்களுடைய புத்தி பேதலிக்காத வரையிலும்தான் நிலைத்திருக்க முடியும்.

கூ. சமர்த்தர்கள் நிர்வாகம் செய்தல்

சமர்த்தராயுள்ள தனிப்பட்ட நபர்களே நிர்வாகத்தை நடத்தி வருவார்கள். ஆனால் (1) அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாய் இருந்தால், அவர்கள் அதிகாரம் வகிக்கும் காலமானது, செம்மையாய் அவர்கள் ஆட்சி நடத்துகிறார்களா என்பதைப் பொறுத்தது. (2) அவர்கள் நியமிக்கப்பட்டவர்களாய் இருந்தால், மக்கள் சமர்த்தர்கள் ஆகாதவரையில்தான் அவர்கள் அதிகாரம் வகிப்பார்கள், அல்லது தங்களுக்குள்ளாகவே பூசலிட்டுக் கொள்ளாத வரையில் அதிகாரம் வகிப்பார்கள். (3) அவர்கள் தாங்களாகவே ஒன்று கூடியிருக்கும்பட்சத்தில், மேற்குறிப்பிட்டதைவிட அதிகக் காலம் அதிகாரத்தில் இருக்க முடியும்; ஆயினும் மக்களுடைய ஆதரவு,

இல்லாதபோது, சமர்த்தர்களாயுள்ள சிலர் ஒன்று கூடியிருப்பது அதிக நாள் நிலைத்திராது: ஏனெனில், சமர்த்தர்களிடையில், அவர்கள் திறமை காரணமாகவே, அடிக்கடி ஒருவர் மீதொருவர் பொறாமை ஏற்பட்டு விடுகிறது.

ச. ஒருவரே முடிவான அதிகாரம் வகித்தல்

(1) அவர் தாமாகவே அதிகாரத்துக்கு வந்திருக்கும் பட்சத்தில், அவருக்கோ அவருடைய பராக்கிரமத்துக்கோ அல்லது அவருடைய செல்வாக்குக்கோ முடிவு நேராதவரையில்தான் அவருடைய நிர்வாகம் நிலைக்கும். (2) அவர் தேர்ந்தெடுக்கப்பட்டவராயிருக்கும் பட்சத்தில், தேர்ந்தெடுத்த வாக்காளர் தொகுதி எவ்வளவு விரிவாயிருக்கிறதோ, எவ்வளவு சுயேச்சையாய் இருக்கிறதோ, எவ்வளவு சொந்த அறிவோடு வேலை செய்கிறதோ அந்த அளவுக்குத் தான் அவருடைய அதிகாரமும் நிலைக்கும்.

ஆட்சி முறைகளைக் குறித்து இங்கு ஆராய்கையில், மேலே குறிப்பிட்டவை தவிர மிகவும் முக்கியமான மற்றொரு விஷயத்தையும் இங்கு ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டும்.

14. தேசங்களுக்குள் விரோதமின்மையும் சகோதர பாவமும்

அதாவது, குறித்த ஒரு தேசத்துக்குள் ஏற்பட்டிருக்கும் கிரமமான விவகாரங்கள் ஒரு புறமிருக்க, மற்றத் தேசங்களோடு எந்த அளவுக்குப் பரஸ்பரம் அவிரோத பாவம் இருக்கிறது என்பதாகும். போக்குவரத்துச் சாதனங்கள் இவ்வளவு வேகமாய்ச் செல்வதற்கான வசதி இல்லாத பண்டைக் காலத்திலும்கூட, இந்தப் பிரசினைக்கு முதன்மை அதிகம் இருந்தது; இன்றோ, சர்வ தேசங்களிடையேயும்

அவிரோத பாவம் இருக்க வேண்டுவதுமட்டு மன்று; சொந்த விவகாரங்களிலும், சர்வதேச விவகாரங்களிலும்கூட, சகோதர பாவமும், பரஸ்பரம் அனுகூலம் செய்தலுமே மூல தத்துவங்கள் என்று கருத வேண்டும்.

15. ஆட்சிமுறையின் ஆதர்சங்கள்

இந்தவிதமான எல்லாச் சர்ச்சைகளின் சாரத்தையும் சேர்த்து, பல பேர் ஆட்சி முறைகளைச் சோதிப்பதற்குப் பின் வரும் தத்துவங்களைக் கருவியாகக்கொள்ளலாம் :—

(க) சர்வதேச சகோதர பாவம்.

(உ) தேசத்திலுள்ள எல்லோருடைய கூட்டுறவும், புத்தி பூர்வமாகவும் சக்திக்கு இயன்ற வரையிலும், தன் இச்சையாகவும், இதய பூர்வமாகவும் வரவேண்டும்.

(ங) எண்ணிக்கையில் சிலராயுள்ள சமர்த்தர்களுக்கும், பலராயுள்ள பாமர மக்களுக்கும் நோக்கத்தில் ஒருமைப்பாடு.

(ச) எல்லோரிடத்திலும், சமமாகவும்எல்லா அம்சத்திலும் வளர்ச்சி வேண்டுமென்று கருதும் நோக்கம்.

(ரு) ஆட்சியில் வரும் அதிகாரத்தை எல்லோருக்கும் வினியோகம் செய்தல்.

(சு) ஆள்வது மிகவும் குறைந்திருத்தல்.

(எ) மிகவும் எளிதான அதிகார வர்க்க அமைப்பு.

(அ) மிகவும் குறைவான நிர்வாகச் செலவு.

(கூ) மிகவும் குறைவான பாதுகாப்பு ஏற்பாடு.

(௧0) எல்லோரிடத்திலும், எவ்விதத் தடையுமில்லாமல், எவ்வித பட்சபாதமுமில்லாமல் சுதந்திரமாக அறிவு வளர வழி செய்தல்.

16. நாஸிஸம், பாஸிஸம், ருஷ்யப் பொது உடைமை வாதம் ஆகியவற்றின் சொருபம் : இவை வெறும் பிரமை

இப்போது நமது மூலப் பிரசினையை மறுபடியும் கவனிப்போம். நாஸிஸத்துக்கும், பாஸிஸத்திற்கும் ஒரேயொரு வேற்றுமை : அதாவது, பாஸிஸத்தைவிட நாஸிஸமானது அதிக ஒழுங்கான அமைப்புடையது, அதிக அம்சங்களில் மக்கள் வாழ்க்கையைப் பாதிக்கிறது ; இது போக, இந்த இரண்டு முறைகளுக்குள் எந்த வேற்றுமையும் இருப்பதாகத் தெரியவில்லை. இவ் விரண்டு வர்க்கத்தாரும், தங்கள் தங்கள் இன அபிமானம் அதிகமுடையவர்கள். இருவரும் இங்கிலாந்தையே தங்கள் குருவாய்க் கொண்டிருக்கிறார்கள் ; கொண்டு, இங்கிலாந்தின் நாடு பிடிக்கும் பேராசையைத் தாங்களும் பெற்று விட்டார்கள். இருவருக்கும், இராணுவ பலத்தில் தான் நம்பிக்கை. போர்த்துகல், ஸ்பெயின், ஹாலந்து, இங்கிலாந்து, பிரான்ஸ் முதலான தேசங்கள் உலகமெங்கும் தங்கள் ஏகாதிபத்தியத்தை நிலைநாட்ட முயன்றதை அனுசரித்து, இவர்களும் செய்து வருகிறார்கள். இவர்களுக்கு அரசியல் தத்துவம் எதுவும் இல்லை. இவர்கள் ஆட்சி முறையைப் பற்றி நமக்கு இன்று கிடைக்கும் புத்தகங்களைப் படித்து விட்டு நாம் ஏதேனும் ஓர் அபிப்பிராம் கொண்டால், பதினைந்து நாள் கழித்து வெளியாகும் புத்தகத்தில் வேறு அபிப்பிராயம் இருப்பதைக் காண்போம் ; நாம் முதலில் கொண்ட அபிப்பிராயத்தை மாற்றிக்

கொள்ள நேரும். இந்த இரண்டுக்கும் மாருக ருஷ்யாவில் சமதர்மம் (சாம்ய வாதம்) அல்லது பொதுவுடைமை (சமாஜ வாதம்) என்ற பெயரில் ஒரு புதிய சோதனையை நடத்தி வருகிருர்கள். ஆரம்பத்தில், இத் தத்துவம் உலக முழுமையும் வியாபிக்க வேண்டுமென்றிருந்தது. இதைச் செயலில் கொண்டு வர முடியவில்லை. ஆகவே, இந்தத் தத்துவம் அந்தத் தேசத்தோடுமட்டும் நின்றுபோய்விட்டது. இராணுவ பலத்தில் மற்றவர்களுக்கு எவ்வளவு நம்பிக்கை இருக்கிறதோ அவ்வளவு நம்பிக்கை ருஷ்ய ஆட்சிக்கும் உண்டு. இப்போது இராணுவ முஸ்தீப்புகளில் மற்ற நாடுகளைவிட இது கொஞ்சம் பிற்பட்டிருக்கலாம்; ஆனல், சீக்கிரத்தில் இது முன்னணிக்கு வந்துவிடும். தன் நோக்கம் நிறைவேறும்பொருட்டு, தன் கொள்கைக்கு விரோதமானவற்றையும் வெளிக்குப் பயனுள்ள சாதனங்கள் என்று தோன்றுபவைகளையும் கையாள அது தயங்குவதில்லை. உலக வியாபாரத்தையெல்லாம் மற்ற நாடுகள் கைப்பற்றி விட்டன; ருஷ்ய நாட்டில் சாகுபடி செய்வதற்கு நிலமும் ஏராளமாயிருக்கிறது: இக் காரணங்களால், அந்த நாடு பயிர்த்தொழில் செய்வதற்கு விரிவாகத் திட்டம் போட்டுவருகிறது; மற்றப்படி, இப்படித் திட்டம் போடுவதற்கு மூல காரணம் வேறெதுவுமில்லை; தற்போதுள்ள கால நிலைமைதான் காரணமாகும்.

ருஷ்யப் புது அரசியல், சுமார் இருபது வருஷம் ஒரு சோதனைபோல நடைபெற்று வந்திருக்கிறது; இந்தச் சொற்ப காலத்துக்குள், இவ்வாட்சி முறையிலுள்ள சாரமெல்லாம் போய், முதலிலிருந்த கவர்ச்சி

மிக்க சொரூபமெல்லாம் இது இழந்துவிட்டது. முதலாளித்துவத்துக்கு நான்கு அம்சங்கள் உள்ளன: அவை, தொழிலை ஒரே இடத்தில் சேர்ப்பதாகிய குவியல் முறை, விரிந்த அளவில் யந்திரத்தை உபயோகிப்பதாகிய ஆலை முறை, ராணுவ ஆட்சி முறை, செல்வத்தையும் திறமை முதலியவற்றையும் மறைமுகமாய்க் கொள்ளையடித்தலான சுரண்டல் முறை என்பனவாகும். இந்த நான்கு அம்சங்களில், சமதர்மவாதமானது, முதல் மூன்றையும் வைத்துக்கொண்டு நான்காவது அம்சத்தைமட்டும் விலக்கிவிட்டு ஆட்சி நடத்த எண்ணுகிறது. இதுவே மேற் சொன்ன விதம் கவர்ச்சி அடைந்ததற்குக் காரணம். இதை ஒரு மோக சக்கரம் என்று சொல்லலாம். எவ்வளவுதான் இந்த நான்காவது அம்சத்தை மாற்ற முயன்ற போதிலும்கூட, மற்ற மூன்றையும் இது நிச்சயம் பின்தொடர்ந்தே இருக்கும் என்பதை எளிதில் அறியலாம். தொழில்களை ஒரே இடத்தில் சேர்ப்பதாகிய குவியல் முறையினால் வேலைத் திறமை பெருகுகிறது என்பது ஒரு மயக்கம்; விரிந்த அளவில் யந்திரத்தை உபயோகிப்பதாகிய ஆலை முறையினால் மிக்க ஓய்வும், சுகவாசமும் கிடைக்கின்றன. இராணுவ பலத்தினால் பாதுகாப்புக் கிடைப்பது நிச்சயம் என்ற நம்பிக்கை இருக்கிறது. இவை மூன்றும் சேரவே, சுகவாசத்தை விரும்பி, வேண்டாததை வேண்டியதென்று மயங்கி இருக்கிற மக்கள், சுரண்டுதலை ஒழிக்கும்பொருட்டு இந்த மூன்றில் ஒன்றைக்கூட விட்டுவிடத் தயாராய் இல்லை.

நாஸிஸம், பாஸிஸம் என்பவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ருஷ்யப்பொதுவுடைமைக் கொள்கை

யானது நல்லெண்ணம் உடையதாய்த் தோற்று கிறது. ஆயினும், இவை மூன்றும் வெறும் பிரமை என்றே சொல்லலாம். ஏனெனில், மக்கள் அனைவருடைய நன்மையையும் இவை விளைவிக்கமுடியவில்லை என்பது ஒருபுறமிருக்க, மக்களில் பெரும்பான்மையோருக்குக்கூட இம்மூன்றாலும் நன்மை தர முடியாமலிருக்கிறது.

17. இந்த வாதங்களைக் குறித்த ஆராய்ச்சி; இவைகளில் தப்பாய் உள்ள கொள்கைகள்

ஏதேனும் ஓர் அரசியலானது, இப்போதுதான் அமைக்கப்பெறுகிறதென்றாலும், ஒவ்வொரு நிலையிலும் அதில் மாறுதல் ஏற்பட்டுக் கொண்டே வருகிறதென்றாலும், அதன் குண தோஷங்களைப் பற்றி வாதம் செய்தாலும், ஆராய்ந்தாலும், அந்த வாதம் அல்லது ஆராய்ச்சி தவறாய்ப் போகக் கூடும். உதாரணமாக, சர்வ தேச சகோதரபாவம் என்ற அளவில் கவனிக்கையில், இத்தாலியிலும் ஜெர்மனியிலும் இது கொஞ்சங்கூட இல்லை. இதற்குமாறாக, சர்வ தேச ஒருமை என்பது ருஷ்யப் பொதுவுடைமைத் தத்துவத்தில் அமைந்திருக்க வேண்டும். ஆனால், அத் தத்துவங்களில் ஒன்று, பொதுவுடைமைக் கருத்துக்கள் உலக முழுவதும் பரவாத வரையில் எந்தத் தேசத்திலுமே பொதுவுடைமையை உண்டாக்க முடியாது என்பதாகும். தவிர, பொதுவுடைமை வாதத்தைப் பரவச் செய்வதற்கான சாதனங்களில் ஹிம்சையைக் கையாள லாகாது என்ற தடை ஏற்படவில்லை. ஆகவே, பொது வுடைமைக் கருத்தைப் பரவச் செய்வதன்பொருட்டு, ஆக்கிரமிக்கும் சக்திமட்டும் ருஷ்யாவுக்கு இருக்கும்பட்சத்தில், வேறெந்தத் தேசமும்

தனக்கு எவ்விதத் தீங்கும் செய்யாதபோதிலும்கூட, அதன்மீது தாராளமாய்ப் படையெடுத்துச் செல்லலாம், பாதகமில்லை. ஆகவே, இந்த விதம் ஆக்கிரமிப்பதற்கான தக்க சந்தர்ப்பம் கிடைக்காதவரையில், சர்வதேச சகோதர பாவம் என்பது கொஞ்ச அளவிலேனும் புத்தகத்தில்தான் இருக்க முடியும். இன்னும் காலம் சென்றால், புத்தகத்திலும் அதற்கு இடமிராது. எவர்மீது இராமபிரானுடைய அம்பு படுகிறதோ அவர்கள் அனைவரும் முத்தி அடைகிறார்கள் என்பது பக்தர்களின் நம்பிக்கை. அதேபோலத்தான், எந்தத் தேசத்தின்மீது ருஷ்யா ஆக்கிரமித்துச் சென்றாலும், அந்த ஆக்கிரமிப்பெல்லாம் அந்தத் தேசத்தின் நன்மைக்கே என்று பொதுவுடைமை வாதத்தின் பக்தர்கள் கபடமின்றிச் சொல்லுகிறார்கள். இவற்றையெல்லாம் ஆலோசிக்கும்போது, ஜெர்மனியோடும், இத்தாலியோடும் ஒப்பிட்டுப் பார்க்கையில், சர்வதேச சகோதரபாவம் எங்கும் வழங்கச் செய்யும் விஷயத்தில் ருஷ்யா மேலானதென்று சொல்வது கடினம்.

கடைசியாக நாம் குறிப்பிட்டது, அறிவைப் பிரசாரம் செய்வதற்குச் சுதந்திரம் இருக்கவேண்டும் என்பதாகும்; இதைச் சோதனையாக வைத்துப் பார்க்கையில், இந்தச் சுதந்திரம் எப்படி ஜெர்மனியில் இல்லையோ அப்படியேதான் ருஷ்யாவிலும் இல்லை; தவிர, இந்த யுத்தக் காலத்தில் மட்டுமல்ல, மற்றெந்தக் காலத்திலுமே இல்லை என்று தெரிகிறது. தேசப் பாதுகாப்பு என்ற விஷயமும் இது போன்றதுதான். பாதுகாப்புக்கான சாதனம், இந்தத்தேசங்களனைத்திலும், ஹிம்சைதான்; ஆகவே, எந்தத்தேசம் பாதுகாப்

புக்காக மிக்க அதிகமாய்ச் செலவு செய்கிறதோ அந்தத் தேசந்தான் அறிவுடையது என்று எல்லோரும் கருதுகிறார்கள். ஆனால், ருஷ்யாவின் பொதுவுடைமைக் கருத்துக்கு அடிப்படையில் அதற்குப் பலம் தருவதாக ஒரு லக்ஷ்யவாதம் அமைந்திருக்கிறது. இந்த லக்ஷ்ய வாதம், நாஸிஸத்திலோ பாஸிஸத்திலோ காணப்படவில்லை. மற்றப்படி, அதற்குப் பதிலாக சுய ஜாதி, சுய வம்சம் என்ற அபிமானமானது இந்த இரண்டு தேசங்களிலுமுள்ள ஆட்சி நடப்பதற்கான சக்தியாக இருக்கிறது.

ருஷ்யாவின் லக்ஷ்ய வாதத்தில், பொது மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்கிற திருஷ்டியானது, காரியாம்சத்தில் எல்லோருடைய நன்மைக்கும் விரோதமானதன்று; ஏனெனில், பொது மக்களுக்கு நன்மை செய்வதன் மூலந்தான் எல்லோருடைய நன்மையையும் தேட முடியும். ஆகவே, எல்லோருக்கும் இதம் செய்யவேண்டுமென்ற இந்தத் திருஷ்டியை ஆதாரமாய்க் கொண்டு, இப்போது ஏற்பட்டுள்ள ருஷ்யப் புரட்சியைவிட அதிகம் நிலையான புரட்சி ஒன்று ஏற்படுதலும் கூடும். ஆனால் நோக்க ஒற்றுமையை விட, நோக்க வேறுபாட்டால் வரும் வகுப்புச் சண்டைதான் மிக்க விரைவில் சிறந்த பலன் தரக்கூடியதென்று கருதி அதையே மேற்கொண்டார்கள். இதன் பயனாக, ஆரம்பத்தில் மிக்க விரைவில் பலன் கிடைத்ததென்று எண்ணினார்கள். ஆனால், பின்னர் ஏற்பட்ட நிலைமையைச் சமாளிக்கும் பொருட்டு, தேசாபிமானம் என்ற அடிப்படைமீது பொதுவுடைமைக் கொள்கையை நிருமிக்க வேண்

டியதாயிற்று. பலன் விரைவில் கிடைக்க வேண்டுமென்ற ஆசை தலைவர்களுக்கு இருந்தது. அதனால், வெளிப் பார்வைக்குப் பலமும் உறுதியும் நிறைந்ததென்று சொல்லும்படியான மனப்பான்மையை மக்களிடம் அவர்கள் உண்டுபண்ணினார்கள். மக்கள் ஒரு முடிவுக்கு வரும் விஷயத்தில் நிதானத்தையும், அறிவையும் உபயோகப் படுத்தும்படி கற்பிப்பதில் அத் தலைவர்களுக்குச் சிரத்தை இல்லை. 'வெகு ஜன ஹித வாதம்' என்று சொல்லத்தக்க ருஷ்யக் கொள்கையும், 'தேசிய சமதர்ம வாதம்' என்று சொல்லத் தக்க ஜெர்மானியக் கொள்கையும் இந்த உண்மைக்கு உதாரணங்களாகும். தங்கள் தேசத்தில் வம்சாபிமானத்தை உண்டு பண்ணினாலொழிய, மக்களனைவரையும் விரைவில் ஒன்று சேர்க்க இயலாதென்று ஜெர்மானியத் தலைவர்கள் எண்ணினார்கள். அதே போல, வகுப்புச் சண்டையின் உதவியில்லாமல் புரட்சி துரிதமாக நடைபெறாதென்று ருஷ்யத் தலைவர்கள் எண்ணினார்கள்.

18. மாஜினி காலத்து இத்தாலிய நாட்டில் நிலவிய தீங்கு: மக்களைப் பாதுகாப்பது என்ற பெயரால் ராணுவவர்க்கம் அதிகாரத்துக்கு வருதல்.

ஜோஸப் மாஜினியின் கண்கொண்டு, அன்றிருந்த இத்தாலியை நாம் பார்ப்போமாயின், ஒரு விசித்திரமான காட்சியைக் காண்போம். மாஜினி என்பவன் ஜிகத் என்பவனுடைய மாணாக்கன்; தனக்குச் செய்வதையே மற்றவர்களுக்கும் செய்வதுதான் சுதந்திரம் பெறுவதற்கு அடிப்படை என்று ஜிகத் கருதினான். இது மாஜினிக்குப் போதவில்லை. ஆகவே அவன், 'ஈசுவரன் உலகத்துக் கெல்லாம் தந்தை' என்ற

தத்துவத்தை ஆதாரமாக வைத்து, எல்லாத் தேசங்களுக்கும் சுதந்திரம் வேண்டும் என்ற கருத்தைக் கூறுகிருன். அவனுடைய வாழ்நாளிலேயே இத்தாலிய சுய ஆட்சி பிறந்துவிட்டது. அன்னிய ஆட்சி ஒழிந்தது என்று மக்கள் எல்லோரும் ஆனந்தமடைகிருர்கள். ஆனுல், மாஜினியோ தனது லக்ஷயங்களெல்லாம் இத்தாலியில் இல்லாமற் போய் விட்டனவே என்று வருந்துகிருன். அன்று ஏற்பட்ட ஆட்சி முறை பின்னர் நீங்கி, அதற்குப் பதிலாக, சர்வாதிகாரமுடைய ஒருவனைத் தலைவனுகக்கொண்ட இராணுவ ஆட்சி அங்கு ஏற்பட்டுவிட்டது.

இராணுவ வர்க்கமானது ஒரு தனி வகுப்பாக அதிகாரத்துக்கு வரும்போதெல்லாம், மக்களுக்கு இதம் செய்வது என்ற பெயரை வைத்தே அது முன்னேறி வருகிறது. இந்த இராணுவ வர்க்கமானது உலகத்தைக் காக்கிற கடவுளின் வாரிசு என்று தன்னை எண்ணிக் கொள்கிறது. அதனிடத்தில் வம்சாபிமானம் சிறப்பாக இருக்கிறதென்பது வெளிப்படை; இந்த அபிமானத்தின் மூலமாக, விரைவில் பலன் ஏற்படும்படி செய்வதற்கான ஆவேசமும் எளிதில் அதற்கு வருகிறது. இந்த இராணுவ வர்க்கமானது, உள்நாட்டுக் கலகத்திஞலோ அன்னிய ஆக்கிரமிப்பினுலோ, அடக்கப்பட்டு ஒடுங்கிவிட்டால், இதைக் குறித்து மக்கள் ஒருகணம் வருந்துவார்கள்; பின்னர், தங்களுடைய நித்திய விவகாரத்தை மேற்கொண்டு வழக்கம்போல்தான் வாழ்வார்கள்.

இந்த மூன்று கொள்கைகளில் எது உயர்ந்தது, எது தாழ்ந்தது என்பதும், இதை எப்படி முடிவு செய்வது என்பதும், நாம் இப்போது கவனிக்க வேண்டிய பிரசினைகள். மக்கள் பழைய ஆட்சி முறை ஒன்றில் சோர்வடைந்து விட்டால், அதை விட்டு விட்டு ஏதேனும் ஒரு புதிய ஆட்சிமுறையை விரும்பி ஏற்கிறார்கள்; அதனுடைய தன்மை எப்படி இருந்தபோதிலும், பழைய முறையைப் போக்கிவிட்டு அதன் ஸ்தானத்தில் இது அமர்ந்துவிட்டால் அவர்களுக்குப் போதும். பழைய ஆட்சி தொலைந்ததென்பதே அவர்கள் ஆனந்தத்துக்குப் பிரதான காரணம். பேஷ்வா ராஜ்யம் தொலைந்து, எல்பின்ஸ்டன் என்ற பிரிட்டிஷ் கவர்னர் ஆட்சி ஆரம்பித்தவுடன், சட்டத்தை ஆதாரமாய்க் கொண்ட புதிய அரசாங்கம் ஏற்பட்டுவிட்டதென்று அக்காலத்து மகாராஷ்டிர மக்கள் குதூகலமடைந்தார்கள். ஆனால், நூற்றைம்பது வருஷகாலம் ஆவதற்குள்ளாகவே, இந்தக் குதூகலமெல்லாம் மறைந்து, எங்கும் அதிருப்தி ஏற்படலாயிற்று. எனினும், எல்பின்ஸ்டன் ஆட்சியில் மகாராஷ்டிரர்களுக்கு ஏற்பட்ட ஆனந்தம் வெறும் மாயை என்று சொல்ல முடியாது. ஆனால், இன்று அவ்விதமான ஆனந்தம் நமக்குத் திருப்தியளிக்காது. இத்தாலி, ஜெர்மனி, ருஷ்யா ஆகிய நாடுகளில் உள்ள மக்கள் அவரவர் அபிப்பிராயப்படி இன்று திருப்தியாய் வாழ்கிறார்கள். ஆனால், இந்தியாவில் வாழும் நாம், நெடுங்காலமாய்ப் பிறர் ஆட்சிக்குட்பட்டவர்களாயிருக்கிறோம். நம்முடைய தரித்திரத்தைப்

19. பொதுவுடைமை மற்ற இரண்டையும் விடக் கவர்ச்சி மிக்கது: விருத்தியாகக் கூடியது

போல் வேறெங்கும் பார்க்க முடியாது. தவிர, சம்பிரதாய உணர்ச்சி நிறைந்த நமது சமூகத்தில், சாதி அபிமானம் என்பது மிகவும் கவர்ச்சி தருவதாகத் தான் இருக்கும். இவ்விதமாக, இந்தியாவில் இரண்டு வகையான மக்கள் இருக்கிறார்கள். ஒரு வகையினர், ஏழை மக்களிடம் அனுதாபம் கொண்டு சமதர்மம் வேண்டுமென்கிறார்கள் ; மற்றவர்கள், சாதி அபிமானம் என்பதை அடிப்படையாக வைத்து, தேசத்தை ஒழுங்குபடுத்த நினைக்கிறார்கள். எனினும், இந்தியாவின் நிலைமையை எண்ணிப் பார்க்காமல், இவ்விஷயத்தைப் பட்சபாதமின்றிப் பொதுப்படையாக மட்டும் கவனிக்கும்போது, நாஸிஸமும் பாஸிஸமும் சமதர்மத்தைப்போல அவ்வளவு கவர்ச்சி யுடையவைகளாகவோ அபிவிருத்திக்கு இடங்கொடுப்பவைகளாகவோ தோன்றமாட்டா.

## மூன்றாவது பிரசினை

**கேள்வி :**—இப்போது நடைபெறும் ஆட்சிமுறைகளில் குறைபாடு இருக்குமாஞல், குறைபாடில்லாத ஆட்சிமுறை எவ்விதம் இருக்கவேண்டும்?

20. குறைபாடில்லாத ஆட்சி முறைக்குரிய நான்குவித லக்ஷணங்கள்.

**விடை :**—எந்த ஆட்சிமுறையானது, குறித்த ஒரு முறைதான் வேண்டுமென்று கருதாமல், காலத்திற்கேற்றபடியெல்லாம் தன் அமைப்பை மாற்றிக் கொண்டு வருகிறதோ, அதுவே சர்வோத்தமமான ஆட்சி முறை என்று எண்ண வேண்டும். ஆட்சி முறை என்பது வெறும் வாழ்க்கைத் தத்துவம் போன்றதன்று; வாழ்க்கை இந்தத் தத்துவத்தை ஆதாரமாய்க் கொண்டு நடைபெறக் கூடும்; இத் தத்துவத்தில் எவ்வித மாற்றமும் செய்ய இயலாது. மக்கள், குறித்த ஓர் ஆட்சி முறையை நடத்தி அதில் சோர்வடைந்து போஞல், பிறகு புதிய தொன்றைத் தேடுகிருர்கள். ஆஞல், அந்த ஆட்சி முறைக்குரிய சிறப்பான குண தோஷங்களால் விளையும் நன்மை தீமையை அவர்கள் கவனிப்பதில்லை. பால்ய விவாகமுறையில் பெரிதும் நலிந்து போன மக்கட்சமூகம், வயது வந்தபின் மணம் செய்யும் வழக்கத்தை மேற்கொள்ளுகிறது; இப்படியே, வயது வந்தபின் மணம் செய்யும் வழக்கத்தில் அதிருப்தி யடைந்த சமூகம், பால்ய விவாகத்தை

மேற்கொள்ளவும் கூடும். வாஸ்தவத்தில், சமூகம் இந்த நிலை அடைவதைத் தடுப்பதற்குத் தன்னடக்கமே அவசியமானது. விவாகமாவதற்குரிய வயதைமட்டும் நிர்ணயம் செய்துவிட்டால் சமூக முன்னேற்றம் ஏற்படாது. எல்லோருடைய விவகாரங்களையும் எல்லோரும் நிர்வகிப்பது என்கிற ஆட்சி முறையானது சமூகத்தின் அபிவிருத்தி எந்த அளவில் இருக்கிறதென்பதைப் பொறுத்ததாகும். ஆனால், இவ்விதமான எல்லா ஆட்சி முறைகளிலும், கீழ்க்கண்ட நான்கு வித லக்ஷணங்களும் தவறாமல் அமைந்திருக்க வேண்டும். அவையாவன :

(க) சமர்த்தர்கள் தங்கள் உழைப்பைப் பொதுஜன சேவைக்கே சமர்ப்பிக்க வேண்டும்.

(உ) மக்கள், தங்கள் தங்களையே முழுமையும் நம்பி வாழ்க்கை நடத்துவதோடு, பரஸ்பரம் ஒத்துழைப்பவர்களாயும் இருத்தல்வேண்டும்.

(ங) நாள்தோறும் கூட்டுறவோடு அவர்கள் வாழ்வதற்கும், எப்போதாகிலும் அவசியமேற்பட்டால், ஒத்துழையாமையையோ எதிர்ப்பையோ கடைப்பிடிப்பதற்குங்கூட, அஹிம்சையே ஆதாரமாய் இருக்கவேண்டும்.

(ச) நேர்மையாக வேலை செய்யும் பட்சத்தில், எல்லோருடைய உழைப்பும் சமமென்றே கருதவேண்டும். உழைப்பை அவரவர் கடமை என்ற அளவில் கருதினாலும் சரி, அதனால் வரும் ஊதியம் என்ற அளவில் கருதினாலும் சரி, ஒன்றே.

இந்த நான்கு அம்சங்களையும் இங்கே சிறிது விவரமாக ஆராய்வோம்.

௩

சமர்த்தர் என்று சொல்லும்போது, இயற்கையாகவே அதிக புத்திமான் அல்லது அதிக சக்திமான் (பலவான்) என்று பொருள்படும். இந்தப் பேதமானது உடற்கூறு பற்றியது; இதை முழுமையும் தவிர்ப்பதற்கு வழி ஒன்றும் இல்லை. தவிர, இன்று செல்வம் முதலான சாதனங்களின் துணையால் சமர்த்தர்களான ஒரு கூட்டம் இருக்கிறது. முதலில் கூறிய இரண்டு கூட்டங்களும், அதாவது புத்திமான்களும் சக்திமான்களும், இயற்கையாகவே உண்டானவர்கள். ஆனால், இந்த மூன்றுவது கூட்டம், வேறு காரணத்தைப் பொறுத்தது. இந்த மூன்று கூட்டங்களுக்கும், இயற்கையாகவோ சந்தர்ப்ப விசேஷத்தாலோ, மூன்றுவிதச் சாமர்த்தியங்கள் ஏற்பட்டிருக்கின்றன; இவை மக்களின் சேவைக்காகத்தான் ஏற்பட்டன வென்பதைப் பொதுமக்கள் மட்டுமன்றி இந்த மூன்று கூட்டத்தாரும் எப்போதும் நினைவிலிருத்துதல் வேண்டும். இவர்களுடைய சாமர்த்தியத்தை மக்களுடைய சேவையில் அவசியம் அர்ப்பணம் செய்ய வேண்டும் என்ற ரீதியில்தான், காலானுசாரத்தை ஒட்டி நிர்வாகம் நடத்துகின்ற ஆட்சிமுறையின் தன்மை இருக்க வேண்டும். மக்களுடைய வாழ்க்கையில் அறிவு நிரம்பும்படி செய்வதே புத்தியின் உபயோகமாகும். மக்களுடைய நன்மைக்காக, பராக்கிரமம் அல்லது வலிமை மிகுந்த செயல்களைச் செய்வதே சக்தி அல்லது

21. பொது ஜன அபிப்பிராயமானது சமர்த்தர்களைப் பொது ஜன சேவையில் செலுத்த வல்லதாக இருத்தல் வேண்டும்

பலத்தின் உபயோகமாகும். மக்கட் சமூகம் முழுமையிலும் உற்பத்தி செய்வதற்கான திறமை எங்கும் ஒழுங்காகப் பெருகும்படியும், உற்பத்தியான பொருள்கள் முதலியவை எங்கும் சமமாக விநியோகமாகும்படியும் செய்வதே செல்வத்தின் உபயோகமாகும். சமர்த்தராயுள்ளவரொருவர் தம்முடைய சக்திகளை மக்கட் சமூகத்தின் நன்மைக்காக இந்த விதம் உபயோகிக்காவிட்டால், அவரை, அரசாங்க விதிகளை அனுசரித்து ஆலோசிக்கும்போது, குற்றவாளி என்றே பொதுஜன அபிப்பிராயம் கொள்ளவேண்டும்.

22. பொதுஜன அபிப்பிராயத்தை அனுசரித்து நடக்கும் ஆட்சி முறையிலும்கூடக் கட்டுப்பாட்டுக்கு இடமிருக்கும்

மேற் சொன்ன விஷயத்தில் பொதுஜன அபிப்பிராயம் ஏற்பட்டுவிட்டதானால், அந்த அபிப்பிராயத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு, அவசியமானால் சட்டமும் செய்யலாம். பொதுஜன அபிப்பிராயத்தை அனுசரித்து, அஹிம்சா பூர்வமாக நடைபெறும் ஆட்சியிலும் கூட, சட்டமூலமாய்த் தடை அல்லது கட்டுப்பாடு செய்வதற்கும் அவசியம் உண்டு. கேவலம் தண்ட பயத்தினால்தான் மனித சமூகம் நன்னெறியில் ஒழுகுகிறது என்று பொதுவாக ஏற்பட்டுள்ள அபிப்பிராயம் தவறு என்று அனுபவத்திலிருந்து சொல்லலாம். உண்மை என்னவென்றால், மக்கள் நன்னெறியில் நடக்கும்படி செய்வதற்குப் பொதுஜன அபிப்பிராயத்தைக் கண்டு ஏற்படுகிற அச்சம், அல்லது அதனிடத்து உண்டாகிற மரியாதைதான் அதிக உபயோகமுடையதாய் இருந்திருக்கிறது, இப்போதும் இருந்துவருகிறது. நீதிமார்க்கத்தை அனுசரித்து நடக்கும்படி செய்வதற்கு, பொதுஜன அபிப்பிராயத்தின் கண்டிப்பு இல்லாமலே, அந்த

மார்க்கத்தில் ஒழுகுகிற உத்தம மனிதர் சிலரேனும் சமூகத்தில் எப்போதும் எல்லா இடத்திலும் இருக்கிருர்கள். இதுபோல, பொதுஜன அபிப்பிராயத்தை அலக்ஷயம் செய்துவிட்டு அநீதி மார்க்கத்தில் செல்கிற சில அவிவேகிகள் அல்லது ஒழுக்கவீனர்களும் இருக்கிருர்கள். ஆனுல், பொதுமக்கள் அனைவரும், அல்லது மக்களில் பெரும்பான்மையோரான சாதாரண மக்கள், பொதுஜனஅபிப்பிராயத்துக்கு உவந்ததெதுவோ அதைப் பின்பற்றி நடந்து, விலக்கானதெதுவோ அதை விட்டு நீங்குகிருர்கள். இவ்வித இயல்பான பொதுஜன அபிப்பிராயந்தான், சட்டம் அல்லது கட்டுப்பாட்டுக்கு ஆதாரமாகிறது. அதற்கு மக்களுள் பெரும்பான்மையோர் எப்போதும் மரியாதை செலுத்தி வருகிருர்கள். இந்தப் பெரும்பான்மையோரைச் சேராமல் பாக்கி இருக்கிற ஒழுக்கவீனரான மக்களைப் பலவந்தமாய்க் கட்டாயப்படுத்தி வைப்பதற்குப் பதிலாக, மகா புருஷர்கள் என்று சொல்லத் தக்கவர்கள் சிலரோடு இவர்களைச் சேர்த்துவைக்க வேண்டும். அதாவது, எவர் சட்டத்துக்கு அடங்கி நடப்பதில்லையோ அவரைச் சட்டமே தேவை இல்லாதவர் வசம் ஒப்புவித்துவிட்டு, மற்றுள்ள சாதாரண சமூகமானது சட்டத்தை அனுசரித்து நடந்து வரவேண்டும்.

23. லோபியும் திருடனைப் போலத் தண்டிக்கத் தக்கவன்

இன்று உலகம் திருடனை இழிவாகவே கருதுகிறது. பொருளைக் குவிப்பவனையும் லோபியையும் கூட இவ்விதமே கருத வேண்டும். அதாவது, திருடன் எப்படி சட்டப்படிக் குற்றவாளியாகிருனே, அதுபோல, லோபியும் குற்றவாளியென்றே பொதுஜன அபிப்பிராயம் ஏற்படவேண்டும். கேளாமல் பிறருடையது எதையும்

எடுப்பது பெருங்குற்றமென்று, அறிவுடைய பெற்ரோர் தங்கள் குழந்தைகளுக்கு இளம் பிராயம் முதல் போதிக்கிருர்கள் ; அதுபோலவே, கேட்கும் போது கொடுக்காமலிருப்பது, கல்வி சாஸ்திர ரீதியாகக் குற்றமென்று கண்டிப்பாய்க் கருதவேண்டும். இந்தத் தத்துவம் மிகவும் சாமானியமானதே ; எனினும், இது பொதுவான நடைமுறையில் அமுலுக்கு வரவில்லை. அசுவபதி என்ற அரசன் தன் ராஜ்யத்தின் மகிமையைப் பின்வரும் வாக்கியத்தால் வருணித்தான் என்று உபநிடதம் கூறுகிறது: "நமே ஸ்தேனோ ஜனபதே ந கதர்ய:" (எனது ராஜ்யத்தில் திருடனுமில்லை லோபியுமில்லை.) இதன் கருத்து என்னவென்ருல், அவ்வரசன் இவ்விருவரையும் ஒரே ரகமென்றே கருதுகிருன் ; திருடனைத் தோற்றுவிப்பவன், லோபியே ; லோபியின் வார்சாக வரும் புதல்வனே திருடன் என்பதாகும். இந்த அபிப்பிராயத்தைச் சட்டத்தில் அமைப்பது பெரிய கஷ்டமன்று.

24. செல்வத்தின் பிரயோசனம்.

செல்வருடைய பொருளைப் பலாத்காரமாக அவர்களிடமிருந்து பறித்துவிட வேண்டுமென்று சொல்வதெல்லாம் வீணை பேச்சு. வாஸ்தவத்தில், செல்வர்கள் தங்கள் பொருளை மேலும் மேலும் சேமிப்பதற்கென்றே வைத்திருக்கவில்லை. பதவி, சுகம், எதிர்கால வாழ்க்கையின் நன்மை, பெண்டு பிள்ளைகளின் க்ஷேமலாபம், தானசீலர் என்ற கியாதி வரவேண்டுமென்ற ஆசை ஆகிய இத்தனைக் காரியங்களையும் எண்ணியோ அல்லது இவற்றில் சிலவற்றை எண்ணியோ அவர்கள் பொருள் சேமிக்கிருர்கள். இவை யாவும் அவர்களுக்கு எளிதில் கைகூடுவதற்கான ஓர் யுக்தி ஏற்பட்டு, கவலையற்றிருக்கவும் முடியு

மாஞல், இந்த நிலைமை வேண்டாம் என்று அவர்கள் சொல்லமாட்டார்கள். தவிர, செல்வருடைய செல்வத்தை இன்று உடனுழைப்பவர்களுக்கும் ஏஜென்டுகளுக்கும் மற்றவர்களுக்குமாகப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதுவன்றி வேறுவகையில் அந்தச் செல்வத்தை வினியோகம் செய்வதற்கு வழியில்லை. செல்வர்கள் என்றும் தங்கள் செல்வத்தையெல்லாம் தங்கள் காரியஸ்தர் வசம் ஒப்புவித்துவிட்டு, காரியஸ்தர் தங்களை வஞ்சிப்பார்களோ என்ற சந்தேகத்தோடேயே வாழவேண்டியிருக்கிறது. இருந்தாலும், அவர்கள் வஞ்சிக்கமாட்டார்கள் என்றெண்ணி ஒருபக்கம் திருப்தியும் அடைந்துவருகிருர்கள். இதற்குப் பதிலாக, அரசாங்கமானது, சமர்த்தர்களுடைய செல்வமெல்லாம் பொதுஜன நன்மைக்கான காரியங்களுக்காகத்தான் செலவாகிறது என்ற உறுதி உண்டுபண்ணுவார்களாஞல், அவர்களுக்குத் தாங்களும் மக்களுக்கு உபயோகமாக இருக்கிருர்கள் என்ற எண்ணம் உண்டாகும். அதோடுகூட, தாங்கள் இவ்விதம் கொடுக்கும் செல்வத்திற்குப்பதிலாக,பதவி முதலாக அவர்கள் விரும்புகிறவை அனைத்தும் எந்த விதத்திலும் முன்னிருந்ததற்குக் குறையாமல் கிடைக்கும் ; இப்படிக் கிடைப்பது முன்னிருந்ததற்கு அதிகமாகவும் உண்மையாகவே லாபமாகவும் இருக்கும்.

25. உதாரணம்: ஆசிரியவர்க்கம், பண்டும் இன்றும்

பண்டைக் காலத்தில் வித்துவாஞயுள்ள ஆசிரியர் ஏழையாகவே இருந்தார்; அவருடைய அகவாழ்க்கை ஒருபுறமிருக்க, அவருடைய புறவாழ்க்கை இன்பமற்றதாய் இருந்ததென்று கருதக்கூடாது. அவர் செல்வம் இல்லாமலே வாழ்ந்தார் என்ருல், செல்வம் பற்றிய கவலையே அவருக்கு இருந்ததில்லை என்று கொள்ள

வேண்டும். அவருக்கு அவசியமாயிருந்த சேவை அவ்வளவையும் சிறிதும் மிச்சமின்றி அவருடைய மாணுக்கர் செய்துவந்தார்கள். சில சமயம், சக்கரவர்த்திகூட அவருடைய அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டிருந்தார். தாம் கல்வி போதிக்கும் விஷயத்தில் யார் தலையிட்டாலும், அதற்கு அவர் பணிந்ததில்லை. அவருக்குத் தீர்க்க ஆயுள் இருந்தது. ஆனால், இந்த விதமான ஆசிரிய வர்க்கம் உண்மையில் இருந்ததா என்பதைப்பற்றிச் சிலர் சந்தேகிக்கலாம். ஆயினும், அப்படி ஓர் ஆசிரியவர்க்கம் இருந்திருக்குமானால், அது இதைவிடக் குறைந்த மரியாதையுடையதாகவோ, குறைந்த சுகமுடையதாகவோ, குறைந்த புகழ் உடையதாகவோ இருந்திருக்கவும் முடியாது, இருக்கவும் இராது. ஆனால், இக்காலத்து ஆசிரியர் புத்தகங்களுக்கு ஆசிரியரே தவிர, மாணுக்கருக்கு ஆசிரியரல்லர். அதாவது, அவருக்கு மாணுக்கர் வாழ்க்கையில் எவ்வித ஸ்தானமுமில்லை, மாணுக்கர்களுக்கும் அவருடைய வாழ்க்கையில் எவ்வித ஸ்தானமும் இல்லை. இவ்விதம் பரஸ்பர அன்பு குடிகொள்வதற்குப் பதிலாக, ஆசிரியர் அதிகப்பணம்பெற்றுக்கொள்கிருர். இந்தப் பணத்தை, நோய் முதலியவை காரணமாக, டாக்டர்கள் முதலியோர் அவரிடமிருந்து பறித்துவிடுகிருர்கள். இதன் பலனுய், முன்னைவிட எவ்விதத்திலும் அவர் லாபம் அடையவில்லை. அவருக்குச் செலவு செய்வது பொதுமக்கள் தாங்கக்கூடாத செலவாகிறபடியால், இவர்களுக்குச் சேவை செய்யும் சந்தர்ப்பம் அவருக்கில்லாது போகிறது. ஆகவே, இவ்விதம் உலக முழுவதையும் விரோதம் செய்துகொண்டு பொருளைச் சேர்த்து வைப்பது நன்மைக்கான காரிய

மன்று என்பதை ஒவ்வொரு மனிதரும் தாமே உண ரும்படி செய்வதே அரசாங்கம் அல்லது பொதுஜன அபிப்பிராயத்துக்கு உரிய பொறுப்பாகும்.

கல்வியானது கொடுத்தாலும் குறைவுபடாது என்று சாமானியமாய்ப் பழமொழி ஒன்று வழங்கி வருகிறது. ஆனால், இவ்விஷயத்தில் செல்வத்துக்கும் கல்விக்கும் பலன் நேர்மாறானது என்ற அபிப்பிராயம் இருக்கிறது. உண்மையில் இப்படி மாறுபாடு இல்லை. அர்த்த சாஸ்திரத்தில், செல்வத் தைக் கொடுப்பதனால் ஏற்படுகிற செல்வ அபிவிருத் தியை மக்களுடைய பணப்பெருக்கம் என்று சொல்வார்கள். வட்டிக் கடைக்காரன் தன்னுடைய செல்வத்தைக் கடனாய்க் கொடுக்கும்போது, தன் செல் வம் பெருகுகிறதென்றே எண்ணுகிறுன். ஆகவே, இவ்விதம் செல்வத்தைப் பகிர்ந்து கொடுக்கும்போது அது முன்னிலும் விருத்தி யடைகிறதென்பதை உணர் வதில் கொஞ்சமும் கஷ்டமில்லை. ஆனால், இவ்விதம் பகிர்ந்து கொடுப்பதற் கனுகூலமாகச் சமூகத்தை அமைக்கவேண்டும். இவ்விதம் மாற்றியமைப்பது, ஆட்சி முறையில் அடங்கிய காரியங்களில் ஒன்று. சமூகந்தான் தனி மனிதரின் செல்வத்தை வைத்து வைக்கும் ‘பாங்கி’ என்று கருதவேண்டும். தனிப் பட்ட மனிதருடைய பணம் ஒரு பாங்கியில் எவ்வளவு பத்திரமாக இருக்கக் கூடுமோ அதைவிட அதிகப் பத்திரமாகத்தான் சமூகரூபமான இந்தப் பாங்கியில் இருக்கும்.

26. கொடுப்பதனால் செல்வம் பெருகுகிறது

அசமர்த்தர்களுக்குச் சேவை செய்வதில்தான் சமர்த்தர்களுடைய சக்தியெல்லாம் சோபிக்கிறது; மனிதர்களுக்கு இன்பமும் இதில்தான் பிறக்கிறது. ஏனெனில், மனிதன் சமூகமாய்க் கலந்து வாழ்பவன்; ஆகவே, தான் ஏதேனுமொன்றை அனுபவிக்கும்போது மற்றொருவருடன் கலந்து அனுபவிக்காவிட்டால் அவனுக்கு எந்த இன்பமும் உண்டாகிறதில்லை. இது தவிர, செல்வர்கள், மாட்டுக்கொட்டிலில் அடைபட்டிருப்பதுபோலத் தங்களை அடைத்துக்கொண்டு தங்களைச் சுற்றியுள்ள ஏழைமக்கள் பட்டினியால் கஷ்டப்படுவதைக் கண்டும் அறிந்தும்கூட, ஓரளவுக்குத் தாங்கள் மகிழ்ச்சியுடன் தான் இருக்கிறார்கள் என்பதும் உண்மை. மனித சுபாவத்திற்கே முரணான இந்த விதமான வாழ்க்கையை எவ்விதம் நடத்தமுடியும்? இதற்குப் பதில், இந்தச் செல்வர்கள் உலகத்திலுள்ள மற்ற மக்களுக்கு விலக்கானவர்கள் என்பதாகாது. ஒவ்வொருவனும் தனது சொந்த வருவாய்க்குப் பொறுப்புடையவன் என்றும், அதை அனுபவிக்கும் உரிமையுடையவன் என்றும், சமூகத்தில் ஓர் அபிப்பிராயம் நிலவுகிறது. இது, பாதி மெய்யும் பாதி பொய்யும் கலந்ததாகும்; இதுவே மேல் கேட்ட கேள்விக்குப் பதிலாகும். எல்லோரும் தங்கள் சக்திக்கு இயன்ற அளவு சம்பாதிக்கத்தான் வேண்டும். எவனொருவன் சக்தியுடையவனாய் இருந்தும், வருவாய் தேடிக்கொள்ளவில்லையோ, அவனுக்கு எந்த உரிமையும் இல்லை. அன்றியும், எவனொருவன் தன் சக்திக்கியன்றமட்டில் வேலைசெய்கிறானோ, அவன் பொதுவாய்க் கிடைக்கிற

27. சவதில்தான் மனிதனுக்கு இன்பம் பிறக்கிறது, ஆனால் தன்னுடையது என்ற உரிமை இதற்குப் பாதகம் செய்கிறது.

வருவாயில் சமமான பங்குபெற உரிமையுடையவன் என்பது முழுமையும் மெய்யாகும். மனிதர்களுடைய சக்தியில் எந்தவிதமான வித்தியாசமும் இல்லாத பட்சத்தில், அப்போது அவர்களுடைய வருவாயில் ஏதேனும் ஏற்றத் தாழ்வு இருக்குமானுல், இதற்குக் காரணம் என்னவென்ருல், அவர்களில் ஒருவர் மற்றவரைவிட அதிகமாகவோ குறைவாகவோ உழைத்ததேயாகும்; அந்த விஷயத்தில் எவ்வித வரும்படியிலும், ஒவ்வொருவருக்கும் சமமான பொறுப்புண்டென்றும் சமமான உரிமையுண்டென்றும் கூறுவது நியாயமாயிருக்கும். மற்றப்படி, ஒருவருக்கும் மற்றவருக்கும் வேலைத்திறமையில் வித்தியாசமிருக்கிறதென்று தெளிவாகத் தெரியும்போது, இவ்வளவு நேரம் வேலை செய்ததற்கு இவ்வளவு கூலி கொடுக்க வேண்டும் என்று சொல்லும் ரீதியில் எல்லோருக்கும் சமமாய்க் கணக்குப் போட்டு முடிவு கட்டுவது தவருகும்.

28. குடும்பத்திலுள்ள பொருளாதாரத் தத்துவத்தைச் சமூகத்திலும் பிரயோகிப்பது அரசாங்கத்தின் கடமை. குருடனும் முடவனும் என்ற நியாயம்

குடும்பங்களில் எங்குமே ஒரு பொருளாதாரத் தத்துவம், அதிகமாகவோ குறைவாகவோ வழங்கி வருவதைக் காணலாம். அந்தத் தத்துவத்தின் சாரத்தை மனித சமூகத்தின் முழுமைக்கும் பிரயோகிப்பதுதான் அரசாங்கத்தின் கடமை. இப்படிப் பிரயோகிப்பது குடும்பத்தின் சக்தியைக் கடந்தது. அரசாங்கம் இவ்விதம் செய்ய முடியாவிட்டால், அவ்வரசாங்கம் இருக்கவேண்டிய அவசியமேயில்லை. இதைச்செய்வதற்குப் பதிலாக **அரசாங்கமானது** பொருளாதார ஏற்றத்தாழ்வை

உண்டுபண்ணி வருமானல், அந்த அரசாங்கத்தை ஒழித்து அராஜகம் ஏற்படுத்துவதே நியாயமாகும். அரசாங்க நிர்வாகிகள், தங்களுடைய ஆட்சி எவ்வளவு கேடாயிருந்தபோதிலும்கூட, மக்களை அதற்குக்கீழ்ப் படும்படி செய்யவேண்டும் என்ற எண்ணத்தோடு, அராஜகத்தால் விளையும் துன்பத்தைப்பற்றி மக்கள் மனத்தில் பெரும் பீதியை உண்டுபண்ணியிருக் கிருர்கள்.

சமர்த்தர்கள் எல்லோரும் சாமர்த்தியம் உடைய வர்களென்றே நாம் நினைக்கிறோம். ஆனல், அசமர்த் தர்கள் என்று நினைக்கிற பெருவாரியான மக்களு டைய சகாயமில்லாமல், அந்தச் சமர்த்தர்களுடைய காரியம் கொஞ்சமும் நடவாது. இந்த அர்த்தத்தில் அந்தச் சமர்த்தர்கள் யாவரும் அசமர்த்தர்களே யாகின்றனர். இதற்கு மாருக, யாரை நாம் அசமர்த் தர்கள் என்று சொல்கிறோமோ அவர்களிடத்திலும் கூட, அவர்களுக்குரிய சிறப்பான சாமர்த்தியம் இருக்கவே செய்கிறது. இது இல்லாமல் இராஜ்ய நிர்வாகமும் நடைபெருது. அதாவது, இருவரில் ஒருவர் சகாயமில்லாவிட்டால், இருவரும் அசமர்த்தர் கள்; இருவரும் பரஸ்பரம் சகாயம் செய்தால்தான் சமர்த்தர்களுண்டாக முடியும். இது, சாங்கிய தத்துவ சாஸ்திரத்தில் சொல்லுகிற 'குருடனும் முட வனும்' என்கிற நியாயத்தைப் போலிருக்கிறது. குருடன் முடவனைத் தூக்கிக்கொள்ள, இருவருமாகப் போகிருர்கள். ஒருவனுடைய உதவியின்றி மற்றவன், போகவேண்டிய இடத்தை யடைய முடியாது. இது போலவே, ஓர் அரசாங்கத்திலுள்ள சமர்த்தர், அசமர்த்தர் என்ற இந்த இரண்டுதிறத்தாரும் ஒன்று

சேர்ந்து பாடுபட்டால்தான் பரஸ்பரம் ஹிதம் உண்டாகும் என்பதை உணரமுடியாவிட்டால், அந்த அரசாங்கம் எவ்வித அரசியலொழுங்கு முடையதன்று ; அராஜகத்தைவிட இன்னும் அதிக அராஜகமானதென்றே அதைக் கருதவேண்டும். சுருங்கக் கூறுவதானுல், ஆட்சிமுறையின் அதிகாரமானது சமர்த்தர்களிடம்தான் இருக்கவேண்டு மென்பது வெளிப்படை ; ஆனுல், அந்த அதிகாரம் மக்களுக்குச் சேவை செய்வதற்காகவென்றே ஏற்பட்ட அதிகாரமாகும்.

உ

மேற்கூறிய நிலைமை சித்திக்கவேண்டுமாஞல், அதாவது, சமர்த்தர்களிடம் சேவைக்காக மட்டும் அதிகாரம் இருக்கவேண்டுமே யொழிய வேறெதற்கும் அதிகாரம் இல்லாதிருக்கவேண்டுமாஞல், பொது மக்கள் திறமையற்றவர்களாகவோ பலவீனர்களாகவோ ஒரு போதும் இருத்தலாகாது. அவர்களிடம் தன்னம்பிக்கை நிறைந்திருக்கவேண்டும் ; தங்கள் வலிமை, அதாவது வேறெவருடைய சகாயமுமில்லாமல் தங்களிடமுள்ள சுதந்திரமான வலிமை எவ்வளவு பெரியது என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டிருத்தல் வேண்டும். அதாவது, கைத்தொழில்கள் அவர்கள் வசம் இருத்தல் வேண்டும். பொது மக்கள் அனைவரும், மில்லில் உழைக்கும் கூலியாட்கள் போல, பெரும்பான்மையும் பிறர்வசமுள்ள தொழில்

29. கிராமங்கள் சுயம்பூர்ணமாயிருக்க வேண்டும் ; கிராமக் கைத் தொழில்கள் இதைச் செய்யும்

களை நம்பியே வாழ்க்கை நடத்துவது வேண்டத் தகாதது. ஒவ்வொரு கிராமமும், செல்வநிலையைப் பொறுத்தவரையில், அனேக அம்சங்களில் சுயம் பூர்ணமாக, அதாவது தன் தேவையைத் தானே பூர்த்தி செய்துகொள்வதாக ஆதல்வேண்டும் ; சமர்த் தர்கள் சுயேச்சையாகவே பாமர மக்களுக்கு உதவ வேண்டும் ; பாமரமக்கள் தாங்களாகவே சமர்த்தர் களுக்கு உதவவேண்டும் : இத்தகைய நிலைமைதான் நிலவவேண்டும். மக்கள் பிறர் கையை எதிர்பார்த்து வாழ்க்கை நடத்தாமல், தங்களையே நம்பி வாழ்க்கை நடத்த முடிந்தால்தான் இது சாத்தியம்; இதைத்தவிர வேறு வழியில்லை. வாழ்க்கைக்குரிய முதன்மையான தேவைகள் என்று எவற்றைக் கூறுகிறோமோ அவை யனைத்தையும், இரண்டாந்தரத் தேவையென்று எவற்றைக் கூறுகிறோமோ அவற்றுட் பெரும்பகுதி யையும், கிராமத்து மக்கள் தங்கள் தங்கள் கிராமத் திலிருந்தே பூர்த்தி செய்துகொள்ளவேண்டும். இவை நீங்கலாக, இரண்டாந்தரத் தேவைகள், இன்னும் மற்றத்தேவைகள் என்னென்ன உள்ளனவோ அவை யனைத்தையும், அரசாங்கமானது தன் சமர்த்தர்கள் மூலமாய்ப் பூர்த்திசெய்து தரவேண்டும்.

குடியானவன் தன் நிலத்தில் விளைந்த பொருளைக் கொண்டு, என்ன வஸ்துக்களைச்செய்து முடித்துத் தர முடியுமோ அவற்றையெல்லாம் தன் வீட்டிலேயே அவன் செய்து முடிக்கவேண்டும். அவை போக மீதியுள்ளவற்றைக் கிராமத்திலேயே செய்துமுடிக்க வேண்டும். உண்மையில் இந்தியாவில் இன்று என்ன நடக்கிறதென்றால், குடியானவன் தன் நிலத்தில் விளைகிற பொருள்களை மூலப் பொருள்

களாக உற்பத்தி செய்து தருவதைத் தவிர வேறொன்றும் செய்வதில்லை. எள்ளைப் பயிரிட்டு விற்றுவிடுகிறான்; தன் சொந்த உபயோகத்துக்கான எண்ணெய்க்கே அந்த எள்ளை உபயோகிப்பதில்லை; இப்படியிருக்க, மற்றவர் உபயோகத்துக்கு இவன் எண்ணெய் தருவது எங்ஙனம் கூடும்? இன்று அவன் பருத்தி பயிரிடுகிறான்; ஆனால், விலைக்குத் துணி வாங்குகிறான். அது மட்டுமன்று, பருத்தி விதையும் விலைக்கு வாங்கித்தான் விதைக்கிறான்; மாட்டுத் தீனிக்கு வேண்டிய பருத்தி விதையும் விலைக்குத்தான் வாங்குகிறான். தனக்குள்ள ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி செய்யவேண்டி, தான் சாகுபடி செய்த தானியங்களை அவன் விற்றுவிடுகிறான்; இப்படி விற்பதில் அவனுக்கு மிக்க நஷ்டம் விளைகிறது. இவ்விதம் விற்றுவந்த பணத்தைக்கொண்டு, தனக்கு வேண்டிய மற்றெல்லா வஸ்துக்களையும் அவன் வாங்குகிறான்; இங்கும் பொருள் விரயந்தான் ஏற்படுகிறது. மக்கள் இத்தகைய பராதீனமான நிலையிலிருப்பது, ஜனசமூகத்துக்கும் நல்லதன்று, அரசாங்கத்துக்கும் நல்லதன்று, சொற்பத் தொகையினரான சமர்த்தர்களுக்கும் நல்லதன்று. ஆகவே, பயிர்த்தொழிலுக்குத் துணையாக, நாடெங்கும் எல்லாக் கிராமக் கைத் தொழில்களும் ஒன்றையொன்று தொடர்ந்து நடைபெற வேண்டும்; அவை ஸ்திரமான நிலையிலிருக்கும்படி அரசாங்கமே கவனித்துப் பாதுகாத்து வரவேண்டும்; இவ்விதமிருப்பதே ஒரு லக்ஷ்ய சமூக அமைப்பின் இயல்பான உருவமாகும். சம்பத்தனைத்தையும் மழைத்துளி எங்கும் ஒத்து விழுவதுபோல, வீடு தோறும் சமமாக விபாகித்துத் தருவதற்கும், மக்கட்

சமூகம் அல்லது பாமரமக்கள் தங்கள் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்துகொள்ளும்படி செய்வதற்கும், சமர்த்தர்களான சிலர் மட்டும் மற்றப் பொதுமக்களுக்குச் சேவைசெய்வது என்பது மாத்திரமன்றி பொதுமக்களும் தங்கள் தொகைப் பெருக்கமாகிய பலத்தால் சமர்த்தர்களுக்குச் சேவை செய்வதற்கும், பொதுமக்களுக்குள் பரஸ்பரக் கூட்டுறவைத் திடமாக்குவதற்கும், கிராமக் கைத்தொழில்களைப் பேணுதல் என்பதைவிடச் சுலபமாகவோ இயல்பாகவோ திறமை வாய்ந்ததாகவோ உள்ள திட்டம் வேறெதுவும் இல்லை.

30. சமதர்மவாதிகளின் திட்டம் அபாயகரமானது

இதற்கு மாருக, செல்வமனைத்தையும் முதலில் ஓரிடத்தில் குவிக்கவேண்டும், பின்னர் அதைச் சரியானபடி பிரித்துக் கொடுக்கவேண்டும் என்று சமதர்மவாதிகள் மற்ரொரு யோசனை கூறுகிருர்கள். ஆனால் இதில், மூன்று வித அபாயங்கள் இருக்கின்றன. செல்வத்தை உற்பத்தி செய்கையில், அந்த உற்பத்தி மூலமாகவே அதை எல்லோருக்கும் சமமாக வினியோகித்து விடுவதற்குப் பதிலாக, இந்த யோசனையின்படி செல்வத்தை முதலில் ஓரிடத்தில் சேர்த்துவிட்டுத் தான் பிறகு சமமாக வினியோகிக்க வேண்டியிருக்கிறது. பொருளாதார நோக்கத்தோடு இதைப் பார்க்கும்போது, இதில் இரண்டு வேலைகள் ஏற்படுகின்றன. இது முதல் அபாயம். இனி, இவ்விதம் ஒன்று திரட்டிவைத்த செல்வத்தைப் பாதுகாக்கத் தனியான ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கிறது; செய்துங்கூட, இது அன்னியர் ஆக்கிரமிப்புக்கு

எளிதில் இடமாகிறது. இது இரண்டாவது அபாயம். இவையல்லாமல், சமூக அமைப்புப் பெருஞ் சிக்கலாகி விடுகிறது; மிக்க நுணுக்கமும் ஏற்படுகிறது. அதன் அங்கங்கள் யாவும் அதிக அளவுக்கு ஒன்றை யொன்று நம்பியே வாழ நேர்கின்றன. ஆதலால், இந்தச் சமூக அமைப்பு ஓர் யந்திரம்போல் ஆகிவிடுகிறது; எந்தச் சமயம் இதன் பாகங்களில் அதிக உராய்வு அல்லது பூசல் ஏற்பட்டு முழு யந்திர மூமே சீர்குலைந்துவிடும் என்பது நிச்சயம் சொல்ல முடியாமலிருக்கிறது. இது மூன்றுவது அபாயம்.

அன்னியோன்யச் சார்பு என்பது மிகவும் நல்லதுதான். ஆனுல், இந்த அன்னியோன்யச் சார்பு என்பது, தாமே வலிமை யுடையவர்களாகவோ, தம்மைத் தாமே நம்பி வாழ்பவர்களாகவோ உள்ள இரண்டு தொகுதிகளிடையேதான் இருக்கமுடியும். மற்றவர்களை நம்பி வாழும் தொகுதிகளிடையே ஏற்படும் அன்னியோன்யச்சார்பு எத்தகையது என்றல், ஒரே வண்டியில் பூட்டப்பெற்றுள்ள இரண்டு மாடுகளும் தங்கள் பாரத்தைத் தாங்களே இழுக்க முயல்வதற்குப் பதிலாக, ஒரு மாடு மற்ற மாட்டின்மீது அப் பாரத்தைச் சுமத்திவிட முயல்வது போலாகும். முக்காலிக்கு மூன்று கால்கள் உள்ளன. இம் மூன்று கால்களுக்கு மிடையே பரஸ்பரம் ஒத்துழைப்பு இருக்கிறது; எனினும், ஒவ்வொரு காலும் அதனதன் பலத்தாலேயே நிற்கிறது. இது மிகவும் எளிதான யந்திர தத்துவம். கால்களுள் ஒன்று ஒடிந்துபோனுல், அதைமட்டும் சரிப்படுத்தினுல் போதும். ஆனுல்,

31. அன்னியோன்யச் சார்பு என்பது சிக்கலில்லாமல் எளிதாயிருக்க வேண்டும்.

யந்திரம் என்பது இப்படியன்று ; யந்திரத்தில், ஒரு சக்கரத்துக்குள் மற்றொரு சக்கரம், அதற்குள் இன்னொரு சக்கரம் என்று இம்மாதிரியாக ஒன்றுக்குள் ஒன்றாக எத்தனையோ சக்கரங்கள் கொண்ட சிக்கலான அமைப்பு இருக்கிறது. இச்சக்கரங்களுள் ஏதேனும் ஒன்று உடைந்துபோனால், மற்றச் சக்கரங்கள் சுழல்வதும் இதனால் நின்றுபோய் விடும் ; யந்திரம் முழுமையுமே நிற்க நேரும் ; பழுது பார்ப்பதென்பதும் மிகவும் கஷ்டமான காரியம். இது ஒருபுறமிருக்க, யந்திரம் ஓடும் சமயத்தில்கூட, சிக்கலான யந்திரத்தில் பல பாகங்களில் உராய்வு ஏற்படும் ; இவற்றுக் கெல்லாம் விஸ்தாரமாக எண்ணெய் போடவேண்டி யிருக்கும்.

சம்பத்தை யெல்லாம் ஒருசேரத் திரட்டிப் பின் வினியோகம் செய்வதற்கான முயற்சிகள் யாவும் அரசாங்கத்துக்கு மிக்க தொந்தரவு தருவன ; அன்றியும், முடிவில் இவை ஹிம்சையை நாடுவனவாகி விடுகின்றன. ஆதலால், சமூக அமைப்பில் அதிகச் சிக்கல் உண்டுபண்ணுவதைத் தவிர்த்து, அரசாங்கத்துக்கு மிக்க தொந்தரவு விளைவிக்காமலும் ஹிம்சையை நாடாமலும் இருக்க விரும்பினால், கிராமவாசி ஒவ்வொருவரும் தம்மைப் பொறுத்த ஆட்சியைத் தாமே நடத்திக்கொள்ளும்படி பார்க்கவேண்டும் ; நன்றாய் முறுக்கிய கயிற்றில் பொருந்திய நார்த் துசும்புகள் எப்படி ஒன்றையொன்று உறுதியாய்ப் பற்றியிருக்கின்றனவோ, அப்படியே கிராமவாசிகளும் ஒற்றுமையாய் உழைக்கும்படி பார்க்கவேண்டும். இந்த நிலைமை ஏற்படும்

32. சுயம் பூர்ணமான அரசு, மக்களினம் என்பவை பற்றிய விசால நோக்கு.

போது, இராமவாசியான விவசாயியும், விவசாயிகள் பலர் கொண்ட இராமமும் ஒரு சேரத் திரண்டு, தனி யாட்சிக்கேற்ற சிறு பிரிவா யமைவார்கள்; இப் பிரிவானது, இயற்கையாக அமைவதாயும் ஏறக் குறைய சுயம்பூர்ணமாயும் இருக்கும்.

இவ்விதச் சுய ஆட்சி நிலவும் கிராமங்களனைத் தையும் ஒன்ருய்ச் சேர்த்துவைக்கும் சக்தியாக இருப் பது, பெயரளவில் அந்தந்தப் பிராந்திய அரசியல் ஸ்தாபனம் என்று சொல்லத் தக்க ஸ்தாபனமாகும். இந்தப் பிராந்திய ஸ்தாபனங்கள் அல்லது அரசுகளை ஒன்றுபடுத்தும் சக்தியானது, பெயரளவில் தேசிய ஸ்தாபனம் என்று கூறத்தக்க ஸ்தாபனமாகும். இவ் விதத் தேசிய ஸ்தாபனங்கள் பலவற்றை ஒன்றுபடுத் தும் சக்தியானது, பெயரளவில் அகில தேச மக்கள் ஸ்தாபனம் என்று கூறத்தக்க ஸ்தாபனமாகும். அகில தேச மக்களின் அரசியல் ஸ்தாபனமான இந்த ஸ்தாபனத்தில், பிரதிநிதிகள் சபை யொன்று இருக் கும். (இந்த ஸ்தாபனத்தை, மக்களினத்தின் பொது ஸ்தாபனம் என்று நாம் கூறியது பெயரளவில்தான் என்பதைக் கவனிக்க வேண்டும்.) இப் பிரதிநிதி கள், வாழ்க்கையில் ராகத்துவேஷ மற்றவர்களாயும், அறிவு மிக்கவர்களாயும் இருப்பார்கள். இந்தச் சபை யினிடம் தண்ட சக்தி (அதாவது தண்டனை அல்லது ஹிம்சையை உபயோகித்தல் என்பது) இராது. ஆனல், இதனிடம் நீதியால் விளையும் சக்தி ஏராள மாயிருக்கும். இவ்வாறு மக்களினம் முழுமையும் ஒன்ருய்க் கருதுகிற விசால நோக்கு மனித னிடம் ஏற்படவேண்டும். மத்திய அரசானது மிகுந்த சக்தி யுடையதா யிருந்தாலன்றி, அத

ஞல் எவ்விதச் செயலும் செய்ய வியலாதென்று அரசியல் நிபுணர்கள் கருதுகிருர்கள் ; இக் கருத்து உண்மையே. ஆனால், இந்தச் சக்தி வருவது, அசேதனமான ஆயுதப் பலத்தாலோ பொன்ஞலோ அன்று ; எதிலும் பேதியாத அறிவினலும், நல்லொழுக்கத்தாலுமே இச் சக்தி விளையும். மக்களனைவரும் தங்கள் தேவையைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்பவர்களாயும், பரஸ்பரம் உதவி செய்து கொள்பவர்களாயும் இல்லாதவரையில், மக்களினம் முழுமைக்கும் பொதுவான அரசியலமைப்பை நிர்மாணிக்க முடியாதென்பது தெளிவு.

ரு.

33. ராஜ்யம் எப்போதும் மக்கள் வாழ்வை யொட்டியது

ஓர் ஆட்சி முறையானது எவ்வளவுதான் செம்மையானதா யிருந்தபோதிலுங்கூட, நடைமுறை விவகாரத்தில் அது எத்துணைச் செம்மையாய் நடைபெறுகிற தென்பது, மக்கட் சமூகத்தின் சார்பில் யாரிடம் அந்த ஆட்சியின் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதோ அவர்களுடைய யோக்கியதையையும் நல்லொழுக்கம் அல்லது தீயொழுக்கத்தையும் சிறிதளவேனும் பொறுத்திருக்கிறது. ஓர் உத்தம ஆட்சி முறைக்குரிய முக்கியமான லக்ஷணங்களுள் ஒன்று என்னவென்ருல், சாதாரணமாய் நல்லவர்களா யுள்ளவர்களே ஆட்சி யேற்று நடத்தும்படி செய்வதற்குத் திட்டம் வகுப்பதாகும். இப்படி யிருந்தாலும், ஆட்சியை நடத்தி வருபவர்களுடைய தனிப்பட்ட தன்மைகள் காரணமாக, ஆட்சியிலும் நன்மையோ தீமையோ அதிகமாகவேனும் குறை

வாகவேனும் ஏற்பட்டே தீரும். அரசியல் அமைப்பு என்ற சாஸ்திரமானது, அல்லது சுருங்கச் சொன்ஞல் ராஜ்ய சாஸ்திரமானது, விவகார கணித சாஸ்திரம் போல, கிரமமான ஒரு சாஸ்திரமன்று; சுத்த கணித சாஸ்திரம் போன்றது அல்லவே அல்ல. சுத்த கணித சாஸ்திரம் என்பது, மனத்தால் செய்யும் ஆராய்ச்சியளவிலேயே இருக்கிறது; விவகார கணித சாஸ்திரமானது செயலில் செய்யும் ஆராய்ச்சியளவில் இருக்கிறது. ஆனல், ராஜ்ய சாஸ்திரத்தின் வியாபகம், மக்கள் வாழ்வையொட்டியது; இது வெறும் புத்தியின் ஆராய்ச்சிக்கும் பௌதிக ஆராய்ச்சிக்கும் அப்பாற்பட்டது. ஆதலால்தான், ராஜ்ய சாஸ்திரத்துக்கு மக்கள் வாழ்வை விலக்கிவிட்டு, வெறும் யந்திர ரூபம் அல்லது ஆராய்ச்சி யுருவம் மட்டும் கொடுப்பது இயலாத காரியம்.

34. இதன் பொருட்டு, சம்ரக்ஷணமானது சத்தியாக்கிரக ரூபத்தில் இருப்பது அவசியம்

ராஜ்ய சாஸ்திரத்தின் நோக்கமானது, மக்களனைவருடைய நன்மையையும், எல்லா அம்சங்களிலும், எவ்வித முரண்பாடு எழாமலும் காப்பதாகும். இந் நோக்கம் நிறைவேறுவதற்கு வேண்டிய, அம்சங்கள் பலவாகும்: (க) மிகவும் விரிவான முறையில் ஓட்டுரிமை அளிக்கப்பெற வேண்டும். (உ) பெரும்பான்மையோர் கருத்தை அனுசரித்து ஆட்சி நடத்தவேண்டும். (ந) சிறுபான்மை வகுப்பினருக்குப் பூரணப் பாது காப்பு அளித்து, இயன்றவரையில் வாழ்க்கையில் இன்பம் தர வேண்டும். (ச) தம் மதத்தைப் பிரசாரம் செய்ய சுதந்திரம் அளிக்க வேண்டும். (ரு) பக்ஷபாதமின்றி, அதிகச் செலவும் இன்றி, சுலபமாக

நியாயம் வழங்க வேண்டும். (சு) எல்லோருக்கும் கல்வி போதிக்க ஏற்பாடு பண்ண வேண்டும். (எ) நியாய தண்டனையானது குற்றவாளியின் வாழ்க்கையைத் திருத்தும் முறையில் அமைய வேண்டும். நல்ல ஆட்சியின் வெளி யங்கங்கள் இவையும் பிறவுமாகும்; இவையே மேற்கூறிய நோக்கம் நிறைவேறுவதற்குப் பொருத்தமானவை. ஆனால் அரசியலோ, மனிதரைப் பொறுத்த விஷயமானபடியால், பல தோஷங்களும் வாதங்களும் சச்சரவுகளும்உண்டாவதற்கு இடமிருக்கிறது. இவற்றைப் போக்க வேண்டுமானால், எந்தச் சமயத்தில் ஒத்துழைப்பு வேண்டும், எந்தச் சமயத்தில் ஒத்துழையாமைவேண்டும், எந்தச் சமயத்தில்எதிர்ப்பு வேண்டும் என்பதை மக்கள் நன்றாய் உணர்ந்து, சமயத்துக் கேற்றபடி ஒத்துழைக்கவும், ஒத்துழையாதிருக்கவும், எதிர்க்கவும் திறமை பெற்றிருக்க வேண்டும். இதற்கு அவசியமான அஹிம்சா நெறியும் அவர்களிடம் சுபாவமாகவே படிந்துவிட் டிருக்க வேண்டும்.

35. வாஸ்தவமான ஒத்துழைப்பும் ஒத்துழையாமைக்குத் தகுதியும்

ஒத்துழைப்பு என்பது வாழ்க்கைக்குரிய நித்தியமான ஒரு தத்துவம். ஆனால், ஒத்துழைப்பானது சுயேச்சா பூர்வமாயிருக்க வேண்டும்; பயனுடையதென்றும் அஹிம்சா பூர்வமானதென்றும் பூரணமாய் உணர்ந்து ஒத்துழைக்கவேண்டும்; இப்படி யிருந்தால்தான், அது உண்மையான ஒத்துழைப்பா யிருக்க முடியும். இப்படி யில்லாமல், வேறு வழி யில்லாமையாலோ அறியாமையாலோ ஒத்துழைப்புக் கிடைத்தால், இது நல்ல ஆட்சிக்கு எவ்விதத்திலும் பயன்படாது; ஏனெனில், வெளித்

தோற்றத்தில் அது ஒத்துழைப்பாகத் தோற்றினாலும், மெய்யாயிராமையால், நெடுநாள் நிலைத்திராது. முதலில் ஹிம்சை இதில் மறைந்திருக்கும்; பின்னர் இது வெளிப்படையான ஹிம்சையாகப் பரிணமித்துவிடும். ஆதலால், பொதுமக்களில் ஒவ்வொருவரும் பின் வருவதை நன்றாய் உணரவேண்டும்: சட்டமானது மக்களாகிய நம்மிடையுள்ள பெரும்பான்மையான அபிப்பிராயத்தால் உண்டானது; ஆதலால், நாம் இதற்குப் பதிலாக வேறொன்றைச் செய்யவும் முடியும்; இப்படிச் சட்டத்தை மாற்றாத வரையில், சட்டமும் நல்லொழுக்கத்துக்கு முரணாக இல்லாதவரையில், அச் சட்டம் தனிப்பட்ட முறையில் ஒருவருக்குப் பிடிக்காவிட்டாலுங்கூட, அவர் சுயேச்சையாகவும் சந்தோஷமாகவும் மனப் பூர்வமாகவும் அச் சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். சட்டப்படி நடப்பதில் ஒருவருக்கு எவ்வித மாறுபாடும் தோன்றாதிருக்கும் பட்சத்தில், அவர் அரசாங்கத்தோடு ஒத்துழைப்பதைப் பற்றிய பிரசினை எதுவும் எழவில்லை. அப்படியின்றி, அவருக்குச் சட்டப்படி நடப்பதில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருந்தால், அரசாங்கத்தோடு ஒத்துழைப்பதில் அவருடைய மனப்போக்கு மேற்கூறியபடி இருக்குமானால், அந்த நிலைமையில்தான் அவருடைய ஒத்துழைப்பானது அஹிம்சா பூர்வமானதென்று கூற முடியும். இவ்விதம் வழக்கமாக ஒத்துழைத்து வருபவருக்குத்தான், சந்தர்ப்பம் நேரிட்டபோது ஒத்துழையாமையை மேற்கொண்டு எதிர்க்க அல்லது சட்ட மறுப்புச் செய்ய உரிமை யுண்டு. இப்படிப்பட்ட மனிதர்களே சாத்விகமான எதிர்ப்பை மேற்கொள்ளும் ஆற்றலுள்ள

வர்கள்; இவர்களுக்கு மட்டுமே இவ்விதச் சட்ட மறுப்புச் செய்யும் கடமை யுண்டு.

இயன்றவரையில் அரசாங்கத்தோடு ஒத்துழைப்பதற்குப் பயிற்சியளிப்பது, மக்களுடையஉணர்ச்சியை விழிப்படையச் செய்வதில் அல்லது கல்வியின் அங்கங்களில் ஓரங்கமாகும்; ஒத்துழைக்கும்போது அவர்கள் மனப்பூர்வமாகவும் சுயேச்சாபூர்வமாகவும் ஒத்துழைக்கவேண்டும். அதுபோலக் கல்வியில் மற்ருேரங்கமும் இருக்கிறது; அதாவது, ஒத்துழையாமைக்கும் சட்டமறுப்புக்கும் தக்க சந்தர்ப்பம் எதுவென்பதை யறிந்து, அத்தகைய சந்தர்ப்பம் நேரும்போது சாத்துவிகமான ஒத்துழையாமையையும் சட்ட மறுப்பையும் மேற்கொள்ளும்படி கற்பிப்பதாகும்.

36. ஒத்துழையாமை, சட்ட மறுப்பு என்பவை பற்றிப் பொதுமக்களுக்கு அறிவூட்டுவதன் அவசியம்

ஒத்துழையாமையும் சட்ட மறுப்பும் ஒரே விஷயத்திலுள்ள இரண்டு நிலைகளாகும். முந்திய நிலையைவிடப் பிந்திய நிலை அதிகக் கடுமையானது. நமது விருப்பத்தை ஒத்துழையாமையின் மூலமாகவே நிறைவேற்றிக் கொள்ளமுடியுமாஞல், அப்போது சட்ட மறுப்புச் செய்யலாகாது. ஒத்துழையாமையை மேற்கொள்ளும்போது, ஒத்துழைக்கிருேம் என்று நீட்டிய கையை இழுத்துக்கொண்டு, குறித்த நிலைமையைச் சீர்படுத்துவதற்கு எதிரிக்கு ஒரு சந்தர்ப்பமளிக்கிருேம். இது போதாது என்று தெளிவாகத் தெரியும்போதுதான், அரசாங்கம் விதித்த சட்டத்தை மீற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்படி மீறும்போது, (க) மீறுபவர் விசேஷ மரியாதையுடனும் வினயத்துடனும் நடந்துகொள்ளவேண்டும்.

(உ) ஒழுங்காக், அதாவது எவ்விடத்திலும் எவ்விதக் கட்டுப்பாட்டுக்கும் பங்கமேற்படாத வகையில், நடந்துகொள்ள வேண்டும். (ந) பகிரங்கமாக, அதாவது எவ்வித ஒளிவு மறைவும் பாசாங்கும் வஞ்சகமும் இல்லாமல் நடந்துகொள்ள வேண்டும். (ச) திடமாக, அதாவது, குறித்த விவாதத்தில் தமது குறைந்தபட்சக் கோரிக்கை இன்னதென்று சொல்லி அது நிறைவேறாத வரையில் விட்டுக்கொடுக்காமலிருக்க வேண்டும். இவ்வாறு சட்டத்தை மீறியதற்காகத் தண்டனை ஏதேனும் கிடைத்தால், அத் தண்டனையை முகமலர்ச்சியுடனும் எவ்விதத் துவேஷ உணர்ச்சியில்லாமலும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்விதம் செய்வதற்கான பயிற்சி மக்களுடைய வாழ்க்கையில் பொருந்திவிட வேண்டும். இதன் பொருட்டு, இத்தகைய பயிற்சி, நாட்டின்கல்வி முறையிலும் நீதி சாஸ்திரத்திலும் நிலையான இடம் பெற வேண்டும்.

37. சமூக வாழ்க்கையில் ஒத்துழையாமைக்குரிய ஸ்தானம் நித்தியமானது

ஒரு நல்ல அரசாங்கத்தில் ஒத்துழையாமையும் சட்ட மறுப்பும் அபூர்வமாய்த்தானிருக்கும்; இவை காலத்தையும் சந்தர்ப்பத்தையும் ஒட்டியிருக்கும்; இருந்தபோதிலும், சமூக வாழ்க்கையில் இவற்றுக்கு நிலையான இடமுண்டு. ஏனெனில், இவற்றை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுவது அரசியல் உலகத்தில்மட்டுமன்று. சமூக உறவுகளிலும், குடும்ப விவகாரங்களிலும், தனிப்பட்டவர்களுக்குள் வரும் விவகாரங்களிலும், ஒத்துழையாமையையும் சட்ட மறுப்பையும் அடிக்கடி மேற்கொள்ள வேண்டியிருக்கும். அநியாயத்தைக்

கண்டும் மௌனமாகச் சகித்துக்கொள்ளுதல் ஒருவழி. மற்றொரு வழி, அதைக் கண்டு ஆவேச மடைந்து பின் விளைவுகளைக் கவனியாது (தீர ஆலோசித்துச் செய்த போதிலும் சரி,) மூர்த்தண்யமாக எதிர்த்தல். மற்றொரு வழி, நேர்மாறான இவ்விரண்டு வழிகளுக்கும் மத்தியிலுள்ள சாத்துவிகமான ஒத்துழையாமையும் சட்ட மறுப்பும் மேற்கொள்வதாகிய ராஜ மார்க்கமாகும். ஆட்சி முறையானது எத்தன்மை யுடையதாயிருந்தபோதிலும் சரி, அவசியமிருக்கும் பட்சத்தில், இந்த மார்க்கத்தைப் பின்பற்றி நடப்பதற்குத் தேவையான மனப்போக்கையும சக்தியையும் மக்கட் சமூகத்தில் வழங்கும் நீதி சாஸ்திரத்தின் மூலமாக வளர்த்து வரவேண்டும்.

இந்த நோக்கத்தோடு பொது விதிகளில் காணக் கூடிய விலக்குக்களைச் சிறு பிராயம் முதற்கொண்டே கற்பித்து வரவேண்டும். உதாரணமாக, பெற்றோர் இட்ட கட்டளையைப் பிள்ளைகள் பணிவோடு நிறைவேற்ற வேண்டுமென்று போதிக்கிறோம்; இதனோடு கூடவே, பெற்றோரிட்ட கட்டளையானது பிள்ளைகளின் விவேக புத்திக்குப் பொருத்தமற்றதென்று தோற்றினால், பிள்ளைகள் வினயத்தோடு அக் கட்டளையை மீறவும் செய்யலாமென்று பெற்றோர் பிள்ளைகளுக்குத் தாங்களே கற்பிக்கவும் வேண்டும். மற்ற ஸ்தூலமான வேறு விதிகளைப் பொறுத்த வரையிலுங்கூட, பொதுஜன அபிப்பிராயம் இவ்விதமாகவே இருக்க வேண்டும். “யமான் சேவேத ஸததம் ந நித்யம் நியமாந் புத:” என்று மனு சொல்லி யிருக்

38. ஒத்துழையாமைக்கான பயிற்சி எந்தத் திசை நோக்கிச் செல்ல வேண்டும்; விதிக்கும் கொள்கைக்குமுள்ள பாகுபாடு

கிருர். அதாவது, அறிவுடைய மக்கள், சத்தியம், அஹிம்சை முதலான நித்திய தத்துவங்களையே எப்பொழுதும் சேவிக்கிருர்கள்; ஆனல், நியமங்களாகிய விதிகளை இவ்விதமே எப்போதும் ஒருவர் பின்பற்றி ஒழுக வேண்டுமென்று எவரும் எதிர்பார்ப்பதில்லை. மனு சொல்லியதன் கருத்து என்னவென்ருல், குடும்பம், சமூகம், சமுதாயம் ஆகியவற்றைப் பொறுத்த விதிகள் என்ன தன்மை உடையவைகளாயிருந்தபோதிலும் சரி, அவை கொள்கைகளோடு முரண்படாத வரையில் அவ் விதிகளுக்கு எல்லோரும் அவசியம் கட்டுப்பட்டே நடக்க வேண்டும்; ஆனல், அவ்விதிகள் கொள்கைகளோடு எப்போது முரண்படுகின்றனவோ அப்போது, அவ் விதிகளைக் கை விட்டுவிட வேண்டும்.

ஒரு நல்ல சமூக அமைப்பில், விதிகள் நித்திய தத்துவங்களோடு எவ்விதத்திலும் முரண்படாதவாறு அமைந்திருக்கும். ஆனல், வேலை செய்கிற ஒரு யந்திரத்தின் தன்மை எப்படியிருக்கிறதென்ருல், கொஞ்சமாகவோ அதிகமாகவோ அதில் உராய்வு ஏற்படக்கூடிய நிலைமையிலிருக்கிறது. ஆகவே, நல்ல லக்ஷ்ய அரசாங்கம் ஏற்பட்ட பிறகு, அவ்வரசாங்கமே மக்களுடைய நன்மையைக் கவனித்து அவர்களுக்கு இன்பந் தரும் என்றும், மக்கள் கண்ணை மூடிக்கொண்டு உயிர் வாழலாம் அல்லது கவலையற்றுத் தூங்கலாம் என்றும் ஒருபோதும் நம்பிச் சொல்லமுடியாது. இப்படிப்பட்ட ஒரு நிலைமை பேச்சளவில் உண்மையாக வழங்க முடியுமாளுலுங்கூட, அதன்படி தனி மனிதருடைய வளர்ச்சிக்கு இடமே யிராது. ஆதலால், இப்படிப்பட்ட நிலைமை யேற்படுவது சாத்தியமில்லாமல்

இருப்பதே கடவுளின் கருணை யென்றுதான் கருத வேண்டும்.

முடிவாகச் சொல்லு மிடத்து, ஒத்துழைப்பு, ஒத்துழையாமை, சட்டமறுப்பு என்ற மூன்று முறைகளிலும் உள்ள வரையறைகளை ஞாபகத்திலிருத்தி, பூரண அஹிம்சையைப் பின்பற்றிச் சந்தர்ப்பத்துக் கேற்றபடி இவற்றுள் ஒன்றைமேற்கொள்ள மக்கள் போதுமான அளவு விழிப்போடு இருப்பதும் விழிப்போடு இருக்கும்படி செய்வதுமே ஒரு நல்ல அரசாங்கத்தின் முக்கியமான லக்ஷணமென்று கருத வேண்டும்.

39. சரித்திரத்தில் அஹிம்சையின் வெற்றி: இந்தியாவின் உதாரணம்

ஹிந்துஸ்தானத்தில் அனேக வகுப்புக்கள் இருக்கின்றன; அனேக மதங்கள் இருக்கின்றன; அனேக பாஷைகள் வழங்குகின்றன; ஏராளமான ஜனத்தொகையும் மிக்க விசாலமான நிலப்பரப்பும் இருக்கின்றன; எனவே, இந்தியாவில் எழும் பிரசினைகளைத் தீர்த்தல் என்பது ஏறக்குறைய உலக முழுவதும் எழும் பிரசினைகளைத் தீர்ப்பதோடொக்கும். ஒன்றை ஞாபகம் வைக்க வேண்டும்: அதாவது, இப்போதிருப்பவைபோலப் போக்குவரவுச் சாதனங்கள் முதலியன இல்லாத ஒரு காலத்தில், இவ்வளவு பெரிய தேசத்தை ஒரே தேசமென்று கருதினார்கள். அவ்விதம் கருதியது ஏனென்றால், அதற்கு முன் இந்நாட்டில் நடந்த அனேக விதமான சண்டைகளிலிருந்து, இச் சண்டைகளுக்குக் காரணமான பல்வேறு பிரிவுகளையும் ஒரே சமுதாயமாய் அமைக்க வேண்டும் என்ற பாடத்தை அவர்கள் கற்றுக்கொண்டிருந்தமையால்தான். இவ்வளவு பெரிய

தேசமானது அஹிம்சையைக் கடைப்பிடிக்காவிட்டால் ஒரே தேசமாக முடியாது என்ற ரகசியம் இதிலிருந்து வெளிப்படுகிறது. இதனுல்தான் ஹிந்துஸ்தானத்தின் நீதி சாஸ்திரத்தில், அரசியல், சமூக வாழ்க்கை, குடும்ப விவகாரம், பொருளாதாரம், கல்வி முதலான எல்லாத் துறைகளிலும் அஹிம்சைக்கே மற்ற யாவற்றையும்விட உயர்ந்த ஸ்தானம் அளிக்கப்பெற்று வந்திருக்கிறது.

இதன் பயனுய், இந்நாட்டின் பொதுமக்கள் ஆயுத பலத்தில் நம்பிக்கை வைப்பதை நெடுங்காலமாகவே விட்டுவிட்டார்கள்; இந்தியா முழுமையும் ஒரே தேச மென்று, ரவீந்திரநாத தாகூர் சொல்லியதுபோல, இது மனித குலமென்னும் ஒரு மகா சாகரமென்றும், இதன்பொருட்டு இந்நாட்டை எல்லோருக்கும் திறந்தே வைத்திருக்க வேண்டு மென்றும் அவர்கள் கருதினுர்கள். ஆனுல், அஹிம்சா தத்துவத்தின் நீதிபற்றிய இந்த நோக்கம் எல்லோர் மனத்திலும் இருந்த போதிலுங்கூட, அரசியல் துறையில் அஹிம்சையை விரிவாக மேற்கொண்டார்கள் என்பதற்கு உதாரணம் மிகவும் குறைவு. இந்தியாவில் வாழ்ந்த மக்களின் சரித்திரத்தை ஆராய்ந்தால், சமூக வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும், தனிப்பட்டோர் வாழ்க்கையிலும், அஹிம்சைக்கு விசேஷ இடம் கொடுத்திருந்தார்களென்று தெரியவருகிறது. உதாரணமாக, சமூக வாழ்க்கையில் அஹிம்சைக்கு விசேஷ இடமிருந்ததென்பதை, வெளி நாட்டிலிருந்து எந்த எந்த மக்களினத்தார் ஹிந்துஸ்தானத்துக்குள் வந்தார்களோ அவர்கள் யாவரும்

இந்திய சமுதாயத்தோடு ஒன்றி விட்டார்கள் என்பதால் அறிந்து கொள்ளலாம்.

இங்ஙனமானால், அரசியல் துறையில் மட்டும் ஏன் அஹிம்சையைக் கைக்கொள்ளவில்லை? தீர ஆலோசித்தால், இந்தியாவில் அரசியல் என்ற தனித்துறை முக்கியமானதென்று யாரும் கருதியதில்லை என்பதே இதற்குக் காரணம் என்பது விளங்கும். ஆனால் இன்றோ, வாழ்க்கையில் ஒவ்வோர் அம்சத்தையும் அரசியல் பாதிக்கிறது; ஆதலால் நன்மக்களாயினும், ஆளும் மக்களாயினும், சாமானிய மக்களாயினும் சரி, வேறு எவராயினும் சரி, அரசியலை உதாசீனம் செய்யவியலாது.

40. மக்கள், நன்மக்கள், ஆளும் மக்கள் ஆகிய மூன்று இறத்தாரும் ஒன்று சேர்வதற்கு அஹிம்சையே அடிப்படை

அரசியலானது இன்று வாழ்க்கையில் எங்கும் பரவியுள்ளது; மக்கள் தங்கள் சொந்தச் சக்தியை நம்பி அரசியலில் ஈடுபடுவார்களானால், அஹிம்சையைக் கடைப்பிடிக்காமல் ஈடுபட முடியாது. ஏனென்றால், ஹிம்சையானது ஆயுத பலத்தையும் சிலர் அளிக்கும் பயிற்சியையும் பொறுத்ததாதலால், இதுபொது மக்களுடைய சக்தியாகாது. அதே போல, எங்கும் வியாபகமாயுள்ள ஆட்சி முறையின் விவகாரங் நன்மக்களும் கலந்து கொண்டால், அவர்கள் அஹிம்சையைக் கடைப்பிடியாமல் இவ்விதம் கலந்து கொள்ள முடியாது; ஏனெனில், ஹிம்சை அவர்களுடைய தொழிலன்று. (அரசியல் வாழ்க்கையென்பது ஆளும் மக்களுக்கு ஒன்றும் புதிய காரியமில்லை. எனினும் அவர்கள் ஈடுபட்டிருந்த அரசியல் விவகாரங்கள், வாழ்க்கை முழுமையும் தழுவியன

வாக இதுவரையில் இல்லாமையால், இன்று அவர்களுக்கு அரசியல் வாழ்க்கை புதியதென்றே சொல்ல வேண்டியிருக்கிறது.) ஆளும் மக்கள் இவ்வித வியாபகமுடைய அரசியல் வாழ்க்கையில் கலந்துகொள்வதாயிருக்கும் பட்சத்தில், அஹிம்சையைக் கடைப்பிடிப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஏனெனில், ஹிம்சையைக் கையாள்வதற்கேற்ற சக்தியும் மனப்போக்கும் அவர்களிடத்திலே இருந்தபோதிலுங்கூட, வாழ்க்கை முழுமையும் தழுவியுள்ள அரசியல் நிர்வாகத்தில் ஹிம்சைக்கு இடமேயில்லை; ஆதலால், சாமானிய மக்கள், நன் மக்கள், ஆளும் மக்கள் ஆகியோரை ஒன்றுபடுத்துவதற்கான அரசியல் நீதிக்கு அஹிம்சையொன்றே அடிப்படையாக இருக்கமுடியும்.

41. அஹிம்சையொன்றே தீயோர் மனத்தில் அச்சம் விளைவிக்க வல்லது

அஹிம்சையாகிய ஆயுதம் மக்கள் சமூகத்தைப் பாதுகாக்கும் சக்தியுடையது. இவ்வாயுதத்தை எப்படி உபயோகிப்பதென்பதை நன்மக்கள் இயல்பாகவே அறிந்திருக்கவேண்டும்; அறிந்து, இவ்வறிவை மக்களுக்குப் புகட்டவும் வேண்டும். இதற்கு வேண்டிய சுதந்திரத்தை அரசாங்கம் அவர்களுக்கு அளிக்கவும் வேண்டும். அரசாங்கத்தினிடமிருந்து அவர்களுக்கு இச்சுதந்திரம் கிடைக்காவிட்டால், ஆளும் மக்களுக்கு இதன் மகத்துவத்தை அவர்கள் எடுத்துரைத்து, அவசியமானால் சத்தியாக்கிரகமும் செய்து இதைப் பெறவேண்டும். இதுவே எல்லா நல்ல அரசாங்கத்துக்கும் உரிய முக்கிய லக்ஷ்யமாகும்.

ஆளும்மக்களிடத்தில் ஹிம்சையைக்கடைப்பிடிப்பதற்கான சக்தியும் மனப்போக்கும் எவ்வளவு எளி

தாகக் கைகூடுமோ அவ்வளவு எளிதாக அஹிம்சை யைக் கடைப்பிடிப்பதற்கான சக்தியும் மனப்போக்கும் கைகூடமாட்டா என்று சொல்வது பொருந்தாது. ஆனால், எப்போது மக்கள் பலவீனர்களாகவும் நன் மக்கள் தீமையை அசட்டை செய்பவர்களாகவும் ஆகி யிருந்து, தீயோரை எதிர்க்கும்பொறுப்பு முழுமையும் அதிகார மக்களிடமே சேர்கிறதோ, அப்போது இவர் கள் ஹிம்சைக்கெதிராகப் பிரதிஹிம்சை செய்வதைத் தவிர வேறு வழியைக் காண்பதில்லை. வாழ்வின் எல்லா அம்சங்களையும் தழுவிய அரசியல் வாழ்க்கை யில், சாமானிய மக்களும் நன்மக்களும் ஆளும் மக் களும் ஒன்று சேர்வது தவிர்க்க முடியாததென்று மேலே நாம் கூறியிருக்கிறோம். இவ்விதம் இம்மூவரும் ஒன்று சேரும்போது, தீயோர் எவ்வளவு பலமாகத் தான் ஒன்று திரண்டிருந்த போதிலுங்கூட, அஹிம் சையைக் கடைப்பிடித்து அவர்களை எதிர்ப்பது சாத்தியமில்லாமற் போகாது. அதுமட்டுமன்று : இவ்விதம் எதிர்த்தே ஆகவேண்டும்; ஏனெனில், தீயோருடைய நடத்தைக்கு மூலகாரணமாயுள்ள தீமையைப் போக்குவதற்கும் இது ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும்.

பொதுமக்களும், நன்மக்களும், ஆளும் மக்களும் அஹிம்சையென்ற அடிப்படையின்மீது ஒன்றுசேர் வார்களேயானால், அவர்கள் தீயோருடைய கொடுமை யைப் போக்கி எப்போதும் அவர்களிடத்தில் அச்ச மும் மரியாதையும் உண்டாகும்படி செய்யமுடியும். முன்னே கூறியதுபோல, இம்மூவரும் அஹிம்சை யென்ற அடிப்படையின்மீதுதான் ஒன்றுசேர முடியு மேயன்றி, வேறெந்த விதத்திலும் ஒன்றுசேர முடி

யாது. இவ்வாறு அவர்கள் ஒன்றுகூடித் தீயோரை அடக்கி அவர்கள் மனத்தில் எப்போதும் அச்சம் நிலவுமாறு வைத்திருப்பது நல்ல அரசாங்கத்துக்குரிய பிரதான லக்ஷணங்களில் ஒன்று. இந்தத் தன்மையோடு ஒப்புநோக்கும்போது, மற்றெல்லாச் சிறப்புக்களும் இரண்டாந்தரமென்றே கருதவேண்டும். ஓர் அரசாங்கத்துக்கு மற்றெல்லா லக்ஷணங்களும் இருந்து, இந்த ஒரு லக்ஷணம் மட்டும் இராவிட்டால், அவ்வரசாங்கமானது, உயிர் மட்டுமில்லாமல் மற்றெல்லா விதத்திலும் அழகு பொருந்தியுள்ள சித்திரத்துக்குச் சமானமாகும்.

௪

42. உழைப்பின் மதிப்பு

இன்று உழைப்பை இயந்திரம் போலவும் பொறுப்பில்லாத முறையிலும் மதிப்பிடுகிறோம். ஆனால், ஒரு லக்ஷ்ய அரசாங்கத்தில் உழைப்பை மதிப்பிடும் முறையானது இப்படியிராது. நாட்டில் பிரஜைகளாயுள்ள எல்லோரையும், அவர்களுடைய உடல் வலிமை, அறிவாற்றல், செயல்திறமை முதலியன அதிகமிருந்தாலும் குறைவாக இருந்தாலும், பாதுகாத்துப் பராமரிப்பது தனது பொறுப்பென்று லக்ஷ்ய அரசாங்கம் கருதும். எல்லோரும் ஒரே விதமாக உழைக்க முடியாது. இதுவன்றி, உடலை வருத்தி உழைப்பதற்கும் புத்தியைச் செலுத்தி உழைப்பதற்கும் வேற்றுமை இருப்பது அவசியம். மேலும், உடல் உழைப்பிலுங்கூட, சாதாரண உழைப்புக்கும் கைத்திறமை கொண்டு செய்யும் உழைப்புக்கும் வேற்றுமை இருக்கிறது. ஆயினும், இத்தனை

வேற்றுமைகளிருந்த போதுங்கூட, எவரொருவர் தம் பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல், சமூகத்துக்குப் பயன்படுகிற ஒரு வேலையை உண்மையாகவும் தமக்குள்ள முழுத் திறமையோடும் செய்துவருகிருரோ, அவர் மற்றெவரையும்போல் அரசாங்கத்தின் பராமரிப்புக்கு உரிமையுடையவர் என்றே கருதவேண்டும்.

43. சேவையின் பணமதிப்பு என்ற கருத்து தப்பானது

உடலை வருத்தி உழைத்தாலும், புத்தியைச் செலுத்தி உழைத்தாலும், அவ்வுழைப்புக்குரிய பண மதிப்பு என்று பேசுவது உண்மையில் தவருகும். ஏனென்ருல், உழைப்பு அல்லது சேவையானது நீதி தர்மத்தைச் சேர்ந்தது. இதன் மதிப்பை நீதி தர்மம் பற்றிய சொற்களாலேயே கணக்கிடமுடியும். உதாரணமாக, உடல்நோயுற்ற நோயாளிக்குப் பணிவிடை செய்வோருடைய சேவையையோ, அவருக்காக இரவில் கண்விழித்துச் செய்யும் ஊழியத்தையோ, எவ்விதம் மதிப்பிட முடியும்? நியாயாதிபதியொருவர் பட்சபாதமில்லாமல் அளிக்கும் தீர்ப்பைப் பணத்தை வைத்து எப்படி மதிப்பிட முடியும்? நீரில் மூழ்கிச் சாகவிருக்கும் ஒருவனையோ, தீப்பற்றிஎரிந்துபோகவிருந்த ஒருவனையோ, வெளிப்படுத்திக் காத்தவனுடைய சேவையைக் கணக்குப்போட்டு இத்தனை ரூபாய் மதிப்பென்று சொல்ல முடியுமா? சிலவகை உழைப்பு, புத்தியால் வருவது; சிலவகை உழைப்பு உடலால் வருவது. இவ்வகைகளைச் சுட்டிக் காட்டும்பொருட்டே மேற்கூறிய உதாரணங்களைச் சொன்னேம். ஆனல், இம்மூன்றுவித உழைப்புமே விலைமதிக்க முடியாதவை. ஆதலால், சேவை அல்லது உழைப்பின் மதிப்பைப் பணத்தை வைத்துக் கணக்

இடுவதை விட்டுவிடவேண்டும்; விட்டுவிட்டு, தாம் செய்யும் வேலையில் ஒவ்வொருவரும் தம் முழுச்சக்தியையும் ஈடுபடுத்தி மனப்பூர்வமாய்ச் சமூகத்துக்குச் சேவை செய்யவேண்டும். சமூகமும் அவரைப் பராமரிப்பதாகிய தனது கடமையைக் கிரமமாகச் செய்து வரவேண்டும். இவ்வித நோக்கமே சிறந்தது.

44. குடும்ப நியாயம்: சக்திக்கேற்ற உழைப்பும், அதற்குரிய பிரதி பலனும், அனைவருக்கும் ஒத்த பாதுகாப்பும்

பராமரிப்புக்கு வேண்டியதை யளித்தல் அல்லது ஜீவன நிர்வாகம் என்ற கொள்கையை நாம் கடைப்பிடித்தால், உழைப்போரின் ஊதியத்துக்கிடையில் இன்று காணப்பெறும் பெருத்த ஏற்றத் தாழ்வுகள் தாமே மறைந்துபோகும். குடும்பத்தில் சில சமயம் சிறு பிள்ளைகளுக்குச் செய்யும் செலவானது, வேலைசெய்து சம்பாதிக்கும் பெரியவர்களுக்கு ஆகும் செலவை விடப் பல மடங்கு அதிகமாயிருக்கக் காண்கிறோம். இச்சிறுவர்கள் கொஞ்ச சேவைகூடச் செய்ததில்லை; ஆனால், இவர்கள் மூலமாய் எதிர்காலத்தில் சேவை கிடைக்கும். அப்படியே இருந்தாலுங்கூட, எதிர்காலத்தில் இவர்கள் மூலம் என்ன சேவை கிடைக்கும் என்று நாம் கணக்கிடுவதும் இல்லை, அதற்கேற்றபடி செலவு செய்வதுமில்லை. இதற்குப் பதிலாக, பெற்றோர் இப்பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பு தங்களுடையதென்று எண்ணுகிறார்கள். இதேபோல, அரசாங்கமும் தன் பிரஜையில் ஒவ்வொருவரையும் பராமரிக்கும் பொறுப்பைத் தன்னுடைய கடமையாக்க கருதவேண்டும். அப்படியே அவரும், தம்முடைய சக்தி முழுவதையும் சமூகத்தின் சேவைக்கென்றே அர்ப்பணம் செய்வது தம்முடைய கடமையென்பதை

உணரவேண்டும். ஆனால், தனிப்பட்ட ஒருவர் செய்த சேவையையும் அவருக்கு அரசாங்கம் அளித்த பாதுகாப்பையும் எடைபோட்டுப் பார்க்கலாகாது. எல்லாப் பிரஜைகளும் செய்த சேவையின் மொத்தமும், பிரஜைகளனைவருக்கும் அரசாங்கம் அளித்த மொத்தப் பாதுகாப்பும் ஒன்றையொன்று சரிக்கட்டிக்கொள்ளும்.

அன்றியும், இந்தப் பாதுகாப்புக்கும் கூலிக்கும் உள்ள வித்தியாசத்தை இங்கு உணர்தல்வேண்டும். தனிநபர் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் பாதுகாப்பு சமமாகவே இருக்கும். ஆனால், இதனால் எல்லோருக்கும் சமமான கூலியோ சம்பளமோ கிடைக்குமென்று ஆகாது ; ஏனெனில், சமமான கூலி கொடுப்பதனால் சமமான பாதுகாப்பு ஏற்பட்டுவிடாது. எல்லோருக்கும் சமமான பாதுகாப்பளிக்க வேண்டுமென்ற அரசாங்கத்தின் பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு, யாருக்கு என்ன கூலி கொடுப்பது அவசியமோ அவருக்கு அதைக் கொடுக்கவேண்டும். இதன் பயனாய், ஒருவர் அதிகத் திறமையுடையவராயிருந்தும் அவருடைய தேவைகள் குறைவாயிருக்கும் பட்சத்தில், அவருக்குக் கூலி குறைவாகவே இருக்கும் ; மற்றொருவர் அற்பத் திறமையுடையவராயிருந்தும் அதிகத் தேவையுடையவராயிருக்கும் பட்சத்தில், அவருடைய கூலி அதிகமாயிருக்கும். சேனாபதி ஒருவருக்கு ஜீரண சக்தி செம்மையாயிருந்தால் தினசரி இரண்டணா அவருக்குப் போதும் ; மற்றொரு சாதாரணச் சிப்பாய்க்கு ஜீரணசக்தி சரியாயில்லாவிட்டால், தினசரி ஒரு ரூபாய்கூட அவருக்கு வேண்டியிருக்கும்.

45. சாராம்சம்

இதுவரையில் சொல்லிவந்த கருத்துக்களைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

(க) எல்லோருக்கும் சமமான பாதுகாப்புக் கிடைக்கும்.

(உ) ஒவ்வொருவரும் அவரவர் சக்திக்குத் தக்கபடி சேவை செய்யவேண்டும்; ஆகவே, சேவையில் ஏற்றத்தாழ்வு இருக்கும்.

(ங) சமமான பாதுகாப்புக் கிடைக்குமென்ருல், சமமான கூலி கிடைக்குமென்று அர்த்தமாகாது.

(ச) ஆனல், கூலி வீதத்தில் இன்று காணப்படுகிற பெருத்த வித்தியாசம் ஒருபோதும் இருக்காது.

(ரு) கூலியிலுள்ள வித்தியாசம், கூடியவரையில் மிகவும் குறைவாயிருக்கும்; அதாவது, தேவையை அனுசரித்திருக்கும்.

(சு) கூலியிலுள்ள வித்தியாசம் சேவையிலுள்ள வித்தியாசத்தைப் பொறுத்திராது; ஆனல், தேவையிலுள்ள வித்தியாசத்தைப் பொறுத்திருக்கும்.

(எ) தனிப்பட்டோர் செய்த மொத்த சேவையும் அரசாங்கமளித்த மொத்தப் பாதுகாப்பும் ஒன்றுக்கொன்று சமமாக இருக்கும்.

இந்த ஏழு கருத்துக்களையும் ஆதாரமாய்க் கொண்ட சமூகம் எங்குமே இருந்ததில்லையென்று சொல்ல முடியாது. நம்முடைய கிராமங்களில் கிராமவாசிகள் சிலர் ஒன்றுகூடி ஏதேனும் ஒரு வேலையை ஒப்பந்தம் பேசி மேற்கொள்ளுகிருர்கள். ஆனல், அவர்கள் எல்லோரும் அதில் சமமாக உழைப்பதில்லை. இருந்தாலும், தாங்கள்

46. ஒப்பந்தக் கூலி உதாரணம்: உழைப்பிலுள்ள பேதத்துக்குச் சமாதானம்

பெறும் ஒப்பந்தக்கூலியை ஏறக்குறையச் சமமாகவே பங்கிட்டுக்கொள்ளுகிருர்கள். இந்த வேலையில் எவராவது தம் பங்கைச் செய்யாமல் தட்டிக்கழிக்க எண்ணினுல், அவருக்கு அதற்குச் சந்தர்ப்பமேகிடைக்காது; அப்படியின்றி, ஒருவர் நேர்மையாக வேலை செய்ய எண்ணியிருந்து, சற்றே பலவீனமாயிருந்தால் அவருக்குக் கொஞ்சம் சலுகையுண்டு. இவ்விதம் ஒரு தொகுதியாய்ச் சேர்ந்து உழைப்பதனுல், வேலையில் உற்சாகம் பிறக்கிறது, சகோதர பாவமும் பெருகுகிறது. இந்த விதமாக வேலை செய்யும் முறையை விரித்துச் சமூகம் முழுமைக்கும் பொருந்தும்படி செய்வது, முடியாத காரியமன்று.

உடலுழைப்பில் எத்தனையோ வகையுண்டு. மேற்கூறிய ஒப்பந்தக்கூலி முறையை வைத்து நடத்தி வரும்போது, அதுகாரணமாக எந்தக் கஷ்டங்களும் சாதாரணமாய் எழமாட்டா. ஆனுல், உடலை வருத்தியுழைப்பதையும் புத்தியைச் செலுத்தியுழைப்பதையும் ஒன்ருக மதிப்பிடும்போது, படித்த வகுப்பாரிடமிருந்து இதுபற்றி ஆட்சேபமுண்டாகும். ஆயினும், நாம் கூறும் அமைப்பின்படி உண்டாகிற சகோதரப் பான்மையினுல் கிடைக்கும் பாதுகாப்பையும் திருப்தியையும் கவனிக்கும்போது, மேற்சொன்ன ஆட்சேபம் உண்மையிலே இராது. ஆடவருக்கும் பெண்களுக்கும் ஊதியத்தில் ஏற்றத்தாழ்வு இருக்க வேண்டுமென்று சொல்வது உண்மையில் ஆதாரமற்ற பேச்சு. பெண்களின் வேலையில், ஆண்களைவிட அதிக விடாமுயற்சியும் கவனமும் கலைத்திறனும் காணப்படுகின்றன. இதற்கு மாருக, உடல் வலிமை அதிகம் தேவையாயிருக்கிற வேலையைப் பெண்கள் பொதுவாகச் செய்ய

முடியாது. ஆதலால், பொருளாதார சமத்துவத்தைப் பொறுத்தவரையில், ஆடவரையும் பெண்களையும் சேர்த்து வைப்பதில் கஷ்டமொன்றுமில்லை. ஆடவர், பெண்டிர் என்ற பேதம், பலவகை உடலுழைப்புக்களிடையே உள்ள பேதம், உடலுழைப்புக்கும் மனவுழைப்புக்குமுள்ள பேதம், பலவகை மனவுழைப்புக்களிடையே உள்ள பேதம் முதலான எல்லாப் பேதங்களும், தேசிய நோக்கோடு பார்க்கும்போது ஒரே நிலையில் தானிருக்கின்றன. ஆனால், நேர்மையான உழைப்புக்கும் நேர்மையற்ற உழைப்புக்கும் உண்மையில் பேதமிருக்கிறது. அதுபோல, கைத்திறமை பெற்றுச் செய்யும் உழைப்புக்கும் அதில்லாமல் செய்யும் உழைப்புக்கும் உள்ள பேதம் தவிர்க்க முடியாதது. நேர்மையற்றவர்களைப் பாதுகாக்க வேண்டியதில்லையென்பது தெளிவு. இருப்பினும், நேர்மையற்ற நடத்தை யுடையவர்களையும் சீர்திருத்தும் பொறுப்பு, அரசாங்கத்துக்கு நிச்சயமாய் உண்டு. ஆதலால், அரசாங்கம் இந்தப் பொறுப்பை யேற்றுக்கொள்ளும்போது, இவர்களைப் பாதுகாக்குங்கடமையும் அரசாங்கத்துக்கு ஏற்படுகிறது. மேலும், கைத்திறமைபெறாது உழைப்பவர்களைக் கைத்திறமை பெற்று உழைப்பவர்களாக ஆக்குவதும் அரசாங்கத்துக்குரிய வேலைகளில் ஒன்றாகும். தவிர, சிலவகையான உழைப்புக்கு வேண்டிய திறமை இயல்பாகவே மற்றவற்றைவிடக் குறைவு; ஆயினும், அவ்வுழைப்பு சமுதாயத்திற்கு அவசியம் வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட வேலையை, குறைவாகக் கைத்திறமை பெற்று உழைப்பவர்களிடம் ஒப்படைக்கலாம்.

இன்று மக்களிடம் திறமை, நேர்மை, உற்சாகம், பொறுப்புணர்ச்சி முதலியவற்றைப் பெருக்குவதற்கான ஓரே வழியானது, கொஞ்சமாகவோ அதிகமாகவோ ஊதியம் கொடுப்பதுதான் என்றே நாம் கருதி வருகிறோம். இந்த வழியோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சாமுதாயிகப் பொறுப்பு, அதாவது கூட்டுப்பொறுப்பு, அளிப்பதனால் மக்களிடம் இன்னும் அதிகத் தூண்டுகோல் பிறக்கும்; ஏனெனில், இப்பொறுப்பில் சமூக கௌரவமும் ஆத்ம சந்தோஷமும் பொருந்தியிருக்கின்றன. ஒரு பிள்ளை செய்யும் செயலைப் பாராட்டி அவன் தாயார் சொல்லும் ஒரு சொல்லால் அவனுக்கு உண்டாகும் உற்சாகம், நூறு பரிசு கொடுப்பதாலும் கூட உண்டாகாது. அன்றியும், இப்பரிசுகள் அவனுக்கு உற்சாகம் உண்டுபண்ணினாலும், கூடவே அவனிடத்தில்பேராசையையும் தோற்றுவிக்கின்றன. ஆதலால், சமூக கௌரவமும் அதைவிட மேலாக, ஆத்ம சந்தோஷமுமே மிக்க உற்சாகமளிக்க வல்லவை என்று கருதி, உழைப்புக்கேற்ற பிரதிபலன் தருவது என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அமைப்பை நிர்மாணிப்பதைத் தவிர, சமூக சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கு (அதாவது பொருளாதார ஏற்றத்தாழ்வைப் போக்குவதற்கு) உரிய வேறு உபாயமெதுவும் இல்லை.

47. கூட்டுப் பொறுப்புத் தான் சிறந்த தூண்டு கோலாயிருக்க முடியும்

இந்த நோக்குடன் பார்க்கும்போது, ஹிந்து சமயத்தில் வந்துள்ள தொழில் பற்றிய பரம்பரைச் சாதிப் பிரிவானது மிகவும் சிறப்புப் பொருந்திய ஒரு முறையாகும். ஆனுல், அந்தச் சமயத்தில், இதனுல் சாதி பற்றிய உயர்வு தாழ்வுகள் ஏற்பட்டுவிட்டன. இதன் பயனுய், அதற்கு ஆதியாயுள்ள தூய உருவத்தில் கறை படிந்துவிட்டது. பின்னர், செல்வம் பற்றிய போட்டியில் ஈடுபட்ட காரணத்தால், அந்தத் தூய உருவம் அடியோடு அழிந்தே போய்விட்டது. பரம்பரையான தொழில் பற்றிய சாதிப் பிரிவின் சொரூபம் பின்வருவதாகும் : தனிப்பட்டவர், சமூகம் தமக்கிட்ட வேலையைச் செய்து வரவேண்டும்; அவருடையத் தகுதியைக் கவனித்து அச்சமூகம்அவருக்கு வேலை தர வேண்டும்; அவருக்குப் பயிற்சியளித்துத் தகுதிபெறச் செய்வதில் பரம்பரையாக அவரிடம் வந்து பொருந்துகின்ற தன்மைகளையும் கவனித்துப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் ; இவ்விதமெல்லாம் தகுதிபெற்ற பிறகு, அவர் தாம் பயிற்சிபெற்று வந்துள்ள வேலையை மேற்கொண்டு செய்வதே தம் கடமை என்று உணர்தல்வேண்டும் ; அவருடைய வேலையில் பிறர் எவரும் போட்டியிடலாகாது ; எல்லோரும், சமமான பாதுகாப்பும் உழைப்புக்கேற்ற ஊதியமும் பெறவேண்டும் ; தங்களுக்கிட்ட வேலையில் ஆர்வத்தோடும் பொறுப்புணர்ச்சியோடும் ஈடுபடுபவர்கள் அனைவரையும் சமமாகவே மதிக்கவேண்டும் ; அவரவர் தம் கடன் பணி செய்து கிடப்பதே என்ற

48. இந்தநோக்குடன் பார்த்தால், ஹிந்து சமயத்திலுள்ள தொழில் பற்றிய சாதிப் பிரிவு சிறந்த முறையாகும்

பாவத்தில் வேலை செய்கையில், அவ்வேலையே கடவுள் பிரசன்ன மாவதற்கேற்ற பூசையாகும்.

ஒரு லக்ஷ்ய அரசில் இத்தகைய சமூக அமைப்பொன்று ஏற்பட்டாகவேண்டும். மேற்கூறிய சாதி முறையின் சாரமாவது : (க) உழைப்புக்கேற்ற ஊதியம் ; (உ) போட்டியின்மை ; (ங) பரம்பரையாக வரும் தன்மைகளையும் திறமைகளையும் பயன்படுத்திக் கொள்கிற ஒரு கல்வி அல்லது பயிற்சிமுறை. அர்த்த சாஸ்திரத்தில் (அதாவது பொருளாதாரத்துறையில்) முதல் இரண்டு அம்சங்களும் முக்கியமானவை ; மூன்றுவதம்சம் சமூகசாஸ்திரத்தில் முக்கியமானது. சிலர் இந்த மூன்றுவது அம்சம் விவாதத்துக்கிடமானதென்று கருதலாம். அப்படியே இது விவாதத்துக்கிடமாயிருந்தாலும், முதலிரண்டும் ஆட்சேபத்துக்கிடமில்லாதவை. சமூக அமைப்பானது அவையிரண்டையுமே உறுதியான ஆதாரமாய்க்கொண்டு நிற்கும்படி செய்யவேண்டும். தவிர, தெளிந்த ஆராய்ச்சியின் மேலும் அனுபவத்தின் மேலும், மூன்றுவது அம்சமும் விவாதத்துக்கிடமில்லாமல் உண்மையென்று காண இடமுண்டு ; அப்படி உண்மையென்று கண்டால், அப்போது, தொழில் பற்றிய சாதிப் பிரிவை மீண்டும் உயிர்ப்பிக்கலாம் ; ஆனல், அதில் உயர்வு தாழ்வு பற்றிய எந்த எண்ணமும் கொடாமல், நெகிழ்ச்சியே இல்லாத இரும்புச்சட்டம் போல் ஆகிவிடுவதற்கு எந்த இடமும் தராமல் அதை உயிர்ப்பிக்கவேண்டும்.

சேவாபாவம், தன்னம்பிக்கை, அஹிம்சாசக்தி, எல்லோருக்கும் உழைப்பிற்கேற்ற ஊதியம் ஆகிய இந்த நான்கும் அரசாங்கம் என்ற கட்டிடத்தைத் தாங்குகின்ற தூண்களாகும். ஆட்சிமுறையின் ஸ்தூல உருவமானது, குறித்த ஓரிடத்திலும் காலத்திலும் வழங்கும் நிலைமைகளையொட்டியும் சமூகத்தின் மனப்போக்கையொட்டியும் வெவ்வேறு விதமாய் இருக்கக்கூடும். பெற்ருேரும் கைக்குழந்தைகளும் அடங்கிய குடும்பம் ஒருவிதமாயிருக்கும். பெற்ருேரும் இளம்பிள்ளைகளும் பெண்களுமாயுள்ள குடும்பம் மற்ருெரு விதமாயிருக்கும். வயதான பெற்ருேரும் வயதுவந்த பெண்களும் பிள்ளைகளுமாயுள்ள குடும்பம் மற்ருெரு விதமாயிருக்கும். இதேபோல, இயற்கையான காரணங்களாலும் தற்செயலாய் ஏற்படும் சந்தர்ப்பங்களாலும் உண்டாகிற பேதங்களினுல் குடும்பங்களைப் பெரியவை அல்லது சிறியவையென்றும், கூட்டுக்குடும்பம் அல்லது பிரிவினையான குடும்பமென்றும், இன்னும் பலவிதமாகவும் குறிப்பிடலாம். இந்தக் குடும்பங்களனைத்திலும், குடும்பத்தின் மூலதத்துவம் ஒன்றேதான்; ஸ்தூலமான வெளியுருவம் மட்டுந்தான் வெவ்வேருக இருக்கிறது.

49. தத்துவமே பிரதானம், வெளி உருவமன்று

வெவ்வேறு வித வைத்திய முறைகளை அனுஷ்டிப்பவர்கள் தங்கள் தங்கள் முறையே சிறந்ததென்று உறுதியாய்ச் சொல்லுகிருர்கள். அதேபோல, வெவ்வேறு விதமான அரசியல் கொள்கைகளை அறிந்தவர்களும் ஆதரிப்பவர்களுமாய் உள்ளவர்கள், தங்கள் கொள்கை அல்லது ஆட்சிமுறைதான் எல்லாத்

தேசங்களுக்கும் எல்லாக் காலத்துக்கும் பொருந்தக் கூடியதென்று சொல்லுகிறார்கள். இது போதாது. உதாரணமாக, கணிதம் என்பது எவ்வளவு திட்டமான சாஸ்திரமாயிருந்தபோதிலும்கூட இன்று ஐன்ஸ்டீன் கூறும் சம்பந்த வாதத்தை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. அதுபோல, அரசியல் அல்லது சமூக நிர்மாண சாஸ்திரம் என்பதை ஸ்தூலமாய்க் கருதுவோமானால், அதை முடிந்த விஷயமாய்ச் சொல்ல வியலாது என்பது தெளிவு.

உண்மையில், இதுதான் அறிவியல் சாஸ்திரம் என்று திட்டமாய்க் குறிப்பிடக்கூடிய சாஸ்திரங்கள் மிகவும் குறைவு. இவைகளே மனிதரை ஆட்சி செய்கின்றன (அதாவது இவற்றின் தத்துவங்களை யனுசரித்தே மனிதன் நடக்கவேண்டியவனாகிறான்). அறிவியல் சாஸ்திரம் என்ற பெயரால் வழங்குகிற மற்றெல்லாச் சாஸ்திரங்களும், மக்களுடைய விவகாரங்களை நடத்துவதற்கு வழிகாட்டுவனவாயுள்ளன; இவை மக்களாலேயே ஏற்படுத்தப் பெற்றவை, மக்களாலேயே நடத்தப் பெறுபவை. இவ்விதமான இரு வகைச் சாஸ்திரங்களும், அதாவது, மக்களை நடத்திவரும் சாஸ்திரங்களும் மக்கள் நடத்திவரும் சாஸ்திரங்களும், வெவ்வேறான தன்மையுடையவை. இந்த வேறுபட்ட தன்மையை மறந்துவிட்டு, மக்கள் நடத்திவரும் சாஸ்திரத்துக்கு மக்களை நடத்திவரும் சாஸ்திரத்தின் உருவம்கொடுக்க முயல்வது, அறிவியல் புத்திக்கு லக்ஷணமாகாது.

ஆதலால், மேலே குறிப்பிட்ட நான்கு அம்சங்களுமே மக்களுக்குச் சுகத்தையும் இதத்தையும் தருவனவாகும்; இவற்றையே உறுதியாய்க் கடைப்பிடித்து, மற்றெல்லா விஷயங்களையும் அந்தந்தச் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு நிர்ணயித்துக்கொள்ளும் படி விட்டு விடுவது நல்லது.

# நான்காவது பிரசினை

**கேள்வி :** அஹிம்சையின் மீதெழுந்த ஆட்சிமுறை நிலைத்து நிற்க முடியுமா ?

*விடை :* ஹிம்சையை அடிப்படையாய்க் கொண்டெழுந்த ஆட்சிமுறை நிலைத்து நிற்க முடியுமென்ற கருத்தே இக்கேள்விக்கு மூலமாயிருக்கிறது. சரித்திரத்தை ஆராய்ந்தோமானால், இன்றுவரை எல்லாத் தேசங்களும் தங்கள் தங்கள் ஆட்சி நிலைபெற்றிருக்கும் பொருட்டு, ஹிம்சை முறையையே கடைப்பிடித்திருந்தனவென்பதைக் காண்போம். அப்படியிருந்தும், ஹிம்சையை ஆதாரமாய்க்கொண்ட ஆட்சிமுறை எதுவும் அழியாமல் நிலைத்திருக்கக் காணவில்லை. நம் மனத்தில் ஹிம்சையிடம் அதிகமான பற்றுதல் இருக்கிறது. ஆயிரந்தடவை ஹிம்சை பயனற்றுப்போன பிறகுங்கூட, அது பலன் தரவல்லது என்றே நாம் நம்புகிறோம். ஹிம்சையை ஆதாரமாய்க்கொண்ட எந்த அரசும் நிலைத்து நிற்கவில்லை என்று எதிர்முகமாய் நமக்குக் கிடைத்த சான்றானது, அஹிம்சை யொன்றுதான் எந்த அரசும் நிலைத்து நிற்பதற்கு ஆதாரமாயிருக்க முடியும் என்ற உறுதி நமக்கு வரச் செய்வதற்குப் போதுமானது. இதனோடுகூட, மற்றொரு நிலைமையையும் ஆலோசிக்க வேண்டும். அதாவது, ஹிம்சையையே முழுமையுமோ சிறிதளவுக்கோ

50. ஹிம்சையைக் கைக்கொண்ட முறைகள் யாவும் யுத்தத்தில் முடிகின்றன

ஆதாரமய்ாக்கொண்டு ஆட்சி செலுத்தி வந்திருக்கிற அரசாங்கங்களும், ஆட்சி செலுத்திக்கொண்டு வரும் அரசாங்கங்களும், இப்போது பொது மக்களின் ஆதரவை நாடி வருகின்றன; பொது மக்களின் ஆதர வென்ருல் அஹிம்சையின் ஆதரவென்றுதான் பொருள்படும். இதை ஆலோசிக்கும்போது, அரசாங்கம் நீடித்து நடப்பதற்கு ஆதாரமாயிருப்பது எந்த வகையிலும் அஹிம்சை யொன்றுதான் என்ற எண்ணம், ஹிம்சையில் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்திருப்பவர்களுக்குங்கூட, ஏற்படுவது நிச்சயம். ஹிம்சையின் பிரயோகம் இதுவரையில் பயன் பெற்றதில்லை என்பது தெளிவு. 'பயன்பெருமற் போனதற்குக் காரணம், ஒருகால் ஹிம்சையன்று, வேறு ஏதேனுமொன்ருயிருக்கலாம்' என்று நாம் பலகாலம் எண்ணி வந்திருக்கிறேம்; இப்படி எவ்வளவு காலந்தான் ஹிம்சை காரணமன்று என்று எண்ணி வர முடியும்? உண்மை என்னவென்ருல், ஒட்டிக்கு இரட்டி என்ற நியாயத்தை யொட்டி, ஒருவர் கையாண்ட ஹிம்சைக்குப் பதிலாக மற்றவர் அதிக ஹிம்சையைக் கையாளுகிருர்; இன்னொருவர் இதனினும் அதிகமான ஹிம்சையைக் கையாளுகிருர்; இப்படியாக ஹிம்சை வளர்ந்து வளர்ந்து, இன்றைய 'சர்வ யுத்த'* முறையில் வந்து முடிகிறது.

---

*சர்வ யுத்தம் என்பது, சண்டையில் ஈடுபட்டுள்ள நாடுகள் தங்கள் ஆயுத பலம், ஆள் பலம், தளவாட பலம் முதலியவை யனைத்தையும் பாக்கியில்லாமல் உபயோகித்துப் பார்க்கும் யுத்தம் என்று குறிப்பிட வழங்கும் ஒரு தனித்தொடர். ஆங்கிலத்தில் டோடல் வார் என்பார்கள்.

இவ்விதம் முடிந்தது ஒருவழியில் நன்மைதான். குறித்த ஒரு கொள்கை, ஒழுக்க ரீதியாக, தகுந்ததா தகாததா என்றும், விவகார ரீதியாக அது நன்மை தருவதா தீமை தருவதா என்றும் நிர்ணயிப்பதானால், அதற்கான வழி அக்கொள்கையை மக்களனைவருக்கும் பிரயோகித்துப் பலன் என்னவென்று பார்ப்பதாகும்; அதாவது, அதை எல்லோருக்கும் பிரயோகித்து அதில் என்ன மாறுதல் ஏற்படுகிறதென்று பார்ப்பதாகும். இவ்விதம் பார்க்கும்போது, எந்தக்கொள்கை, தானே மறைந்து போகுமென்று தெரிகிறதோ அல்லது சரியல்லவென்று தோற்றுகிறதோ, அல்லது தானே அழிந்து போகிறதோ, அந்தக் கொள்கையை ஒழுக்க ரீதியாகவும் விவகார ரீதியாகவும் பயனற்றதென்றே கருத வேண்டும். உதாரணமாக, பிச்சை எடுத்தல் உசிதமா அனுசிதமா என்று நிர்ணயிக்க வேண்டுமானால், எல்லோரும் பிச்சை எடுப்பதென்றால் என்ன நேரிடுமென்பதை நாம் ஆலோசிக்க வேண்டும். ஆலோசிக்கும் போது, எல்லோரும் பிச்சையெடுப்பது முடியாது என்று தெரிவதால், இக்கொள்கை தானே அழிந்து போகிறது. ஆகவே, பிச்சையெடுத்தல் உசிதமன்று. இங்ஙனம் வெறும் தத்துவ நிர்ணயத்தின் பொருட்டு மாத்திரம் ஹிம்சையை யார் பிரயோகம் செய்து பார்க்க முடியும்? ஆயினும், ஒட்டிக்கு இரட்டி என்ற நியாயத்தை யொட்டி நாள்தோறும் தங்கள் ஹிம்சை முறைகளை வளர்த்துவரும் ஐரோப்பிய

51. இதிலிருந்துகிரமமாய்ப் பிறப்பது அஹிம்சைதான்

நாடுகள், ஹிம்சை யுக்தமா யுக்தமில்லையா என்ற சோதனையைத் தங்களை யறியாமலே நீதி சாஸ்திர ரீதியாய்த் தைரியமாகச் செய்து பார்த்து வருகிறார்கள்.

தனிப்பட்டோர் சண்டையிட்டோ, அல்லது தொகுதிகளாகச் சண்டையிட்டோ, அல்லது சில்லறை யுத்தங்கள் நடத்தியோ பரீட்சை பார்க்க வேண்டிய அவசியமில்லை. இன்று சண்டையிடுவது என்று ஏற்பட்டால், அச்சண்டை 'சர்வ யுத்த'மாக நடந்தால் உண்டு, இல்லாவிட்டால் சண்டையே இல்லை. பராக்கிரமமும் சோதனைத் திறனும் மிகுந்தவர்களான ஐரோப்பிய மக்கள் இவ்விரண்டு வழிகளையும் தவிர வேறு வழி எதுவும் பாக்கி வைக்கவில்லை. எனினும், ஒரு வழி பாக்கியிருக்கிறது; இத்தகைய சர்வ யுத்தத்தில் தோற்ற ஒரு நாடானது, மற்றப் பல நாடுகளின் சகாயத்தைப் பெற்றுக்கொண்டு, தான் மட்டும் சர்வ யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதற்குப் பதிலாக, முழுக் கண்டங்களையும் அல்லது அவற்றில் அடங்கிய தேசங்களில் பலவற்றையும் ஒன்று சேர்த்துச் சர்வ யுத்தத்தில் மாட்டிவிடும். ஆனால், இந்த வழியை எவ்வளவுதான் விரித்தபோதிலுங்கூட, இதைவிட அதிகமாய்ப் பெருக்குவதற்கு இடமில்லை. மிக்க விரிவாகவும் மிக்க தீவிரமாகவும் ஹிம்சையைக் கையாண்டு பரீட்சித்துப் பார்த்த பிறகு, ஹிம்சைக்குள்ள ஒரே வழி, தன்னைத்தானே அழித்துக்கொண்டு அஹிம்சைக்கு இடங்கொடுப்பதுதான். விவேகிகளிடையில்மட்டுமன்றி, பாமர மக்களிடையிலுங்கூட,

இத்தகைய அபிப்பிராயந்தான் இன்று ஏற்பட்டிருக்கிறது; அல்லது இம்முடிவை நோக்கியே அவர்கள் அபிப்பிராயம் உருவாகி வருகிறது.

52. ஓட்டிக்கு இரட்டி என்பதற்கு அஹிம்சையில் இடமில்லை

இவ்விதமாக ஹிம்சை முறையை நமது ஆராய்ச்சியிலிருந்து விலக்கியபிறகு, எஞ்சிநிற்பது அஹிம்சை முறையொன்றே. எனவே, அஹிம்சை சம்பந்தமாக எவ்விதமான சந்தேகமும் இருப்பதற்கு இனி இடமில்லை; சிரத்தாபூர்வமாக இதைக் கடைப்பிடிப்பதொன்றுதான் இனிச் செய்யத் தகுந்தது. ஓட்டிக்கு இரட்டி என்ற நியாயம் அஹிம்சையைப் பாதிப்பதில்லை. என்னைப் பார்க்கினும் எவனொருவன் அஹிம்சையை அதிகமாய்க் கடைப்பிடிக்கிறானோ, அவன் என்னை நசுக்கிவிட விரும்புவதில்லை; எனது இதயத்தை மாற்றவே அவன் விரும்புகிறான். இப்படி விரும்புவதால் அவன் இதில் இயல்பாகவே வெற்றி பெறுகிறான்; அந்த வெற்றி எனக்கும் வெற்றியாகிறது. ஒருவன் பெற்ற வெற்றி மற்றவனுடைய தோல்வி என்பது, ஹிம்சை முறையைப் பொறுத்தவரையில் உண்மையே. ஆனால், அஹிம்சா நெறியில், ஒருவனுடைய வெற்றியானது மற்றவனுடைய வெற்றியுமாகும். மேலும், இந்த நெறியில், விவாதத்துக்கிடமான விஷயம் ஏதேனுமிருந்தால், அதைப் பட்சபாதமில்லாத பஞ்சாயத்தார் முடிவுக்கு விட்டுவிடலாம். அஹிம்சாநெறி இத்தனை எளிமை பொருந்தியது.

இவ்விதமாக, தனிப்பட்டோர் அஹிம்சையைக் கடைப்பிடித்து ஒழுகுவதைப் பார்க்கிலும் நாடு முழுவதும் அஹிம்சையைக் கடைப்பிடித்து ஒழுகுவது ஒருவகையில் மிகவும் எளிதாகும். எப்படியென்பதைப் பார்ப்போம். விவகாரத்தில் இருவரிடையே சம்பந்தம் ஏற்படுகிறதென்று வைத்துக்கொள்வோம்; அவர்களிடையே விரோத பாவமே நிலவுகிறது. இந்த நிலையில், இவ்விருவருள், அஹிம்சைவழி ஒழுகுபவர் தமது அஹிம்சை வழியைக் கடைப்பிடித்து, ஹிம்சைவழி ஒழுகும் மற்றவரை அவ்வஹிம்சைவழி பாதிக்கும்படி செய்வதற்கு முன்னமேயே, அல்லது அவர் தம் அஹிம்சை வழியைக் கடைப்பிடிக்கச் சந்தர்ப்பம் கிடைப்பதற்கு முன்னமேயே, ஹிம்சை வழி ஒழுகுபவர், தம்மை மிஞ்சிய கோபத்தின் விளைவாக, தமது தீய வேலையை முடித்தே விடலாம். தனிப்பட்டோரிடையுள்ள விவகாரத்தில் இவ்விதம் நடைபெறுதல் கூடும்; ஆனால், நாடு முழுவதும் சம்பந்தப்பட்ட விவகாரத்தில், இது எவ்விதத்திலும் நடைபெறவியலாது. இரண்டு நாடுகளிடையில் பகைமை ஏற்பட்டிருக்கும்போது, ஒரு நாட்டிலுள்ள மக்கட் சமுதாயம் முழுமைக்குமே திடீரென்று பைத்தியம் பிடித்து, அஹிம்சைவழி ஒழுகுவதாகிய மற்ற நாடு அஹிம்சையை மேற்கொள்வதற்கு முன்னமேயே அந்த நாட்டை அடியோடு அழித்துவிடுவதென்ற கற்பனையானது ஒருகாலும் நடவாத காரியம். ஆனால், தனிப்பட்டோருடைய சச்சரவிலுங்கூட, ஒருவருக்கு

53. தனிப்பட்டோர் அஹிம்சையைக் கடைப்பிடிக்க முயல்வதைவிட நாடு முழுவதும் கடைப்பிடிக்க முயல்வது ஒருவகையில் எளிதானது

இம்மாதிரியான பைத்தியம் பிடிப்பதற்குச் சந்தர்ப்பமுள்ள இடத்திலும், ஹிம்சைவழி ஒழுகுபவரை அஹிம்சைவழி ஒழுகுபவர் சிறிதேனும் வென்றுவிடுகிறார் என்பது உறுதி. நாடுகளிடை நடக்கும் யுத்தத்திலோ, இத்தகைய பைத்தியம் ஏற்பட வழியில்லை. எனவே அங்கு, அஹிம்சையை மேற்கொண்டொழுகும் நாடு ஏன் வெற்றியடைய முடியாது என்பதற்கு எந்த உத்தரமும் கூறவியலாது. இது ஒருபுறமிருக்க, ஹிம்சையில் ஒருவருடைய ஜயமென்றால் மற்றவருடைய நாசமென்று ஏற்படுவதுபோல, அஹிம்சா நெறியில் இல்லாதபடியால், அஹிம்சையை மேற்கொண்டொழுகும் நாடு வெற்றி பெறுமா என்று சந்தேகப்பட எந்தக் காரணமுமில்லை.

54. பயிற்சியும் அமைப்பும் தியாகமும், அஹிம்சைக்குங் கூட வேண்டியவை

அஹிம்சா பூர்வமான ஆட்சிமுறைக்குத் தயாரா அல்லது சர்வ யுத்தத்துக்குத் தயாரா என்ற பிரசினை இப்போது எழுகிறது. இதில் நம் உள்ளத்தைக் கவர்வது அஹிம்சா நெறியேயாகும். எனினும், இதிலுங்கூட, அஹிம்சா பூர்வமான ஆட்சிமுறைக்கு, ஒழுங்கான அமைப்பும் பயிற்சியும் பிரசாரமும் முதலான பலவும் அவசியமாயிருக்கின்றன. இதற்கான அமைப்பானது, சர்வ யுத்தத்துக்கான அமைப்புக்கு முற்றிலும் வேறாயிருக்கும்; ஆயினும், இந்த அமைப்பானது, தனி மனிதர் ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் பாதிக்கக்கூடிய அளவு விரிவான வியாபகமுடையதாயிருக்க வேண்டும். நாம் மேற்கூறிய யோசனையெல்லாம் இதையொட்டிக் கூறியதேயாகும். இதைச் செயலில் கொண்டுவருமுன்னமே,

தானாக அஹிம்சை வழியில் திரும்பியுள்ள மக்கட் சமூகமானது புத்தி பூர்வமாய் அஹிம்சையை மேற்கொள்ளும்படி பழக்க வேண்டும். பாமர மக்கள் எப்போதும் அஹிம்சை வழியிலேயே ஒழுகுவார்கள். அவர்கள் அஹிம்சையின் தத்துவத்தை யறிந்து இந்த வழியில் ஒழுகும்படி செய்யவேண்டும்; ஏனெனில், வேறு செயலில்லாத இடத்தில் அஹிம்சை வழிக்கு வருவதென்பது ஒருபோதும் பயன்படாது. இதற்குப் பதிலாக, கிரியா பூர்வமான அஹிம்சையே வேண்டும்; வாழ்க்கையின் அங்கங்கள் அனைத்தையும் சென்று தழுவுகிற அஹிம்சையே வேண்டும். அஹிம்சையானது, அனைத்தையும் தழுவிய ஒரு சமயம் அல்லது தத்துவம் (தரிசனம்) என்று சொல்லலாம். தத்துவம் என்பது ஓர் அங்கத்தைமட்டும் பொருந்தி நிற்காது; வாழ்க்கையில் சர்வாங்கத்தையும் இது பொருந்தி வருவதாகும். ஒன்றை நினைவு கூரவேண்டும்: சமூகத்தில் இன்றுள்ள செல்வ நிலையும் சமூக நிலையும் இப்படியே எந்த விதத்திலேனும இருந்து வரவேண்டுமென்று நினைத்தால், இதில் அஹிம்சைக்கு இடம் எங்கிருக்கிறது? இவ்விதமில்லாமல், நாட்டு உள் விவகாரங்களும் சர்வதேச விவகாரங்களும் அஹிம்சா தத்துவத்தையே ஆதாரமாய்க் கொண்டு நடைபெறுமானல், மேற்கூறிய நிலையை அப்படியே வைத்துவருவதென்பது சற்றும் இயலாத காரியம்.

ஹிம்சையை மேற்கொண்டுள்ள அரசைப் பாதுகாக்கும் பொருட்டு, தேசங்கள் மிக்க தியாகம் செய்யவேண்டியிருப்பதை நாம் இன்று கண்டு வருகி

றோம். ஆனால், அஹிம்சையை மேற்கொண்டுள்ள அரசைப் பாதுகாக்க வேண்டுமென்றால், எவ்விதப் பொருள் நஷ்டமோ உயிர் நஷ்டமோ ஏற்படாதபடி இப்பாதுகாப்பு நடைபெற வேண்டுமென்று சாதாரணமாய் எதிர்பார்க்கிறோம். அஹிம்சா பூர்வமான பாதுகாப்பு எல்லா விதத்திலும் சௌகரியமானது தான்; இருந்தபோதிலும், சிரமமில்லாமல் இது நிறைவேறுமென்ற உறுதியில்லை. சிறிது கற்பனா சக்திமட்டும் இருக்குமானால், ஒருவர் எத்தகைய துன்பத்தையும் சகிக்கவும், தம்முயிரைத் தியாகம் செய்யவும், எதிரிக்குச் சிறிதும் துன்பம் இழைக்காமல் சாந்தமாய்த் தம்முயிரைக் கொடுக்கவும் சித்தமாயிருக்க வேண்டும். அஹிம்சைப் போர் நடப்பது, யுத்தகளத்திலன்று; இதயமாகிய களத்தில்தான் இப்போர் நிகழ்கிறது. ஆனால், இந்தப் போரின் பொருட்டும், முன் ஆயத்தம் வேண்டும். உலகெங்கும் அஹிம்சைத் தத்துவம் பரவிய பிறகுங்கூட, இந்த முன் ஆயத்தம் அவசியமாயிருக்கும். ஒருவர் தமது வாழ்க்கைக்கு வேண்டியது அனைத்தையும் ஒரே சமயத்தில் தேடிவைத்துக்கொண்டு அதை வாழ்க்கை முழுமையும் அனுபவித்துக் கொண்டிருக்கலாம் என்ற நிலைமைக்கு, ஹிம்சையிலாகட்டும், அஹிம்சையிலாகட்டும், இடமில்லை. எதிர்க்கும் சக்தியை எப்போதும் ஜாக்கிரதையாகப் பேணி வரவேண்டும். அஹிம்சாபூர்வமான வாழ்க்கை என்பது, ஏதோ ஒரு சமயம் மட்டும் தியாகம் செய்வதன்று; நிரந்தரமாய்த் தியாகம் செய்வதென்றே இது பொருள்படும்; வெறும் தியாகம் மட்டுமன்று; தியாகத்தில் ஆனந்தத்தையும் காணவேண்டும்.

ஆனால், இவ்வளவும் எப்படிச் சாத்தியமென்று அனேகர் சந்தேகிக்கலாம். இதற்கு மக்களியல்பினும் மேம்பட்ட (அதாவது அதிமானுஷ) சக்தி வேண்டாமா என்று சிலர் கேட்கிறார்கள். அதிமானுஷத்தன்மை யுடையவர்களைப்பற்றி எண்ணத் தொடங்குவோமானால், எதிர்ப்பு என்ற பேச்சுக்கே இடமிராது. எப்போது எதிர்ப்பைப்பற்றி நாம் பேசுகிறோமோ, அப்போது சாமானிய மக்களினத்தையே எண்ணிப் பேசுகிறோம்; ஆனால் இதில், மக்களிடமுள்ள பசுத்துவத்தை, அதாவது தாழ்ந்த இயல்பை விலக்கிப் பேசுகிறோம். எல்லா மனிதரிடத்திலும் இத்தாழ்ந்த இயல்பானது எல்லாக் காலத்திலும் இல்லாமலே போய்விடுமென்று நாம் எதிர்பார்க்கவில்லை. இத்தாழ்ந்த இயல்பு மனிதரிடம் அடங்கிக்கிடக்குமென்றே நாம் எதிர்பார்க்கிறோம். ஆதலால், எந்த விதத்திலும் அஹிம்சாநெறி ஏற்படுத்த நாம் சக்தியற்றவர்களென்று எண்ணிவிடலாகாது. தவிர, அஹிம்சாநெறி எத்துணை உறுதியாக நிலைத்திருக்க வல்லதோ அத்துணை உறுதியாக வேறெந்த நெறியும் நிலைத்திருக்க வல்லதன்று.

55. அஹிம்சா நெறி யென்பது மக்க ளியல்பைக் கடந்ததன்று

# ஐந்தாவது பிரசினை

**கேள்வி :** எல்லா நாடுகளும் ஹிம்சாவாதிகளா யிருக்கும்போது, ஒரே ஒரு நாடுமட்டும் அஹிம்சாவாதி யாக இருக்க முடியுமா?

**விடை :** அஹிம்சா முறையில் சிந்திக்குமிடத்து, மனித சமூகம் என்பது ஒன்றே: சௌகரியத்துக் காகவே அதில் சமுதாயங்கள் வெவ் வேறு என்று கற்பனையாக எண்ணு கிறோம். குறித்த ஒரு சமுதாயம் நல் லறிவு பெற்றிருந்து அஹிம்சை வழி ஒழுகுமானுல், அந்தச் சமுதாயம், மற்றச் சமுதாயங்களிலிருந்து தான் வேறு என்ருே, மற்றச் சமுதாயங் களுக்குத் தான் விரோதி என்ருே, கருதாது. தனது நன்மையைப் பாதுகாப்பதில் அதற்கு எவ்வளவு ஆவல் இருக்குமோ அவ்வளவு ஆவல், மற்ற நாடுகளின் நியாயமான நன்மை களைப் பாதுகாப்பதிலும் இருக்கும். ஹிம்சாவாதிக ளான போதிலுங்கூட, நாடுகள் முழுமையும் பித்துக் கொண்டுவிடுவதில்லை. ஆனுல், ஒன்றின்மீது ஒன்றுக்குள்ள பொருமையின் விளைவாகவே நாடுகள் ஹிம்சையைக் கடைப்பிடிக்கின்றன என்று சொல்ல வேண்டும். மக்கள் ஹிம்சைக்காகவென்றே ஹிம் சையையே விரும்புவதில்லை. ஆதலால், அஹிம்சா பூர்வ மாகத் தன் விவகாரங்களை நடத்திச் செல்வதில் இச்சையுடையதாயும், இதுகாரணமாக உலகத்தி லுள்ள மற்றெல்லா நாடுகளுடனும் விரோதமில்லாத சம்பந்தத்தை வைத்துக்கொள்ள முயல்வதாயுமுள்ள

56. வேறு துணையில்லாவிடினும், அஹிம்சை வழியொழுகும் நாட்டுக்கு சர்வஜன அனுதாபம் என்ற வஜ்ரகவசம் உண்டு

ஒரு நாடு தோன்றுமானல், அந்நாடு அயல் நாடுகளின் விவேகத்தைத் தூண்டிவிட்டு, அவற்றின் மனச்சாட்சியையும் தொழிற்படச்செய்து, அந்த அளவுக்கு அவற்றை அஹிம்சா நெறியில் நடத்திச் செல்ல வல்லதா யிருக்குமென்பது உறுதி.

அஹிம்சை வழி ஒழுகும் நாடு, பலாத்காரமாகத் தன் சரக்குக்களை மற்றொரு நாட்டில் கொண்டு போய்த் திணிக்காது. அஹிம்சை வழி ஒழுகும் நாட்டில், ஒவ்வொரு கிராமமும் உழைத்து வாழ்க்கை நடத்துவதாயும் சுயம்பூரணமாயும் இருக்கும். எனவே, அங்கு மற்ற நாடுகளின் பேராசைக்குச் சந்தர்ப்பமிருக்காது. மற்றொரு நாடானது, அஹிம்சை வழியொழுகும் இந்நாடு தன் நலனுக்கு விரோதமாயிருக்கிறதென்று கருதும் பட்சத்தில், இந்த நாடானது, அந்த நாடு சரியான வழியைக் காணும்படி செய்து அதற்குப் பூரண திருப்தி உண்டாகும் முறையில் சிநேக பாவத்தோடு வேண்டிய உதவி செய்துவரும் அந்த நாட்டுக்குப் பஞ்சம் முதலான தெய்வாதீனமான துன்பங்கள் எவையேனும் நேரிட்டால், அஹிம்சை வழியொழுகும் இந்த நாடானது, பிரதிபலனை எதிர்பார்க்காமல் தன்னால் இயன்ற வரையில் தானாகவே சேவை செய்யும். விவாதத்துக்கிடமான விஷயங்களை இந்த நாடு மத்தியஸ்தரின் பஞ்சாயத்துக்கு விடத் தயாராயிருக்கும். விவாதத்துக்கு வருகிற மற்ற நாடானது, பஞ்சாயத்தார் மூலம் நியாயம் பெற்றுச் சமாதானமாய்ப் போகச் சம்மதிக்காவிட்டாலும், அல்லது அப்படியே சம்மதித்த பிறகு அவர்கள் முடிவை ஏற்காமல் அஹிம்சை வழியொழுகும் இந்த நாட்டின்மீது படையெடுத்து வந்தாலும், இந்த நாடு அஹிம்சையைக் கடைப்பிடித்தே அந்நாட்டை எதிர்க்கும். மற்ற நாடுகளுடன் இவ்வித

மனப்போக்கோடு நடந்துகொள்ளும் எந்த நாடும் தனியாக இருந்துவிட நேராது. உலகம் முழுவதிலும் அதற்கு அனுதாபம் என்னும் ஒரு வஜ்ர கவசத்தை அது நிர்மாணித்துக் கொள்ளும். இத்தகைய நாடொன்று இருக்குமென்று கற்பனை செய்வது முடியாதென்று ஏன் கருதவேண்டும்?

57. அஹிம்சை வழியொழுகும் நாடுஅச்சமற்றது

நல்லது, அயல் நாடொன்று ஆக்கிரமிக்க வேண்டுமென்றால், அவ்வாக்கிரமிப்புக்குக் காரணமென்ன?

(க) அதனிடத்தில் நிலப்பரப்புக் குறைவாயிருந்து, ஜனத்தொகை அதிகமாயிருக்கலாம்; நம்மிடத்தில் நிலப்பரப்பு அதிகமாயிருந்து ஜனத்தொகை குறைவாயிருக்கலாம்: இது காரணமா? அப்படியானால், அந்நாட்டு மக்களில் சிலர் நம் நாட்டில் வந்து தங்கி நம் சமூக அமைப்பை ஏற்றுக்கொள்ள விரும்புவார்களேயானால், அவர்களை நாம் ஏன் வரவேற்கக்கூடாது? அஹிம்சை வழியொழுகும் நாடானது, தன்னை மற்ற நாடுகளினும் வேறாய்க் கருதாது என்று முன்னமே குறிப்பிட்டோம். புராதன ஹிந்துஸ்தானத்தின் போக்கானது சாஸ்திரியமான தெளிவாய் நிலைபெற்ற அஹிம்சை வழி என்று சொல்லமுடியாது. அப்படியிருந்தும், பார்சிகளுக்கு ஆபத்து வந்த காலத்தில் ஹிந்துஸ்தானம் அவர்களுக்கு நிழல்கொடுத்து உதவவில்லையா? உதவியதால் இந்நாடு என்ன நஷ்டமடைந்துவிட்டது?

(உ) அல்லது, பஞ்சம் அல்லது அதுபோன்ற தெய்வாதீனமான வேறு துன்பம் காரணமாக, மற்றொரு நாடு ஆக்கிரமிக்குமா? இந்த நாடு அஹிம்சை வழியொழுகுவதானால், தனக்குக்

கொஞ்சமோ அதிகமோ துன்பம் நேரிட்டாலும் பொருட்படுத்தாமல், அந்த நாட்டுக்கு ஏற்பட்ட துன்பத்தைப் போக்க உதவி செய்யாமல் எவ்வாறு இருக்க முடியும்?

(ங) அல்லது பேராசை பிடித்த வேறெந்த நாடேனும் தன் சரக்குக்களை இங்குக் கொண்டுவந்து விற்பனை செய்யவேண்டி நம் நாட்டை ஆக்கிரமிக்குமா? ஒரு கையைத் தட்டினால் சத்தமுண்டாகாது. அதுபோல, இந்தப் பேராசை ஒரு கட்சிக்கு மட்டும் இருந்தாலும் போதாது. நாம் சுகவாழ்க்கையோ ஆடம்பர வாழ்க்கையோ வாழ்பவர்களாயிருந்தால், அயல்நாட்டினரின் பேராசைக்குச் சந்தர்ப்பமளித்து அதற்கு நாம் இரையாகி விடுகிறோம். மற்று அப்படி இரையாகிவிட்டால், நாம் அஹிம்சை வழியொழுகுபவர்களாக மாட்டோம்.

(ச) அல்லது நம் எல்லைக்குள்ளிருந்து நம் சமூகத்தில் சேர்ந்து வாழும் அன்னியரின் நலன்கள் காரணமாய் எழும் சிக்கல்களினால் அயல் நாட்டு ஆக்கிரமிப்பு உண்டாகுமா? உண்டாகும்போது, இந்த நாட்டின் அஹிம்சையானது பலவீனத்தால் வந்த அஹிம்சையாயிருக்கும் பட்சத்தில், இரண்டு நாடுகளும் ஏற்கத்தக்கதான ஒரு சமாதானம் ஏற்படுவது சாத்தியமில்லாது போகலாம்; ஆனால், இந்த நாட்டின் அஹிம்சை வீரத்தால் விளைந்த அஹிம்சையாயிருக்கும்பட்சத்தில், இப்படிப்பட்ட ஒரு சமாதானம் அமைக்க இந்த நாட்டுக்கு ஏன் சாத்தியமில்லாது போகவேண்டும்?

அன்றியும், ஒரு யுத்தத்தில் முடியும்படியாகவே விஷயங்கள் முற்றி வந்துவிட்டன என்று வைத்துக்

கொள்வோம். அப்படியானால், அஹிம்சை வழி யொழுகி, மரணமேவரினும்சரி, நேரக்கூடிய எல்லாக் கஷ்டங்களையும் சகிக்க வல்ல வீரர்கள் இருக்கும் போது, மற்ற நாடுகளுக்கு ஹிம்சையின்மூலம் கிடைக்கக்கூடிய பாதுகாப்பைவிடத் தனக்கு அஹிம்சை மூலம் கிடைக்கவிருக்கும் பாதுகாப்பு குறைவான தென்று ஒரு நாடு ஏன் கருதவேண்டும்?

58. உறுதியின்மையானது துர்பல அஹிம்சையின் லக்ஷணமாகும்

உண்மை என்னவென்றால், அஹிம்சையைக் கடைப்பிடிக்கும் ஒரு நாடு நிலைத்திருக்க முடியுமா என்ற சந்தேகம் கற்பனைத் திறத்தின் குறைவால் வந்தது என்பதேயாகும். வாஸ்தவத்தில், இன்று ஹிம்சா பூர்வமான யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் அஹிம்சை வழியொழுகுபவர்கள் படும் கஷ்டத்தைவிட எந்த விதத்திலும் குறைந்த கஷ்டத்தை அனுபவிப்பவர்களல்ல. ஹிம்சை என்ற பலிபீடத்தில் கொடுக்கும் பலியினால் வரும் லாபத்தை விட, அஹிம்சைக்காகச் செய்யும் தியாகத்தால் வரும் லாபமானது, இந்தத் தியாகத்துக்கு மக்கள் மட்டும் தயாராயிருக்கும் பட்சத்தில், எந்த விதத்திலும் குறைவாயிருக்குமென்று மனோதத்துவ சாஸ்திரம் ஒரு நாளும் ஒப்புக்கொள்ளாது. ஹிம்சைக்காகத்தான் பெரிய தியாகங்கள் செய்யவேண்டும், அஹிம்சைக்காகத் தியாகமே செய்யவேண்டியிராது அல்லது சொற்பத் தியாகமே செய்யவேண்டியிருக்கும் என்று எண்ணுவது, பலவீனத்தால் விளைந்த அஹிம்சை (துர்பல அஹிம்சை)யாகும். இப்படிப்பட்ட அஹிம்சை உலகில் நன்கு நிலவ முடியாதென்பது நிச்சயம்.

உள்நாட்டுக் கலகமாகிய அராஜகம், வெளி நாட்டு ஆக்கிரமிப்பு என்ற இருவித அச்சம் எப்போதும் நம்மனத்தில் இருந்துகொண்டிருக்கிறது. அஹிம்சா பூர்வமான அரசு எல்லோருக்கும் சுகம் தருவதே நோக்கமாக வுடையது; ஆதலால், இந்த அச்சத்தால் அதற்கு எவ்விதக் கலக்கமும் ஏற்படாது. எல்லோரையும் சரிவரப் பரிபாலித்து மக்களிடையில் விரோத பாவம் இல்லாத நிலையில் வைத்து வருகிற ஓர் அரசு ஏற்பட்டிருந்தும், அவ்வரசில் ஒவ்வொருவருக்கும் ஏற்படக்கூடிய துன்பத்தைப் போக்குவதற்கான வழிகள் ஏற்பட்டிருந்தும், யாரோ சிலர் கலகமும் குழப்பமும் விளைவிப்பதே நோக்கமாய்க் கொண்டிருந்தார்களானால், அவர்கள் விஷயத்தில் தக்க பாதுகாப்புச் செய்வது கஷ்டமான ஒரு காரியமன்று. அஹிம்சா பூர்வமான அரசில், பொதுஜன சேவையே நோக்கமாய்க் கொண்டு, தங்களைச் சுற்றியுள்ள மக்களுக்கு நாள்தோறும் தொண்டு செய்து, எல்லோருடனும் நெருக்கமானதொடர்புபூண்டு வாழ்கிற தொண்டர்கள் இருப்பது உறுதி. இத்தகைய தொண்டர்படை எல்லா இடங்களிலும் இருக்கும் பட்சத்தில், ஓரிடத்தில் ஏதேனுமொரு கலகம் நேரிடுமானால், இவர்கள் சிறிதளவு தியாகத்துத் தயாராயிருந்து அதன்மூலம் அக்கலகத்தை யடக்குவது மிகவும் எளிதாயிருக்கும். 'இவர்கள் நம்முடைய சேவைக்காக இருப்பவர்கள்; நமக்கு நன்ருய்ப் பரிச்சயமான நண்பர்கள், பந்துக்கள். இன்று இவர்கள், நம்மை எதிர்த்து நின்று உயிர்துறக்கத் தயாராயிருக்கிருர்

59. உள்நாட்டு அராஜகமோ அயல்நாட்டு ஆக்கிரமிப்போ ஏற்படுமென்ற அச்சம் இல்லாத அஹிம்சா நெறி

கள். நமக்கு எவ்விதத் தீமையும் நேராது இவர்கள் அபயமளிப்பார்கள். நம் துயரத்தைக்கேட்டு இவர்கள் வேண்டுவது செய்வார்கள்' என்பதைக் கலகக்காரர்கள் உணர்ந்து, எளிதில் சாந்தமடைந்து விடுவார்கள்.

'உங்கள் அஹிம்சா பூர்வமான அரசில் ராணுவமே இல்லையென்றால், சில பொலீஸ் படையேனும் இருக்குமல்லவா?' என்று உலகத்தார் கேட்கிறார்கள். இதற்கு மறுமொழி கூறுவோர், 'பொலீஸ் படை இருக்கும், ஆனால் அது வேறு விதமான படை' என்று கூறுகிறார்கள். ஆனால், இதையே வேறு பாஷையில் ஏன் சொல்லக்கூடாது? 'பொலீஸ் படை இருக்காது. விழிப்பான பொதுஜனத் தொண்டர் படைதான் இருக்கும்; தங்கள் கடமைகளைச் செவ்வையாய் உணர்ந்த பிரஜைகளும் இருப்பார்கள்' என்று சொல்வது பொருந்தும். ஆனால் இந்தக் கேள்விகளும் விடைகளும், லக்ஷ்ய அரசைப் பொறுத்தனவல்லாதலால், இவ்விதமான மறுமொழி சொல்வதில்லை. இந்தக் கேள்விகளும் விடைகளும், அஹிம்சையை நோக்கி நாம் செல்லும் பாதையில் இப்போது அடைந்துள்ள இடத்துக்கும், இன்று நிலவுகிற நிலைமையை ஆதாரமாய்க் கொண்டு நாம் கருத்தளவில் செய்யக்கூடிய கற்பனைக்கும் ஏற்றவாறு எழுந்தனவாகும்.

*60. லக்ஷ்ய அஹிம்சா நெறியில் பொலீஸார் இருக்கமாட்டார்கள், தொண்டர் படையே இருக்கும்*

## எமது வெளியீடுகள்

●

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | மலரும் மாலையும் .... | 6 | 0 | 0 |
| 2 | ஆசிய ஜோதி .... | 2 | 0 | 0 |
| 3 | கதைகள் .... | 4 | 8 | 0 |
| 4 | ஆத்ம சிந்தனை .... | 1 | 8 | 0 |
| 5 | மாணவருக்கு .... | 8 | 4 | 0 |
| 6 | பெண்களுக்கு .... | 6 | 0 | 0 |
| 7 | ஹிந்து முஸ்லிம்களுக்கு .... | 10 | 0 | 0 |
| 8 | சுதேச மன்னர்களுக்கு .... | 10 | 0 | 0 |
| 9 | நமது மொழிப் பிரசினை .... | 2 | 8 | 0 |
| 10 | சீனமக்களும் சீனமும் .... | 7 | 8 | 0 |
| 11 | பாரதியும் கவிதையும் .... | 2 | 8 | 0 |
| 12 | நாடக உலகம் .... | 3 | 12 | 0 |
| 13 | சாரதையின் தந்திரம் .... | 4 | 8 | 0 |
| 14 | மகுடபதி .... | 4 | 0 | 0 |
| 15 | கார்ல் மார்க்ஸ் .... | 3 | 0 | 0 |
| 16 | லெனின் சரித்திரக் கதைகள் .... | 3 | 12 | 0 |
| 17 | சுயராஜ்ய சாஸ்திரம் .... | 2 | 0 | 0 |
| 18 | மெய்க்காதல் .... | 3 | 12 | 0 |
| 19 | தீண்டாதான் .... | 3 | 12 | 0 |